496

Registered M—1390.

9 AUG 1919
1 AUG 1919
MADRAS.

A TAMIL LAW JOURNAL

KNOWN AS

தென் இந்திய வியவகார சிந்தாமணி

Vol-IV] April and May—1919. [Nos-4 & 5.

PUBLISHED BY

S. T. PALDANO.

N. Subramania Aiyar—(*Editor & Manager.*)

All rights reserved.

PRINTED AT
Kamalanayagi Press, Vepery.
Madras N. C.

JL
Z2m 211, N15 IV
N17. 4285
224706

பொருளடக்கம்.

பக்கம்.

I. நிலத்தீர்வை வருமான பாத்தியதையை மட்டும் கிராண்டாக அளிக்கப்பட்ட இனாம் கிராமத்தில் மேல்வாரம்தார்களில் ஒருவன் மட்டும் கிராமத்தின் குடிவார பாத்தியதை முழுவதையும் சம்பாத்தியம் செய்த காரணத்தால் எஸ்டேட்ஸ் ஆக்டு 8-வது பிரிவின் புறநடையின் கருத்தில் வந்த ஷை கிராமம் எஸ்டேட் நிலைமையை இழந்துவிட்டதாகச் சொல்லக்கூடாது. ... 49

II. தானும் கூட்டுப்பங்காளியாக இருந்த கம்பெனிக்குக் கடன் கொடுத்த வாதி ஷை கம்பெனி வியாபாரம் நின்றுபோன வெகு காலத்திற்குப்பிறகு தன் பாக்கியை வசூலிக்கும்பொருட்டு ஷை கூட்டுக்கம்பெனியின் பேரில் தாவா செய்யக் கூடாதென்றும் கம்பெனியின் பங்காளியாகக் கணக்குகளைத் தீர்த்து லாப நஷ்டப் பிரிவினைக்காக தாவா செய்யவேண்டியதுதான் சரியான முறை. ... 50

III. ஒரு பொய்யான ஸ்டேட்மெண்டு விஷயமாய் சப்மாஜிஸ்டிரேட் கொடுத்த சாங்க்ஷனை ரத்து செய்த ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டார் மே. யவர்களின் சாங்க்ஷன் ஆர்டரில் காணப்படாத வேறொரு ஸ்டேட்மெண்டு விஷயமாய் சாங்க்ஷன் அளித்தது சட்ட விரோதம். ... 51

IV. பாபர் விண்ணப்ப ஈரங்கி காலத்தில் தாவாவின் பரிகாரத்திற்குறிய காலாவதி பாயிண்டைப்பற்றி ஈரங்கி கேட்டுப் பைசல் தீர்மானங் கொடுப்பது முறைப் பிசகாகும். ... 52

V. டி-மு கோர்ட்டாருடைய அதிகார வரம்புக்கு மேலான விவாஜ்ஜிய பரிமாணத்தைவிட்டு டி-மு கோர்ட்டார் வாபிஸ் செய்த பிராதை சப்கோர்ட்டாரும் வாபிஸ் செய்துவிட்ட பிறகு டி-மு கோர்ட்டாருடைய உத்தரவின்பேரில் அப்பீல் செய்யத் தகுமென்றும் சப்கோர்ட்டில் பிராதை தாகல் செய்து பார்த்த நடவடிக்கையால் அப்பீல் பரிகார முறை கெடவில்லையென்று தீர்மானிக்கப்பட்டது, ... 52

VI. கிரி. பொ. கோ. 253-வது பிரிவின்படி தள்ளுபடியான நம்பிக்கை மோசப் பிராதின் எதிரியாகிய தர்மகர்த்தா மான நஷ்டத்திற்காக தாவா செய்யும்பொழுது தன் பேரில் யாதொரு குற்றமும் கிடையாதென்று ருஜூப்படுத்த வேண்டிய கடமையில்லை. ... 53

VII. எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்டு 165-வது பிரிவின்படி யாதொரு பாத்தியதையைப்பற்றி ரிகார்டு செய்யும்பொருட்டு சாட்சி விஜாரணை செய்து தீர்மான முடிவடையவேண்டும். 33-வது பிரிவில் கண்ட அசந்தர்ப்பத்தாலல்லாது சாட்சிகள் நேரில் ஆஜராகி வாக்கு மூலம் கொடுக்கவேண்டும். சப்ரொஜிஸ்டிரார் முன் கொடுத்த வாக்கு மூலத்தை வைத்துக்கொண்டு சாட்சியின் பிரத்தியட்ச விஜாரணையை விலக்கக்கூடாது. ... 54

VIII. கெடு வாய்தா குறிக்கப்படாத அடமான டிக்கிரி அப்பீலாகாமல் சொத்து ஏலமாகி உறுதி செய்யப்பட்டபிறகு டிக்கிரியின் முறைப் பிசகைப்பற்றி ஏலத்தை ரத்து செய்ய அசல் தாவா முறை கிடையாதென்று பிரிவீ கௌன்ஸில் மட்டும் சென்ற வியவகாரத்தில் தீர்மானிக்கப்பட்டது. ... 56

IX. எஸ்டேட்ஸ் ஆக்டு 131-வது பிரிவின்படி தீர்வை பாக்கிக்காகப் போடப்பட்ட ஏலத்தை ரத்து செய்ய 30-தினங்களுக்குள் டிப்டி கலக்டரிடம் செலுத்த வேண்டியிருக்க 30-வது தினத்தில் டிப்டி கலக்டர் ரஜாவில் போயிருந்தமையால் அவர் டியூடிக்கு வந்த பிறகு குமாஸ்தாக்கள் சொன்ன பிரகாரம் தீர்வை பாக்கியைச் செலுத்தினபின் ஏலம் ரத்தானது சட்ட விரோதமல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. ... 56

OFFICE OF THE REGISTRAR
9 AUG 1919
MADRAS.

தென் இந்திய வியவகார சிந்தாமணி.

Vol-IV.] ஏப்பிரல்—1919. [௪-ம் பிரதி.

சில தீர்ப்புச் சுருக்கங்கள்.

ஓல்ட் வீல்டு & சேஷகிரி அய்யர் - J. J.

C. R. P. 661 of 1918 - 17 மார்ச்சு 1919

ஸ்மால்காஸ் கோர்ட்டார் ஸ்தாவர சொத்துக்களை உடன் ஜப்தி செய்ய அதிகார வரம்பில்லையென்று தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது 6 மதராஸ் ஹைகோர்ட் ரிபோர்ட்டுகளின் 91-ன் தீர்மான அபிப்பிராயம் அனுஸரிக்கப்பட்டது.

—o—

ஓல்ட் வீல்டு & சேஷகிரி அய்யர் - J. J.

C M. A, 288 of 1918 - 17 மார்ச்சு 1919.

மாகாண இன்ஸால்வென்ஸி ஆக்டு 6 (4)-c-வது பிரிவின்படி ஒரு கடனாளியின் நடத்தையானது இன்ஸால்வெண்டாக நிர்ணயிக்கப்படத்தக்கதாய் அவனுடைய சொத்துக்களைக் கோர்ட்டார் வசம் ஒப்பிவிக்கவேண்டுமென்று பாக்கிதார்களில் ஒருவர் விண்ணப்பம் கொடுப்பதற்கு கடனாளியின் நடத்தை ஏற்பட்ட தினத்திலிருந்து மூன்று மாதத் தவணைக்குள் பாக்கிதாரன் அவ்வித விண்ணப்பங் கொடுக்கவேணுமென்று சட்ட முறை ஏற்பட்டிருக்க மூன்று வாய்தா முடிவாகிற தினம் ரஜா தினமாகும்பட்சத்தில் கோர்ட் திறந்த தினத்தில் விண்ணப்பங் கொடுக்கலாமென்று தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது. 42 மதராஸ் 13, 23 M. L. J. 231-இவைகள் குறித்துக் காட்டப்பட்டன.

—o—

ஜஸ்டிஸ் ஓல்ட் வீல்டு & சதாசிவய்யர்-J.

(மதுரை ஜில்லா)

L. P. A. 156 of 1917 - 5 பிப்ரவரி 1918

ராஜாசாரி vs திருமூகூர் தேவஸ்தானம் மானேஜர் வெங்கு நாயுடு.

இனாம் கிராமத்திற்குறிய மேல்வார பாத்தியதையில் ஒரு பாகத்திற்கதிபதியானவன் அந்த எஸ்டேட் முழுவதுக்குமுறிய குடிவார பாத்தியதையை சம்பாத்தியம் செய்தபோதிலும் அவன் மேல் வாரதாரின் நிலைமையை மட்டும் வகித்தவனாக மதிக்கப்படவேண்டுமென்றும் தாவா நிலத்தின் தீர்வை வருமான பாத்தியதைமட்டும் கிராண்டாக அளிக்கப்பட்ட காரணத்தால் 8வது பிரிவின் புறநடை அம்சத்தைப் பிரயோகித்து ஷை நிலம் எஸ்டேட் நிலைமையை இழந்துவிட்டதாகச் சொல்லக்கூடாதென்றும் அதாவது குடிவார பாத்தியதையை சம்பாதித்த இனாம்தார்களில் ஒரு பாகஸ்தன் செய்துகொள்ளுகிற குத்தகை ஏற்பாடின் விஷயமாய் ஸிவில் கோர்ட்டில் தாவா செய்யக்கூடாதென்றும் எஸ்டேட் நிலைமை நீங்காத காரணத்தால் ரெவினியூ கோர்ட்டில் தாவா செய்யக்கடவதென்றும் இந்தக் கேஸில் தீர்மானிக்கப்பட்டதும் தவிர மேற்கண்டவிதமான நிலங்களின் விஷயமாய் கிராம மொத்தத்தின்மேல் வார பாத்தியதையுடன் குடிவார பாத்தியதையும் ஐக்கியமாகியிருந்தால் மட்டும் அந்த கிராமம் எஸ்டேட் என்னும் நிலைமையை இழந்துவிடுமென்றும் ஸிவில் கோர்ட்டாருடைய ஆதீனத்திற்கு வந்துவிடுமென்றும் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

அதற்குக் காரணமாக இனாம் பாத்தியதையில் ஒரு பாகஸ்தன் குடிவார பாத்தியதையை கிரயத்திற்கு வாங்கிக்கொண்டதனால் அவன் மற்ற பாகஸ்தர்களுடைய தீர்வை விகிதத்தைச் செலுத்தக்கடவதென்று 8-(2-வது பிரிவில் விதிக்கப்பட்டிருக்கிறதேயொழிய அவன் குடிவார நிலமைக்கு மாறிவந்துவிடுகிறதாகச் சொல்லப்படவில்லை. அந்த பாகத்தைப்பற்றினமட்டில் மேல்வார பாத்தியதை முற்றிலும் எடுபட்டுப் போச்சுதென்றும் சொல்லப்படவில்லை. மற்றொருவனுக்குக் குத்தகைக்குவிட்டாலும் குத்தகைதாரன் குடிவார பாத்தியதையை அடைந்தவனாக மதிக்கப்படவேண்டுமென்று 8-(2)-வது பிரிவில் சொல்லியிருக்கிறது.

இரண்டாவதாக பல பாகஸ்தர்களிருக்க ஒருவன் மட்டும் குடிவார பாத்தியதையைக் கிரயம் பெற்று எஸ்டேட் முழுவதும் நிலமை மாறிப்போகும்படி செய்ய சட்ட அனுமதி கொடுக்கிறதாகச் சொல்லக்கூடாது. மற்ற பாகஸ்தர்கள் எஸ்டேட் ஆக்டின் முறையை அனுஸரித்து எளிதாக ரெவினியூ கோர்ட்டில் பரிகாரம் தேடிக்கொள்ளும் சிலாக்கியத்தை ஒரு பாகஸ்தனுடைய நடத்தையால் இழந்துபோகச் சட்டம் இடங்கொடுக்கத்தகாது ஆகவே 8-(2)-வது பிரிவின்படி மேற்கண்டவிதமான எஸ்டேட்டின் மேல்வார பாத்தியதை முழுவதுக்கும் பாத்தியஸ்தராகிய இனாம்தார்களனைவருக்கும் குடிவார பாத்தியதையும் சேர்ந்து ஐக்கியமாகிவிட்டால் மட்டும் ஷை சட்டப்பிரிவின் புறநடையில் கண்டவிதமான நிலமானது எஸ்டேட்டென்னும் நிலமையை இழந்துவிடுமென்று சொல்லத்தகும். 34. M. L. J. 419.

—o—

ஜஸ்டிஸ் அப்துல்ரஹீம் & ஓல்ட் வீல்டு-J.

(ராமனாதபுரம் ஜில்லா)

A. S 30 of 1917-23 நவம்பர் 1917.

லட்சுமண செட்டி vs நாகப்ப செட்டி.

ஒரு கம்பெனியின் எஜமானன் மற்றொரு கம்பெனிக்குக் கூட்டுப்பங்காளியாக நின்று தன்னுடைய கம்பெனியிலிருந்து கூட்டுக் கம்பெனிக்குக் கொடுத்துவந்த கடன் பாக்கியை வசூலிக்கும்பொருட்டு ஷை கூட்டுக்கம்பெனி வியாபாரம் நின்றுபோன வெகுகாலத்திற்குப் பின் செய்த தாவா செல்லத்தகாதென்றும் அதாவது எதிரியாகிய கூட்டுக்கம்பெனியின் பேரில் தாவாசெய்கிற வாதி பிரதிவாதிகளில் ஒருவனாகவே நிற்கத்தக்கவன் என்றும் அது ஒழுங்கீன முறையென்றும் கூட்டுக்கம்பெனியைக் கணக்குப் பார்த்துத் தன்னுடைய லாப நஷ்ட விகிதத்தை நிர்ணயிக்கும்படி ஒரு பங்காளி ஸ்தானத்தில் தாவா செய்திருக்கவேண்டுமேயொழிய கடன் கொடுத்த பேர் வழி கடன் வாங்கின பேர்வழிகளில் ஒருவனாக ஏற்பட்டு தன் பேரில் தானே தாவா செய்கிறது பிசகென்று 26 பம்பாய் 739, 1 கல்கத்தா 545 இவைகளை அனுஸரித்து அபிப்பிராயம் கொடுக்கப்பட்டது.

வாதி லட்சுமண செட்டிக்கு ரங்கூனில் R.M. S.L. என்ற கடை இருந்தது. வாதியும் பிரதிவாதிகளின் தகப்பனும் பர்மாவிலுள்ள கூமங்கை, கைபாடோ என்ற இடங்களில் கூட்டுப்பங்காளிகளாய் வியாபாரம் செய்துவந்தார்கள். வாதியின் கம்பெனியிலிருந்து சுமார் ரூ. 25.000 R M. S. L.P.P. என்றும் R. M S. L. S. என்றும் விலாஸம்பூண்ட கூட்டுப்பங்கு வியாபாரத்திற்காகக் கடனாகக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த வியாபாரத்தில் வாதிக்கு முக்கால் பங்கென்றே ஏற்பட்டிருந்தமையால் அந்த வியாபாரம் முறிந்துபோன பிறகு வாதி மேற்கூறிய பாக்கி ரூ. 25,000-த்தில் தான் முக்கால் பங்குக்குப் பிணைப்பட்டவனாதலால் மிகுதியான கால்பங்குத் தொகையைக் கூட்டுப்பங்காளியின் மக்களிடத்திலிருந்து வசூலிக்கும்பொருட்டு சிவகங்கை சப்கோர்ட்டில் அசல் தாவா செய்தார். கூட்டுப்பங்கு வியாபாரத்தில் மேற்கூறிய கடன் தொகையைத் தவிர்த்து வேறுவிதமான தொல்லை கிடையாது. ஆனால் வரவேண்டிய நிலுவை பாக்கி உண்டு. அவை வசூலானால் அதில் முக்கால் பங்கு வாதிக்கும் கிடைக்கவேண்டியதுதான். அவைகளை வசூலித்தபின் அல்லது அவைகளையும் கணக்கிட்டுக் கவனித்தால் பிரதிவாதிகளால் வாதிக்குச் செலுத்தவேண்டிய பாக்கி மிக்க குறைவாகுமென்று எதிரான்ஸரில் சொல்லப்படுகிறது. ஒரு பாகஸ்தன் தன்னுடைய சொந்த பாக்கிக்காக மற்றொரு பாகஸ்தன்மீது தாவா

செய்யலாமா வென்ற பாயிண்டு 32 மதராஸ் 76-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சில பாண்டுகளையும் தஸ்தவேஜுகளையும் ஒப்பிவைக்கிறதாக ஒப்புக்கொண்ட ஒரு பங்காளியின்மீது அதன்படி நடந்துகொள்ளாததற்காக மற்றொரு பாகஸ்தன் செய்த தாவா செல்லத்தகுமென்று அதில் ஏற்பட்டது. அதில் கணக்குப் பார்க்கும் அம்சம் கிடையாது. 34 மதராஸ் 112, 28 மதராஸ் 344 - இவைகளின் சந்தர்ப்பங்கள் வேறாகும். தாவா கேஸுக்கு அவை அதாரிடிகளல்ல. ஸி. பி. ஸி. ஆர்டர் 30 ரூல் 9-ன் கீழாக இரண்டு கம்பெனிகளுக்குப் பொதுவான பாகஸ்தர்கள் இருக்கும்பட்சத்தில் அவ்விரு கம்பெனிகளுக்குள் நடக்கும் தாவாக்களுக்காக மட்டும் அனுஷ்டிக்கப்படவேண்டிய சில நிறைவேற்றும் நடவடிக்கை முறைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன ஆனால் அவ்வித கம்பெனிகளுக்குள் எவ்விதமான தாவாக்கள் ஏற்படுமென்றாவது எப்பொழுது எவ்வித சந்தர்ப்பங்களில் வியவகாரங்கள் உண்டாகலாமென்றும் ஸி. பி. ஸி கோர்ட்டில் விதிக்கப்படத் தகாது. ஆகையால் இவ்விதமான தாவாக்களும் ஏற்படலாமென்ற வாதியின் கக்ஷி ஒப்புக்கொள்ளத் தகாது.

தவிர கூட்டுவியாபாரத்தில் ஏற்பட்ட நிலுவை பாக்கியின்பேரில் தொடர்ந்து வாதி தாவா செய்திருக்கவேண்டுமென்று சப்கோர்ட்டார் சொல்லுகிற நியாயம் யூகமாய்த்தோன்றவில்லை. கணக்குகளைப்பார்க்க தாவா செய்திருக்கவேண்டுமென்ற காரணத்தைச் சொல்லி வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்திருக்கவேண்டும். வாதியின் தாவாவை சப்கோர்ட்டார் தள்ளுபடி செய்த உத்தரவு அப்பீல் காயமாச்சுது. 34 M.L J, 408.

—o—

ஜஸ்டிஸ் அப்துல் ரஹீம் & நேபியர் - J

(கோதாவரி ஜில்லா)

Crl. M. P. 466 of 1917 - 14 பிப்ரவரி 1918.

கொம்பெல்ல அனந்தராமய்யா vs சீகட்லதுக்கடு.

சப்மாஜிஸ்டிரேட் யாதொரு சாட்சியின் ஸ்டேட்மெண்டு விஷயமாய் பொய்யென்று தீர்மானித்து சாங்கிஷனுக்கு உத்தரவளித்ததை ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டார் அப்பீலில் ரத்து செய்து விட்டு சப்மாஜிஸ்டிரேட்டின் ஆர்டரில் காணப்படாத வேறொரு ஸ்டேட்மெண்டு விஷயமாய் சாங்கிஷன் கொடுத்தது சட்ட விரோதமென்று தீர்மானிக்கப்பட்டது.

மேற்கூறிய தீர்மானத்திற்குக் காரணச்சுருக்கமாவது:—ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டார் விசாரணை நடத்தினகாலத்தில் சொல்லப்பட்ட ஸ்டேட்மெண்டல்லாத சாட்சியத்தைப்பற்றி சாங்கிஷன் கொடுக்கவேணுமானால் அசல் கோர்ட்டாருக்கு நேரான மேலதிகாரியாக இருக்கவேண்டும். சப்மாஜிஸ்டிரேட்டாருக்கு மேலதிகாரி டிஸ்டிரிக்டு மாஜிஸ்டிரேட்டாரும் அவர்களுடைய அனுமதியின் முறையை அனுஸரித்து ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டார் அப்பீலை எடுத்துக்கொண்டு தீர்மான முடிவடைகிறார்கள். அதனால் ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டார் மேலதிகாரியல்ல. 26 மதராஸ் 656-ஐப் பார்க்கவும்.

சாங்கிஷன் கொடுக்கப்பட்ட ஸ்டேட்மெண்டு அப்பீல் வாங்கி காலத்தில் ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டாருடைய யோஜனைக்கு வந்த காரணத்தால் அவருடைய முன்னிலையில் யாதொரு ரிகார்டு பொய் என்று ரிகார்டானதாகவும் ஆகவே அச்சமயத்திலும் குற்றம் செய்யப்பட்டதால் அவரும் சாங்கிஷன் கொடுக்கலாம் என்ற ஆர்கியுமெண்டு ஒப்புக்கொள்ளத் தகாது. முதல் கோர்ட்டில் ஸ்டேட்மெண்டு கொடுக்கப்பட்ட பொழுதுதான் குற்றம் செய்ததாக ஏற்படும். அந்த ஸ்டேட்மெண்டு உபயோகிக்கப்படும். ஒவ்வொரு சமயத்திலும் குற்றம் செய்யப்பட்டதாக மதிக்கப்படலாகாது. 35 அலகபாத் 90-ன் தீர்மானத்தை அனுஸரிக்கத்தகாது. ஆகவே ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டாருடைய சாங்கிஷன் உத்தரவைக் காயப்படுத்தின ஸெஷன் ஜட்ஜியவர்களுடைய உத்தரவு தள்ளுபடியாச்சுது. 34. M. L. J. 404.

—o—

ஜஸ்டிஸ் பேக்வெல் & குமாரசாமி சாஸ்திரிகள்-J.

(தஞ்சாவூர் ஜில்லா)

L. P. A. 74 of 1917-27 நவம்பர் 1917.

கோவிந்தஸாமி பிள்ளை

vs

கும்பகோணம் முனிஸிபாலிடி.

பாபரில் தாவா செய்யக்கோறும் அனுமதி விண்ணப்ப ஈரங்கி காலத்தில் தாவாவின் பரிகாரத்திற்குறிய காலாவதி பாயிண்டைப்பற்றி விஜாரணை செய்து தீர்மான முடிவு செய்யக் கூடாதென்று சொல்லப்பட்டது.

கும்பகோணம் டி-மு கோர்ட்டார் மனுதாரின் பரிகார மூறைக்குக் காலாவதி தோஷம் சொல்லி மனுவைத் தள்ளுபடி செய்த உத்தரவை ஹானரபில் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்களும் அங்கீகரித்தார்கள். ஆனால் இந்த லட்டர்ஸ்பேடெண்டு அப்பீலில் ஹைகோர்ட்டார் மாறுன அபிப்பிராயங்கொடுத்தார்கள். எனெனில் ஆர்டர் 33 ரூல் 5 (d)-யின்படி மனுதாருக்கு வியாஜ்ஜியம் நடத்தத் தகுதியான காரணங்களிருக்கின்றவாவென்று மட்டும் கோர்ட்டார் கவனிக்கவேண்டும். மனுவின் வசனங்களிலே அவ்விஷயம் துலங்கும். வியாஜ்ஜியமூலம் மனு செய்து கொள்ளும் காலத்தில் இருக்கிறதாவென்று கண்டரிய காலாவதி பாயிண்டையும் யோஜிக்கலாமென்று சில தீர்மானங்களிருக்கின்றன. ஆனால் அதற்காக பூரணமான விஜாரணையும் ஈரங்கியும் நடத்தலாமென்று மேற்கூறிய அதாரிடிகளில் சொல்லப்படவில்லை. காலாவதி பாயிண்டைக் கவனித்து மனுவில் தள்ளுபடியால் மனுதாரனுக்கு அப்பீலில் பரிகார முறை கிடையாமற் போகும் இந்தக்கேஸில் காலாவதி தோஷமுண்டாவென்று இப்பொழுது கவனிக்கத் தேவையில்லை. அது ஒரு இஷ்யூபாயிண்டாக விஜாரிக்கப்பட்டுத் தீர்மானிக்கப்படவேண்டும். இருதரத்தாருக்கும் எற்பட்ட உடன்படிக்கையின் ஷரத்துக்களை வியாச்சியானப்படுத்திக் காலாவதி பாயிண்டை நிர்ணயிக்கவேண்டுமாதலால் அதற்காக சாட்சி விஜாரணை நடக்கவேண்டும். அப்படியிருக்க அந்த பாயிண்டைப்பற்றி இந்த சந்தர்ப்பத்தில் கவனிக்கத்தகாது. பாபர் மனுவைத் திரும்பவும் பயிலுக்கு எடுத்துக் கொண்டு சட்டப்படி நடத்தவேணுமாய் டி-மு கோர்ட்டாருக்கு உத்தரவளிக்கப்பட்டது. செலவுகள் முடிவான தீர்மானத்தைப் பொருத்ததாகுமென்று சொல்லப்பட்டது. 34. M. L. J. 399.

—o—

ஜஸ்டிஸ் ஒல்ட் வில்டு & சதாசிவய்யர் - J.

(வடமலையாளம் ஜில்லா)

C. R. P. 519 of 1917 - 1 பிப்ரவரி 1918.

நாராயணன் நாயர் vs செரியகத்திரிகுட்டி.

அதிகார வரம்புக்கு மேற்பட்ட வியாஜ்ஜிய பரிமாணம் குறிக்கப்பட்ட பிராதை டி-மு கோர்ட்டார் வாபிஸ் செய்த பின் சப்கோர்ட்டாரும் தமக்கு அதிகார வரம்பில்லையென்று வாபிஸ் செய்துவிடவே வாதி டி-மு கோர்ட்டாருடைய உத்தரவின்பேரில் அப்பீல் செய்யும் பரிகாரம் சப்கோர்ட்டில் தாகல் செய்து பார்த்த நடவடிக்கையால் இழந்துபோகப்படவில்லையென்று தீர்மானிக்கப்பட்டது.

5 கல்கத்தா லா ஜர்னல் 580-ல் மேற்கூறிய விதமான அபிப்பிராயம் கொடுக்கப்பட்டிருக்கிறது அதாவது சப்கோர்ட்டில் தாகல் செய்து பார்த்தகாரணத்தால் அப்பீல் முறை கெட்டுப்போகாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. மேற்கூறிய தீர்மானம் 7 C. L. J. 547, 556-ல் சந்தேகிக்கப்பட்டிருக்கிறது. மதராஸ் ஹைகோர்ட்டிலேயே C M A. 402 of 1914-ல் அங்கீகரிக்கத் தகாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஸி. பி ஸி. ஆர்டர் 41, 43 இவைகளின் கருத்தில் மேற்கூறிய முறைக்கு பாதகம் எற்படும் நியாயம் துலங்கவில்லை.

இந்தப் பிராதின் தன்மையைக் கவனிக்குமிடத்து டி-மு கோர்ட்டாருடைய அதிகார வரம்பிலடங்கியதாகவே சொல்லவேண்டும். நில விக்கிறயம் பெறத் தக்க நிலாக்கியத்தை ஸ்தாபிக்கும்பொருட்டு செய்த இந்த தாவாவுக்கு மவு

2247706

ண்டு தொகை தீர்வையின் 5-மடங்குப் பரிமாணத்தின்பேரில் ஏற்படவேண்டியதுபோலவே அதிகார வரம்புக்காகவும் வியாஜ்ஜியப் பரிமாணம் காட்டப்படவேண்டுமென்று சொல்லத் தகும். அப்படியானால் இந்த தாவா டி-மு கோர்ட்டாருடைய அதிகார வரம்புக்குள்ளடங்கியதாகும். நிலத்தின் மொத்தக் கிரயத்தைக் கவனித்துத் தம்முடைய அதிகார வரம்புக்குமேலிருப்பதாக டி-மு கோர்ட்டார் வாபிஸ் செய்திருக்கிறார்கள். ஷெ நிலத்தின் பேரில் ஏற்பட்டிருக்கும் வில்லங்கத்தொகையைக் கழித்து நிகரமான மதிப்புத்தொகையைக் கவனித்து வியாஜ்ஜியப் பரிமாணம் ஏற்படவேண்டுமென்று அபிப்பிராயங்கொண்டு ஜில்லா கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

தீர்வையின் 5-மடங்கை வியாஜ்ஜியப் பரிமாணமாய்க்கவனித்து அதிகாரவரம்பை நிதானிக்கவேண்டுமாதலால் இந்த தாவா டி-மு கோர்ட்டில் தாகலாகவேண்டியதென்ற ஜில்லா கோர்ட்டாரின் முடிவான உத்தரவானது சரியானதாகும். ஆகவே ஹைகோர்ட்டில் தாகலான ரிவிஷன் விண்ணப்பம் தள்ளுபடியாச்சுது. பிராதை டி-மு கோர்ட்டுக் கனுப்புவதற்கு ஜில்லா கோர்ட்டாருடைய கணிப்பு முறை ஒருவிதமாகவும் ஹைகோர்ட்டருடைய காரணம் ஒருவிதமாகவும் ஏற்பட்டாலும் முடிவான அபிப்பிராயம் ஒன்றே. 34 M. L J. 397.

—o—

சீவ்ஜஸ்டிஸ் & ஸ்பென்ஸர்-J.

(மங்களூர் ஜில்லா)

A. S. 393 of 1915-17 ஜனவரி 1918.

கோபால கிருஷ்ண குடுவா

vs

நாராயணசம்தி

கிரிமினல் கோர்ட்டில் தர்மகர்த்தாவின் மீது நம்பிக்கை துரோகத்திற்காகக் கொண்டுவரப்பட்டபிராதுதப்பென்று Cr.P.C. 253-வது பிரிவின்படி தள்ளுபடியானதுமான நஷ்டத்திற்காக தாவா செய்த தர்மகர்த்தா ருஜுப்படுத்தவேண்டிய நான்கு முக்கியமான அம்சங்களைப்பற்றிச் சொல்லப்பட்ட இந்தத்தீர்மானத்தில் வாதி தன் பேரில்யாதொருகுற்றமும் கிடையாதென்று நஷ்டதாவா நடவடிக்கையில் ருஜுப்படுத்தவேண்டிய கடமையில்லையென்று அபிப்பிராயங்கொடுக்கப்பட்டது.

"வாதி ருஜுப்படுத்தவேண்டிய நான்கு அம்சங்களாவன :— (1) தான் பிராஸிக்யூஷன் செய்யப்பட்டதாகவும் (2) நியாயமும் ஸம்பாவிதமுமானகாரணங்களில்லாமல் எதிரிதன்மீது கிரிமினல் பிராது கொடுத்தாரென்றும் (3)கிரிமினல் பிராது தனக்கு அனுகூலமாய் முடிந்ததென்றும் (4)மாச்சிரியமான கருத்துடன்எதிரி தப்புப் பிராது கொடுத்ததாகவும் நஷ்டபிராது கொண்டுவரும் வாதி ருஜுப்படுத்தவேண்டிய கடமையாகும். தான் குற்றம் செய்தவரல்லவென்று ருஜுப்படுத்தவேண்டிய கடமையில்லை. விடுதலை உத்தரவு அல்லது டிஸ்சார்ஜ் ஆர்டர் ஆனதாலேயே வாதி குற்ற மற்றவராக மதிக்கப்படவேண்டுமென்று (1883) 11 Q. B. D. 440-ன் கருத்தாகச் சொல்லத்தகும். சரியான காரணமில்லாமல்பிராது கொடுக்கப்பட்டதென்றுநிர்ணயிப்பதற்கு வாதி குற்றமற்றவரென்ற ருஜுபாகம் போதுமான அம்சமாகாது: ஒருவன் நியாயமான காரணத்தைக்கொண்டே பிராது கொடுத்திருக்கலாம். குற்றவாளியல்லவென்ற தீர்மானமும் நியாயமாக ஏற்படலாம். தவிர குற்றப் பத்திரிகை எழுதி வாசித்ததில் பிசகேற்பட்ட காரணத்தால் ஒருவன் விடுதலையானாலும் கூட அவன் குற்றமற்றவனாக மதிக்கப்படுகிறானென்றும் நஷ்ட தாவா செய்யும் யோக்கியதையை அடைகிறானென்றும் சில இங்கிலீஷ் சட்ட நூல் வியாக்கியானிகள் விளம்பியிருக்கிறார்கள். வாதி டிஸ்சார்ஜ் ஆனதால் மட்டும் குற்றவாளியல்லவென்று ரூபிக்கபபட்டதாக மதிக்கப்படாதென்றும் ஸிவில் கோர்ட்டில் வாதி தன் குற்றமற்ற தன்மையை ரூபிக்கவேண்டுமென்றும் சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டது பிசகு." வாதிக்குக் கிரிமினல் கேஸை நடத்தினதால் ஏற்பட்ட வக்கீல் பீஸ் செலவுகளையும் மற்றவிதமான கஷ்ட நஷ்டங்களையும் கவனித்து ரூ. 2000-நஷ்டப்பரிகாரமளிக்கப்பட்டது. 34. M. L. J. 517.

—o—

ஜஸ்டிஸ் எய்லிங் & சேஷகிரி அய்யர்-J.

(திருச்சினுப்பள்ளி ஜில்லா)

A. S. 149 of 1917 - 20 பிப்ரவரி 1918.

பொன்னுசாமி பிள்ளை vs சிங்காரம் பிள்ளை.

எவிடென்ஸ் ஆக்டு 165-வது பிரிவின்படி ஏற்றுக்கொள்ளத்தக்க ருஜுவாகியிருக்கிற சாட்சியம்சத்தைக் கொண்டுதான் கோர்ட்டார் யாதொரு தீர்மான முடிவடையவேண்டுமாதலால் 33-வது பிரிவின்படி சில சாட்சிகளை அதிக காலதாமதம் வீண் செலவு ஆகிய இரண்டுவிதமான அசந்தர்ப்பங்களால் நேரில் வரவழைக்கக் கூடாத காரணத்தாலல்லாது மற்றப்படி மேற்படி சாட்சிகள் சப் ரெஜிஸ்டிரார்முன் கொடுத்த வாக்குமூலங்களை இருதரத்தாருடைய சம்மதத்தின்பேரிலும்கூட கோர்ட்டார் ஏற்றுக்கொண்டு யாதொரு தீர்மானங் கொடுக்கலாகாதென்று அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது. 38 மதராஸ் 160-ன் தீர்மானம் அனுஸரிக்கத் தகாதென்று சொல்லப்பட்டது.

உயில் சாஸனத்தை சப்ரெஜிஸ்டிராரும் பெரிய ரெஜிஸ்டிராரும் ரெஜிஸ்டர் செய்ய மறுத்துவிட்டார்கள். அது விஷயமாய் சப்ரெஜிஸ்டிரார் முன் சாட்சி விஜாரணை நடந்தது. கட்டாய ரெஜிஸ்டருக்காக ஸிவில் தாவா செய்த காலத்தில் இருதரத்தாருடைய சம்மதத்தையும் பாராட்டி நூதனமாய் சாட்சி விஜாரணை செய்யாமல் சப் ஜட்ஜியவர்கள் சப்ரெஜிஸ்டிரார் முன்னிலையில் கொடுக்கப்பட்ட வாக்குமூலங்களை ருஜுபாகத்தில் ஏற்றுக்கொண்டுஆர்கியுமெண்டு கேட்டுத் தீர்மான முடிவு பெற்றார்கள். அப்பீலில் அவ்விதமான சாட்சியம் ஏற்றுக்கொள்ளத் தகாதென்றும் சப்ரெஜிஸ்டிரார் முன் சாட்சி சொன்ன பேர் வழிகள் தாமதமின்றியும் வீண் செலவில்லாமலும்நேரில் ஆஜராகமுடியாதென்று தோன்றினால் மட்டும் முந்திய வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளலாமென்றும் அது விஷயமாய் சப்கோர்ட்டார் யோஜனைசெய்யவேயில்லையென்றும் சொல்லப்பட்ட பிரதம ஆட்சேபணையை ஹைகோர்ட்டார் ஒப்புக்கொண்டு கேஸை மறு விஜாரணைக்கு ரிமாண்டு செய்துவிட்டார்கள். பார்ட்டிகள் சம்மதித்த முறைப்படி சப் கோர்ட் தீர்மானம் ஏற்பட்டதால் அப்பீல் செலவை அப்பீல் வாதி தானே வகித்துக்கொள்ள வேண்டுமென்றும் மற்ற செலவுகள் முடிவான பைசலைப் பொருத்ததாகுமென்றும் உத்தரவளிக்கப் பட்டது. 34. M.L.J. 526.

—o—

பிரிவி கௌன்ஸில் கேஸ்.

(வட ஆற்காடு ஜில்லா)

12 - 13 நவம்பர் 1917.

மதராஸ் ஹைகோர்ட் தீர்ப்பின் பேரில்

பிரிவி கௌன்ஸில் அப்பீல் தீர்மானம்

கணபதி முதலியார் vs கிருஷ்ணமாசாரி

அடமான வியாஜ்ஜியத்தில் அளிக்கப்பட்ட டிக்கிரியில் ப்ராபர்டி ஆக்டின் முறைப்படி தொகையைச் செலுத்துவதற்கு யாதொரு காலதவணை குறித்தெழுதப்படாமல் அடமான சொத்தானது ஏலத்திற்கு வந்து வாதியே அனுமதிபெற்று ஏலவிக்கிறயம் பெற்ற பிறகு பிரதிவாதி அசல்தாவா செய்து அடமான சொத்தை மீட்கவேணுமாய்க் கோறினதில் டிக்கிரியில் வாய்தா குறிக்கப்படாத பிசகை அவமதித்து அதிகாரவாம்புள்ள கோர்ட்டாரால்ஏற்பட்ட டிக்கிரீ அப்பீலாகாமல் அதை அனுஸரித்து நடந்த ஏலநடவடிக்கை சட்டப்படி உறுதியானதால் அதற்குப்பின் எதிரி தொகையை செலுத்தி சொத்தை மீட்டுக்கொள்ள அபேட்சிக்கத்தகாதென்றும் தவிர நிறைவேற்றும் நடவடிக்கை பெண்டிங்கிலிருந்த பொழுதே ஸி. பி. ஸி. 244-வது பிரிவின்படி எதிர் ஆட்சேபணைகள் செய்திருக்கலாமென்றும் சொல்லி அசல் தாவாவை ஜில்லா கோர்ட்டார் தள்ளுபடி செய்தது நியாயமென்று ஹைகோர்ட் அபிப்பிராயத்திற் கொற்றுமையாக வாதியின் பிரிவி கௌன்ஸில் அப்பீலைத் தள்ளுபடிசெய்து விட்டார்கள்.

மிதாட்சர தர்மசாஸ்திரத்தை அனுஸரித்தவரான குமாரஸாமி முதலியார் என்றவர் பிதார்ஜிதமான சொத்துகளை 1876-ல் ஒருவனுக்கும்

1879-ல் ஒருவருக்கும் 1881-ல் ஒருவருக்குமாக மூன்று தடவைகளில் அடமானம் வைத்துக்கடன் வாங்கியிருந்தார். இரண்டாவது அடமானதாரராகிய விஜயராகவாச்சாரியாரென்ற வக்கீலொருவர் மற்றஇரண்டுஅடமானபாத்தியதைகளையும் மேடோவர் பெற்றார் என்றாலும் 1881-ல் ஏற்பட்டிருந்த அடமான தஸ்தவேஜின் பாக்கியைப் பற்றி மட்டும் 1886-ல் தாவாசெய்து குமாரஸாமி முதலியுடன் ஷை யாருடைய இரண்டு மைனர் குமாரர்களையும் பிரதிவாதிகளாகச்சேர்த்து அவர்களிருவரும் தகப்பனுடைய சவரட்சணையிலிருப்பதாய்ப் பிராதில் செப்பியிருந்தார். 1886-ம் வருஷத்திய 5 நெ. அசல்விஜ்ஜியமாக தாகலாகி தகப்பன் மைனர்களுக்கு கார்டியனல்லவென்று ஆட்சேபித்தும் அதை நிராகரித்துவிட்டு தஸ்தவேஜின்படி ஏற்பட்ட பாக்கித்தொகை ரூ 10,891-க்கும் 1-ம் பிரதிவாதியாகிய தகப்பனைப் பொருத்தும் அடமான சொத்துக்கள் முழுவதின் பேரிலுமாக ஜில்லா கோர்ட்டார் டிக்கிரீ யளித்தார்கள். அந்த டிக்கிரீயில் ப்ராபர்டி ஆக்டின் முறைப்படி பிரதிவாதிகள் டிக்கிரீ தொகையைச்செலுத்துவதற்கு வாய்தா குறிக்கப்படவில்லை.

வாதி டிக்கிரீயான 5-மாதங்களுக்குப் பின் அடமான சொத்தை ஏலத்திற்குக் கொண்டுவர மனுக்கொடுத்தார். இதில் மைனர்களுக்கு 1-ம் பிரதிவாதி கார்டியனைக் குறிப்பிட்டிருந்தார். ஷெடியூலில் வாதி தன் ஆதீனத்தில் வேறு இரண்டு அடமானவில்லங்கமிருப்பதாகவும்குறித்திருந்தார். 1886 ஆகஸ்டு 18-ல் ஜப்திக்கட்டளை உத்தரவாச்சுது. ஸெப்டெம்பர் 13-ல் ஏலமென்று நோடீஸ் பிறந்தாலும் ஏலம் அப்பொழுது நடக்கவில்லை.

மைனர்களின் தாய் மாமனாகிய கோவிந்தராஜ முதலியார் மைனர்களுக்கு கார்டியனாக வந்து 1886-ஏப்பிரல் 15-ல் மைனர்களையும் கட்டுப்படுத்தின டிக்கிரியை ரத்துசெய்யவேண்டுமென்று விண்ணப்பம்செய்துகொண்டதைஜில்லாகோர்ட்டார் அங்கீகரித்து மைனர்களைபற்றினமட்டில் மூந்திய டிக்கிரீயை ரத்து செய்து மனுதாரனை கார்டியனாக நியமித்து அவரை ஸ்டேட்மெண்டு தாகல் செய்யும்படி உத்தரவளித்தார். குறித்த வாய்தாவுக்குள் ஸ்டேட்மெண்டும் தாகல் செய்யவில்லை. ஈரங்கிக்கும்ஆஜராகவில்லை. ஜில்லா கோர்டார் முன்போலவே 1886நவம்பர் 15-ல் மைனர்களை கட்டுப்படுத்தி டிக்கிரி யளித்தார்கள். மூந்திய டிக்கிரீக்கு பதிலாக ஏற்பட்டதென்று நிராகரிக்கப்பட்டது நூதனமாய் ஜப்தி உத்தரவு பிறகாமல் மூந்திய நிறைவேற்றும் நடவடிக்கையை ஒட்டியே ஜில்லா கோர்ட்டார் அடமான சொத்துக்களை 1887-ஸெப்டெம்பர் 19-ல் ஏலம்போட்டதில் அனுமதி பெற்ற வாதியாகிய வக்கீலவர்களே ஏலவிக்கிறயம் பெற்றார். ஏலம் உறுதியாச்சுது வாதியும் இறந்துபோய் விட்டார். 1-ம் பிரதிவாதியும் இறந்துபோய்விட்டார். 2-ம் பிரதிவாதியாகிய கணபதி முதலியார் என்ற மைனர் மேஜராகி ஏலதாரின் மகனாகிய கிருஷ்ணமாசாரியாரின்பேரில் தாவா செய்து அடமான டிக்கிரீயில் கண்ட தொகையைக் கட்டுவதாகவும் சொத்தை மீட்டுத் தன் வசம் கொடுத்துவிடவேண்டுமென்று கோறிக்கொண்டார். அதற்கு முக்கிய காரணமாக.

(1) இரண்டாவது தடவை ஏற்பட்ட டிக்கிரீயின் பிறகு ஜப்திக்கட்டளை பிறக்காதபடி மூந்திய டிக்கிரீயின்பேரில் நடந்த நிறைவேற்றும் நடவடிக்கையில் ஏலவிக்கிரயமானபடியால் தகப்பனுடைய பாத்தியதை மட்டும் விக்கிறயதாரனுக்குச் செல்லுமென்றும் மைனர்களின் பாத்தியதை ஏலமானதாகச் சொல்லக்கூடாதென்றும் வாதம் செய்தார். மைனரின் பாத்தியத்தைஏலம்போடப் பிந்திய டிக்கிரியின் பேரில் ஜப்திக்கட்டளை பிறந்திருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது.

பிந்திய டிக்கிரியான பிறகுதான் ஏல இஸ்தியார் பிறந்திருக்கிறது. ஆகவே பிந்திய டிக்கிரீயின் நடவடிக்கையாகத் தான் மதிக்கப்பட்டிருக்கவேண்டும். ஏலமாகிற காலத்திலும் உறுதியான காலத்திலும் தாய் மாமன் கார்டியனாகரிகார்டில் காட்டப்பட்டிருக்கிறார். மூன்று-பிரதிவாதிகளின் பாத்தியத்தை ஏலமாகிறதாய் ஏல இஸ்தியார் பிறந்திருக்கிறது. பார்ட்டிகளனைவரும் பிந்திய டிக்கிரீயை அனுஸரித்து ஏலமானதாகத்தான் நம்பி இருக்கவேண்டும். ஆகையால் இந்த வாதம் பிரயோஜனப் படாது.

(2) ப்ராபர்டி ஆக்டின்படி டிக்கிரீயில் தொகையைச் செலுத்த வாய்தா குறிக்கப்படாத குறை

வானது முறைப்படி ஏற்பட்ட டிக்கிரியை அனுஸரித்து நடந்த ஏலநடவடிக்கையை நிஷ்பிரயோஜனமாக்குமென்று சொல்லத் தகாது. டிக்கிரியில் வாய்தா குறிக்கப்பட்டதாக குறைவைப்பற்றி அப்பீல் செய்திருக்கவேண்டும். சட்ட விரோதமென்று அப்பீலில் டிக்கிரியை ரத்து செய்யக் கோறியிருக்கவேண்டும். அப்பீலே கிடையாது. இந்த பாயிண்டும் வாதிக்குப் பிரயோஜனமில்லை.

தவிர ஸி.பி.ஸி. 244-வது பிரிவின்படி ஏலதாரனுடைய நிலைமையை பாதிக்கக்கூடிய விஷயங்களும் நிறைவேற்றும் கோர்ட்டார் மனு நடவடிக்கையில் தீர்மானிக்கபடலாமென்று 19. I. A. 166-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது தவிர இந்தக் கேஸில் ஏலதாரன் வாதியாகவுமிருக்கிறார். ஆகையால் ஏல விஷயமான ஆட்சேபனைகளை ஏலம் உறுதியாகுமுன் நிறைவேற்றும் கோர்ட்டில் செய்திருக்கவேண்டுமே யொழிய அந்த முறையைத் தவிர்த்து விட்டு அசல் தாவா செய்யக் கூடாதென்றும் சொல்லவேண்டும். இத்தியாதி காரணங்களால் பிரிவி கௌன்ஸிலில் அப்பீலும் தள்ளுபடியாச்சுது. 34. M. L. J. 463.

—o—

ஜஸ்டிஸ் எய்லிங் & கிருஷ்ணன் - J

(திருச்சினாப்பள்ளி ஜில்லா)

C. R. P. 111 of 1918 - 31 அக்டோபர் 1918.

ராமஸாமி கவுண்டன் vs காளி கவுண்டன்.

மதராஸ் எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்டு 131-வது பிரிவின்படி தீர்வை பாக்கிக்காகப் போடப்பட்ட ஏலத்தை ரத்து செய்யும்பொருட்டு ஏலத்தேதியிலிருந்து 30 தினங்களுக்குள் தீர்வை பாக்கியை ரெவினியூ கோர்ட்டில் செலுத்திவிடவேண்டியதாயிருக்க 30-வது தினத்தில் டிப்டி கலக்டர் ரஜாவின்பேரில் வெளிச்சென்றமையால் இரண்டு தினங்களுக்குப் பின் அவர் டியூடிக்கு வருவாரென்றும் அன்று வந்து தொகை செலுத்திவிடலாமென்றும் குமாஸ்தா சொன்ன பிரகாரம் தொகை செலுத்தினதை ஒப்புக்கொண்டு ஏலத்தை டிப்டி கலக்டரவர்கள் ரத்து செய்துவிட்ட நடவடிக்கையின் நியாயம் நிலைபெற்றது.

ஏலத்தை ரத்து செய்த உத்தரவை மாற்றி க்ரயத்தைக் காயப்படுத்தும்படி ராமஸாமி கவுண்டரென்ற மனுதார் ஜில்லா கலக்டரவர்களிடத்திலும் ரெவினியூ போர்டிலும் அப்பீல் செய்தும் பிரயோஜனப்படாமல் ஹைகோர்ட்டில் ஸி. பி ஸி. 115-வது பிரிவின்படி ரிவிஷன் விண்ணப்பம் தாகல் செய்தார். ஹைகோர்ட்டுக்கு ரிவிஷனில் பிரவேசிக்க அதிகாரவரமில்லையென்று பிரதம ஆட்சேபனை செய்யப்பட்டது. இந்த ஆட்சேபனை அங்கீகரிக்கப்படவில்லை. ஆக்டின் 205-வது பிரிவில் ஜில்லா கலெக்டருக்கும் ரெவினியூ போர்ட்டாருக்கும் டிப்டி கலக்டரவர்களுடைய உத்தரவின் பேரில் ரிவிஷன் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிற போதிலும் 192-வது பிரிவின் கருத்தில் எஸ்டேட்ஸ் லாண்டு ஆக்டின் கீழ் ஏற்படும் தாவாக்கள் அப்பீல்கள், முதலிய நடவடிக்கைகளில் ஹைகோர்ட்டார் ஸி. பி ஸி, 115-வது பிரிவின்படி ரிவிஷனில் பிரவேசிக்கலாமென்று 192-வது பிரிவின் கருத்தில் ஏற்படும் முறையானது 205-வது பிரிவின் அம்சத்திற்கு விபரீதமாயில்லையென்று ஹைகோர்ட்டார் ரிவிஷன் பிரவேசிப்பது யுக்தானுஸாரத்தைப் பொருத்ததாகுமென்றும் இந்தக்கேஸில் மனுதாரன் 205-வது பிரிவின் முறையை அனுஷ்டித்துத் தோல்வியடைந்தபின் ஹைகோர்ட்டுக்கு வந்திருப்பதால் நீதிபரிபாலனத்திற்கு விரோதம் நடந்திருப்பதாய்த் தோன்றினாலல்லாது ஹைகோர்ட்டார் பிரவேசிக்கத்தகாதென்றும் ஆனால் ஹைகோர்ட்டாருக்கு ரிவிஷன் அதிகாரம் கிடையாதென்ற பிரதம ஆட்சேபனைக்கு ஆதாரமில்லையென்றும் நிர்ணயித்து மற்ற பாயிண்டுகளைப்பற்றி ஈரங்கி கேட்டு டிப்டி கலக்டரவர்கள் செய்த உத்தரவைக்காயப்படுத்தி ரிவிஷன் விண்ணப்பத்தைக் காயப்படுத்தினார்கள்.

ஹைகோர்ட்டாரின் உத்தரவில் சொல்லப்பட்ட காரணங்களாவன:—

ஏலமான 30-தினங்களுக்குள் தொகையைச் செலுத்தப்படாத காரணத்தால் ஏலத்தை ரத்து செய்யக்கூடாதென்றும் இரண்டாவதாக ஏல விக்கிரயதாரனுக்கு நோடீஸ் கொடுக்காமல் ஏலத்தை ரத்து செய்த உத்தரவு சட்ட விரோதமென்றும் முக்கியமாய் வாதிக்கப்பட்டது. ஆக்

டின் 131-வது பிரிவில் கண்டிப்பாய் 30 தினங்கள் குறிக்கப்பட்டிருக்கிறது. காலாவதி ஆக்டு 5-வது பிரிவின் நியாயங்களாலும் கெடுத் தவறினதற்குச் சமாதானம் சொல்லத்தகாது. ஆனால் 131-வது பிரிவின் அம்சங்களைக் கிஞ்சித்து தயாளமானவிதமாயும் நியாயமாகவும் வியாக்கியானப்படுத்திப் பிரயோகிக்கவேண்டு மென்பதற்கு அதாரிடிகளில்லையென்று சொல்லத்தகாது. 18 - கல்கத்தா 231-ஐப் பார்க்கவும். யாதொரு காரியத்தை நடத்துவதற்குக் காலம் குறிக்கப்பட்டிருந்தபோதிலும்கோர்ட்டாருடைய நடத்தை அல்லது யாதொரு உத்தரவினால் பார்ட்டி அவ்விதமாய் நடந்துகொள்ளத் தடைபட்டால் குறித்த வாய்தாவுக்கு மறு தினத்தில் அந்தக் காரியத்தை நடத்தலாமென்ற மேற்கூறிய கல்கத்தா கேஸின் அபிப்பிராயம் 18 கல்கத்தா 631-முதலிய மற்ற கல்கத்தா கேஸ்களிலும் 8 M. L. J. 265-க்குச் சரியான 22 மதராஸ் 179-லும் நியாயமென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. கோர்ட்டானது ரஜாவுக்கு அடைபட்டிருந்தால் கெடுவாய்தா பார்ட்டிக்கு உதவக்கூடியதற்காக (General Clauses Act) ஜெனரல் கிளாஸஸ் ஆக்டு 10-வது பிரிவு விதிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேஸில் டிப்டி கலக்டரவர்கள் ரஜாவில் போயிருந்த தினம் வாய்தா தினமாகையால் பார்டியானவன் செய்யவேண்டிய காரியத்தை நடத்தக்கூடாமற் போச்சுதாகையால் அன்று கோர்ட்டானது மூடப்பட்டிருந்ததற்குச் சமானமாக நிதானிக்கவேண்டும். 30-வது தினத்தில் தொகையைச் செலுத்தாததற்குக் கோர்ட்டாருடைய நடத்தை காரணமேயொழிய பார்ட்டியின் ஆலஸ்யமல்லவென்று சொல்லவேண்டும். 26 கல்கத்தா 449-ல் கோர்ட்டாருடைய நடத்தைக் குறைவு யாதொன்றும் ஏற்பட்டதாகச் சொல்லப்படவுமில்லை. (அவ்வித சந்தர்ப்பத்தைப் பார்ட்டி அனுகூலப்படுத்திக் கொள்ளக்கூடாதென்றும் சொல்லப்படவில்லை.) தவிர கோர்ட்டாரால் யாதொரு முகாந்தரங்கள் ஏற்பட்டிருந்தால் பார்ட்டியின் தாமதத்தை மன்னித்து மாறுன தீர்மானங் கொடுத்திருக்கலாமென்று மனவர்த்தமாய்ச் சொல்லியிருக்கிறார்கள். 13 C. L. J. 535-ம் மனுதாரனுக்கு உதவக்கூடிய அதாரிடியாகாது. கோர்ட்டாருடைய நடத்தைக் குறைவும் உத்தரவுகளும் பார்ட்டிகளுக்குத் தடையாக ஏற்பட்ட சந்தர்ப்பம் அந்தக் கேஸில் கிடையாது. 13 C. L. J. 467-ல் 18-கல்கத்தா 231-ன் நியாயத்தை 13 C. L. J. 535-ஐத் தீர்மானித்த ஹானரபில் ஜஸ்டிஸ் மூகர்ஜீ யவர்கள் ஒப்புக்கொண்டு மிருக்கிறார்கள்.

1912 மார்ச்சு 27-ல் ஏற்பட்டிருக்கிற 145வது ரெவினியூ விளம்பரத்தையிட்டுப் பார்ட்டியானவன் கெடுத் தவராதபடிக்கு ஸப் டிரெஷரியில் (தாலூகா கஜானாவில்) தொகையைச் செலுத்தியிருக்கலாமென்று சொல்லப்படுகிறது. ஆக்டில் கலக்டரிடம் தொகையைக்கட்டவேண்டுமென்று விதிக்கப்பட்டிருப்பதால் கலக்டர் ஆஜரில்லாத சந்தர்ப்பத்தில் வேறுவிதமான முறையை அனுஷ்டிக்கத் தகுந்த நிலமையிலிருந்ததாகச் சொல்லத் தகாது. ஆகையால் குறித்த வாய்தாவில் தொகையைச் செலுத்தாத காரணத்தைப் பாராட்டி கலக்டர் செய்த உத்தரவை மாற்ற நியாயமில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது.

இரண்டாவதாக ஏலதாரனுக்கு நோடீஸ் கொடுக்காமல் ஏலத்தை ரத்து செய்த ஒழுங்கீனத்தைக் கவனிக்கலாமென்றாலும் அந்த ஒரு காரணத்தால் ரிவிஷனில் பிரவேசிப்பது நியாயமாகாது. அப்படிப் பிரவேசித்தாலும் எதிரிக்கு நோடீஸ் கொடுத்து ஆட்சேபனைகள் ஏதேனுமிருந்தால் ஈரங்கி கேட்டு உத்தரவளிக்கவேணுமாய் டிப்டி கலக்டருக்கு ரிமாண்டு உத்தரவளிக்கவேண்டியதாகுமேயொழிய ஏலத்தைக் காயப்படுத்தும்படியான உத்தரவை அளிக்கத்தகாது. ரிமாண்டு விஜாரணையில் நூதனமான (இங்கு வாதிக்கப்படாத) பாயிண்டுகள் எதிரிக்கு யாதொன்றும் கிடையாதென்று திண்ணமாய்ச் சொல்லத் தகும். ஆகவே எதிரிக்கு நோடீஸ் அனுப்பாத குறையை ஆதாரங்கொண்டு ரிவிஷனில் பிரவேசித்து யாதொரு உத்தரவளிக்க நியாயமில்லையென்று சொல்லி மனுதாரின் ரிவிஷன் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்து விட்டார்கள். 35. M. L. J. 571.

—o—

ஜஸ்டிஸ் அப்துல் ரஹீம் & ஓல்ட் வீல்டு-J.

(நெல்லூர் ஜில்லா)

A. S. 321 of 1916-2 நவம்பர் 1917.

ஸ்ரீனிவாஸ சேஷாசார்லு vs சேஷம்மா.

மூல புருஷன் தன்னுடைய இரண்டு குமாரத்திகளுமாக எழுதி வைத்த உயில் சாஸன வசனங்களில் ஸ்பஷ்டமான விநியோகமுறை ஏற்படாத போதிலும் உயில் முழுவதையும் கோர்ட்டார் யோஜனை செய்து பார்த்து எழுதி வைத்தவரின் கருத்தைக் கண்டறிந்து அதன்படி நன்மைப் பரிகாரத்தைக் கோர்ட்டார் அளிக்கலாமென்று இந்தக் கேஸின் சந்தர்ப்பத்தையிட்டுத் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

சாஸனகர்த்தா எழுதிவைத்த உயிலின் முக்கியமான வசனங்களாவன:—"என்னுடைய பாரியாளும் இரண்டு புத்திரர்களும் இறந்துபோய் விட்டபடியால் எனக்குள்ள ஸ்தாவர ஜங்கம சொத்துக்கள் யாவற்றும் மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்டு ஒரு பாகத்தை சந்ததியில்லாத எனது ஜ்யேஷ்ட குமாரத்தியாகிய சேஷம்மாளும் மற்ற இரண்டு பாகங்களையும் இரண்டு ஆண் சந்ததிகளை உடைத்தாயிருக்கிற கனிஷ்ட குமாரத்தியாகிய ஆண்டாளம்மாளுமாக அனுபவிக்க வேண்டியது. ஆண்டாளம்மாளுடைய ஆண் சந்ததியால் எனக்கு உத்தரக்கிரியை நடக்கத் தகுமாதலாலும் அவள் எனக்கு சவுகரியமான பணிவிடைகளையும் உதவியையும் செய்து வருகிற காரணத்தாலும் அவளுக்கு இரண்டு பாகம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மூத்த மகளுக்கு சந்ததி இல்லாத காரணத்தால் அவள் தானுதிவிக்கிரயங்களுக்கு யோக்கியமில்லாமல் ஒரு பாகத்தை ஜீவதசை மட்டும் அனுபவித்து வரவேண்டியது. அவள் ஸ்வீகாரமெடுத்துக்கொள்ளும் பட்சத்தில் ஸ்வீகார புத்திரனுக்கு அந்த பாகம் செல்லக்கூடாது. ஆனால் அவளுக்கே புத்திரன் உண்டானால் அந்த பவுத்திரர்கள் கனிஷ்ட குமாரத்தியின் மக்களைப் போல தானுதிவிக்கிரய விக்கிரயங்களுக் குறித்தாய் அந்த மூன்றிலொரு பாகத்தை புத்திர பவுத்திரபாரம்பரியமாய் அடையவேண்டியது."

இவ்விதமான அம்சங்களை உடைத்தான உயில் சாஸனம் ஏற்பட்டபின் சாஸனகர்த்தாவின் மரணத்திற்குமுன் கனிஷ்ட புத்திரி இறந்து போனபடியால் அவளுடைய புத்திரர்கள் வாதிகளாய் அவளுடைய இரண்டு பாகத்திற்குரியவர்களாய் உயிலின் கருத்தை ஆதாரங்கொண்டு தாவா செய்ததில் மூத்தமகளாகிய சேஷம்மாள் தன் சகோதரிக் கென்று விடப்பட்ட பாகம் தனக்குச் சேரவேண்டுமென்றும் சாஸன கர்த்தா இறந்த சமயத்தில் ஆண்டாளம்மாள் காலமானபடியால் அவளுக்குமட்டுமாக விடப்பட்ட இரண்டு பாகமும் தனக்கே சேரவேண்டுமென்றும் எதிர் வாதம் செய்தாள். மரண சாஸனத்தினால் ஆண்டாளம்மாளுடைய மக்களுக்கு சொத்து பாகம் சேரவேண்டுமாக சாஸன கர்த்தா எண்ணியிருந்ததாக யூகிக்கலாமென்றாலும் அவ்விதமான வசனங்கள் காணப்படாதபடியால் கோர்ட்டார் அவ்விதமான கருத்தை பூர்த்தி செய்யக் கூடாதென்று சொல்லி ஜில்லா கோர்ட்டார் வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அப்பீல் ஹைகோர்ட்டார் மாறான அபிப்பிராயங்கொண்டு சாஸன கர்த்தாவின் எண்ணத்தில் வாதிகளுக்கு சொத்து பாகம் செல்லவேண்டிய கருத்து உயிலின் வசனங்களால் நன்கு விளங்குவதால் கோர்ட்டார் அக் கருத்தின் பலனை வாதிகளுக்குப் பிரயோகப்படுத்தலாமென்று சொல்லி வாதிகளுக்கு 2-பாக முண்டென்று தீர்மானித்து பாகப் பிரிவினைக்கும் மத்திய கால வருமான நிர்ணயத்திற்காகவும் வாதிக் கனுகூலமான டிக்கிரீ யளித்தார்கள்.

ஹைகோர்ட் தீர்ப்பின் காரணச்சுருக்கமாவது:—ஆண்டாளம்மாளுடைய புத்திரர்களுக்கென்று ஸ்பஷ்டமான நன்கொடை யளிப்பு உயிலில் குறிக்கப்படவில்லையென்று தெளிவாய் சொல்லலாம். சேஷம்மாளுக்குப் புத்திரனுண்டானால் அந்த புத்திரன் ஆண்டாளம்மாளுடைய ஸந்ததிகளைப்போலவே அவளுடைய பாகத்தை புத்திர பவுத்திர பாரம்பரியமாய் அனுபவிக்கலாமென்று சொல்லப்பட்டிருப்பதால் ஆண்டாளம்மாளுடைய மக்களாகிய வாதிகளுக்கு அவ்விதமான பங்கு விகிதம் கொடுக்கப்பட்டிருக்கிறதாகவே சாஸன கர்த்தாவின் மனோபாவமென்றும் அல்லது அவ்விதம் கொடுக்க எண்ணமுடையவாயிருந்ததாகவும் நிர்ணயிக்கவேண்டியதாகும்

இரண்டு புத்திரிகளுக்கும் யாதொரு வித்தியாஸம் பாராட்ட மனமில்லையென்று திட்டமாய்ச் சொல்லலாம். அவரவர்களுடைய பாகத்தை அவர்களுடைய சந்ததிகள் அடையவேண்டுமென்ற கருத்து முதன்மையாக விருந்ததாகவே சொல்லவேண்டும். அதனுல் தான் ஸ்வீகார புத்திரனுக்குப் போகக்கூடாதென்று விளம்பியிருக்கிறுர்.

சேஷம்மாள் புத்திரனில்லாமல் இறந்தால் அவளுடைய பாகம் ஆண்டாளம்மாளுக்குச் செல்லவேண்டுமென்ற ஷரத்தினுல் ஆண்டாளம்மாள் தனக்கும் சேஷம்மாளுக்கும் பின்னுல் மறிப்பாளென்ற நம்பிக்கையோடு ஆண்டாளம்மாளுக்கு சொத்தின் அனுபோக மளிக்கப்பட்டதாகவும், ஆகவே அவளுடைய புத்திரர்களுக்கு யாதொன்றும் கொடுக்க யோஜிக்கப்படவில்லையென்றும் ஜில்லா ஜட்ஜியவர்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறுர். ஆண்டாளம்மாள் தனக்கு முன் இறந்து போவாளென்ற சம்பவம் யோஜிக்கப்படவேயில்லை, உயிலின் சகலமான வாசகங்களையும் கவனித்து ஜில்லா கோர்ட்டார் தீர்மான முடிவடையவில்லை. ஹிந்து லா முறைப்படி தகப்பனுடைய சொத்துக்களைப் பெண் வாரிஸ்கள் அடையும் வண்ணமாக உயிலின் விநியோக முறைமைய மதிக்கப்பட்டிருக்கிறது.

சேஷம்மாளுக்குப் பிள்ளைகளுண்டானுல் அவர்கள் நேரில் அவளுடைய பாகத்தை அடையலாமென்று சொல்லியிருக்கிறபடியால் வாதிகளும் தாயின் பாகத்தை அடைய விரும்பியிருக்க வேண்டுமென்பதில் சந்தேகமே வேண்டாம். கனிஷ்ட குமாரத்தி தனக்குப் பிறகு 2-பாகத்தை அடைந்து அனுபவித்து வருவாளென்றும் லாப்படி அவளுடைய பாகம் அவளுடைய மக்களுக்குச் செல்லுமென்று நம்பி அதைப்பற்றி உயிலில் குறிக்கப்படவில்லையென்றும் ஆகவே ஒரு மகனுக்குமட்டும் கொடுத்த பாகம் அடையத் தகாமல் போய்விட்டதால், மற்றொரு மகன் அதை அடையலாச்சுதென்பதாக எதிர்வாதம் செய்யப்படுகிறது. சேஷம்மாளுடைய வாரிஸ்கள் ஏற்பட்டால் அவர்களுக்கு விநியோகம் குறிக்கப்பட்டிருக்கிறபடியால் ஆண்டாளம்மாளுடைய வாரிஸ்களுக்கும் விநியோகம் குறிக்கப்படக் கருதினுரென்றே நிதானிக்கவேண்டும். ஹிந்துக்களில் மகளுக்கென்று அளிக்கப்படும் சொத்தானது அவளுடைய ஸர்வ ஸ்வதந்தர பாத்தியத்தைக்கென்ற கட்டாயமான அனுமான விதி கிடையாது. ஜீவதசை பாத்தியதைதான் ஏற்படுமென்ற அனுமான முறையும் கிடையாதென்று சொல்லத் தகும் இருவகைக்கும் அதாரிடி யாதொன்றும் கிடையாது. சந்ததியென்ற வாசகத்தால் இந்த கேஸில் ஆண்மக்களென்று கருதப்பட்டதாகச் சொல்லவேண்டுமேயொழிய கேவலம் வழக்க முறையாக யாதொருவருக்குச் செல்லும் பாத்தியதையைச் செப்புவதுபோல "அவளுக்கும் அவளுடைய சந்ததிகளுக்குமென்று பொதுவாய்ச் சொன்னதாக மதிக்கத்தகாது, ஆண்டாளம்மாளுடைய மக்களுக்கென்ற கருத்தைக்கொண்டே வாசகம் ஏற்பட்டிருக்கிறதாகச் சொல்லவேண்டும்.

இத்தியாதி காரணங்களால் வாதிகளுக்குத் தாயாரின் அனுபோகத்திற்காக விடப்பட்டிருந்த 2-பாகமும் கிடைக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு மேற்கண்டவிதமாய் டிக்கிரீ யளிக்கப்பட்டது. 34 M. L. J. 479.

ஜஸ்டிஸ் அப்துல் ரஹீம் & ஒல்ட் பீல்டு J.

(விசாகப்பட்டணம் ஜில்லா)

A. S. 209 of 1916 - 21 நவம்பர் 1917.

வெங்கடராயனிம்சாரு

vs

வத்ஸவயா வெங்கடசுபத்திரயம்மா

அடமானக் கடன் பாக்கி இத்தனை யென்று கணக்கெழுதி யனுப்பினுல் தொகையைச் செலுத்திவிடுவதாய்ச் சொன்னதற்கு பதில் உத்தாமாகப் பத்திரத்தின் ஷரத்துக்களை அனுஸரித்து சொத்தில் தனக்கு ஸர்வஸ்வதந்தரமான ஆதீன பாத்தியதை ஏற்பட்டுவிட்டதாகவும் ஆகவே தொகை செலுத்தி சொத்தை மீட்டுக்கொள்ளும் பாத்தியதை இழந்துபோகப்பட்டதாகத் தெரிவித்து கணக்குப்பார்க்குமிடத்து வட்டி பாக்கி உள்பட ரூ. 3-லட்சத்துச் சில்லரை செலுத்தக்

கடவதாகுமென்று விடைகொடுத்த காரணத்தால் பிற்காலத்தில் அவ்வித விடை கொடுத்தவர் அடமானக் கடன் துகையை வசூலிக்கத் தாவா செய்ததில் மீட்டுக்கொள்ளும் பாத்தியதை கிடையாதென்றும் ஸ்வதந்தர பாத்தியதையைப் பாராட்டி விடை கொடுத்த தேதியிலிருந்து வட்டியை வாதி இழந்துவிடத் தகுமென்ற எதிர்வாதம் ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஷரத்தின் அம்சங்களைக் கருதித் தனக்கு ஸ்வதந்தர பாத்தியதை வந்துவிட்டதாக நம்பி அவ்வித விடை கொடுத்தாலும் பின்னால் கட்டளை வசூலிக்கும் பாத்தியதையை இழந்துபோகாமல் வட்டியுடன் வசூலிக்கத் தகுமென்று தீர்மானிக்கப்பட்டது,

ஒத்தி தஸ்தவேஜில் கண்ட ஷரத்துப்படி ஏற்பட்ட பாக்கித் துகையை வட்டியுடன் சேர்த்து வசூலிக்கும்பொருட்டு வாதி சப்கோர்ட்டில் செய்த தாவாவில் மேல்கண்டவிதமான ஆட்சேபணை வட்டி விஷயமாகவும், தவிர ஒத்திதாரன் செய்திருக்கிற சில சிப்பந்திச் செலவுகள் ஒப்பந்தத்திற்கு மேலாக நேர்ந்திருக்கிறபடியால் அதையும் பிரதிவாதியின் பற்றில் கணக்காகக்கூடாதென்றும் எதிர் வழக்காடப்பட்டதில் சப்கோர்ட்டார் வட்டி விஷயமாய் பிரதிவாதியின் ஆட்சேபணையை அங்கீகரிக்காமல் சிப்பந்திச் செலவுகளின் விஷயமாய் தஸ்தவேஜில் கண்ட ஒப்பந்தத் துகைக்கு ரூ. 1000-கம்மியாகச் செலவாகியிருக்கிறதென்று அபிப்பிராயப்பட்டு வாதிக்கு அது விஷயமாய் 100-குறைத்து டிக்கிரீயளித்தார்கள். ஹைகோர்ட்டார் அப்பீலில் வட்டி விஷயமாய் சப்கோர்ட் தீர்மானத்தைக் காயப்படுத்தி சிப்பந்திச் செலவு விஷயமாய்ப் பத்திரத்தில் கண்ட துகைக்காக டிக்கிரீயளித்தார்கள்.

ஹைகோர்ட் தீர்ப்பின் காரணச் சுருக்கமாவது:—வாதி விடையனுப்பிய கடிதத்தில் கண்ட துகை பாக்கி ரூ. 3 லட்சத்துச் சில்லரை சரியான துகைதானென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. தனக்கு ஸ்வதந்தர பாத்தியதை வந்துவிட்டதாகச் சொன்னபோதிலும் கடிதத்தில் குறிக்கப்பட்ட துகையைச் செலுத்த பிரதிவாதி தயாராயிருந்ததாகச் சொல்ல முடியாது. துகையை ஆஜர்படுத்தவுமில்லை. கோர்ட்டில் டிபாஸிட் கட்டவுமில்லை. இந்த தாவா செய்யுமுன்னாகிலும் பிறகாகிலும் டிக்கிரீ ஏற்பட்ட பின்னாவது துகையைச் செலுத்திவிடவில்லை. கணக்குக் கொடுத்தால் துகையைச் செலுத்திவிடுவதாய்த் தெரிவித்திருக்கிறார். அவ்விதமான நடத்தையானது ப்ராபர்டி ஆக்டின்படி சரியான டெண்டரென்று சொல்லத்தகாது. வாதி சொந்த பாத்தியதையைப் பாராட்டினதால் எதிரி துகையை டெண்டர் செய்யத் தேவையில்லையென்றும் டெண்டர் செய்யவேண்டிய சட்ட முறையை வாதி இழந்துவிட்டதாகச் சொல்லவேண்டுமென்றும் வாதிக்கப்படுகிறது. வாதி தனக்கு ஸ்வதந்தர பாத்தியதை வந்துவிட்டதாக நம்பிக் கணக்குக் கொடுக்காமலிருந்த நடத்தைப் பிசகை ஆதாரமாய் எடுத்துக்கொண்டு எதிரி தான் துகையைச் செலுத்த விரும்பினதாகத் தெரிவித்த காரணத்தால் தான் டெண்டர் செய்த பாவனையாக அது முதல் வட்டி செலுத்தக் கடவனல்லவென்று வாதிப்பது நீதியான கக்ஷியல்ல. அதற்கு அதாரிடி யாதொன்றும் கிடையாது. பிரதிவாதிக்காக காட்டப்பட்ட அதாரிடிகளாகிய 8 B. H C. R, 133, 3 M. P. C 245, 28 கல்கத்தா 557, 22 C L J. 352 இவைகள் தாவா கேஸின் வாதத்திற்கிசைந்த நியாயங்களைப்பற்றியவைகளல்ல. எதிரி கடிதம் எழுதின காலத்தில் தன் வசம் $1\frac{1}{2}$-லட்சம் ரூபாய் கையிலிருந்ததாகச் சொன்னதை சப்கோர்ட்டார் நம்பவில்லை. நம்பத்தகாத விஷயமாகவே சொல்லவேண்டும். கணக்கைக் காட்டவில்லை. கணக்கிருந்தால் ஒப்புக்கொள்ளலாம். ஆகவே எதிரியின் டெண்டர் வாதம் சரியானதல்லவென்றும் வட்டிவிஷயமாய் ஆட்சேபிக்கத் தகாதென்றும் சொல்லவேண்டும்

இரண்டாவதாக சர்க்கார் தீர்வைக்காகவும் சிப்பந்திச் செலவுகளுக்காகவும் குறித்த துகை காட்டப்பட்டிருந்தமையால் அதற்கு மேலாக வாதி செலவு செய்ததைப் பிரதிவாதி ஒப்புக்கொள்ளத் தகாது கம்மியானாலும் எதிரி வழக்காடத்தகாது. குறித்த துகையை வருமானத்திலிருந்து கழித்து மிகுதியை அடமானக் கடன் அசல் வட்டிக்காகக் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டியதென்றிருக்க குறித்த துகைக்குக் கம்மியாய் செலவாச்சுதென்று எதிரி வழக்காடத் தகாது. ஆகவே குறித்த துகை 4000-ரூபாயும் செலவு துகையில் கணக்கேற்றி பாக்கியை நிர்ணயிக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

வக்கீல் மிஸ்டர் கெ. ஸ்ரீனிவாஸய்யங்காரவர்கள் இந்தக் கேஸில் எதிர் வழக்காடின வாதிக்கு 2-வக்கீல் பீஸ் செலவுக்காக டிக்கிரீயளிக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்துகொண்டார்கள். அப்பீல் செய்த பிரதிவாதியின் ஆர்கியுமெண்டுகளைக் கேட்டு வாதியின் வக்கீல்களை ஆர்கியுமெண்டு செய்ய வேண்டியதில்லையென்று நிர்ணயித்து அப்பீலைத் தள்ளுபடி செய்திருக்கிறது. கஷ்டமான பாயிண்டுகள் யாதொன்றும் காணப்படவில்லை. ஆனால் 7-லட்சரூபாய் பெறுமதியான வியாஜ்ஜியமாதலால் இந்த அப்பீலில் வாதி 2-வக்கீல்களைவைத்தது அவசியமானகாரியமென்று சொல்லத்தகும். ஆகவே 2-வக்கீல் பீஸ் செலவுக்காகவும் அப்பீல் வாதியின் பேரில் டிக்கிரீயளிக்கப்பட்டது. 34 M. L. J, 488.

—o—

புல்பெஞ்சு கேஸ்.

சீவ்ஜஸ்டிஸ், சதாசிவய்யர் &

குமாரஸ்வாமி சாஸ்திரிகள் - J. J.

(மங்களூர் ஜில்லா)

L.P.A. 76 of 1617 - 14 நவம்பர் 1917.

நாராயண தந்திரி vs நாகப்பா.

ஸி. பி. ஸி. ஆர்டர் 23-ரூல் 1-ன்படி பின்னால் வேறு தாவா செய்துகொள்ள அனுமதியுடன் பிராதை உவித்டிரா செய்துகொள்ள விண்ணப்பம் கொடுத்து "உவித்டிரா செய்து கொள்ள அனுமதிகொடுக்கப்பட்ட" உத்தரவானது வேறு தாவா செய்து கொள்ள அனுமதியுடன் கூடியதாகவே அனுமானிக்கப்படவேண்டுமென்றும் உத்தரவை விண்ணப்பத்தின் கோறிக்கையுடன் சேர்த்து வியாக்கியானப்படுத்தவேண்டுமென்றும் தீர்மான அப்பிராயங் கொடுக்கப்பட்டது.

1902-ம் வருஷத்தில் செய்யப்பட்ட அடமானதாருடைய தாவாவை மேல் நடத்தாமல் விருத்திக்கொள்வதாயும் பின்னால் வேறு தாவா தாகல் செய்ய அனுமதிவேண்டுமென்றும் கொடுக்கப்பட்ட மனுவின்பேரில் டி-மு கோர்ட்டார் வேறு தாவா செய்து கொள்ளும் விஷயமாய் யாதொரு உத்தரவும் செய்யாமல் "வாதி பிராதை உவித்டிரா செய்துகொள்ள அனுமதி கொடுக்கப்பட்டதென்று" சுருக்கமாய் உத்தரவளித்தார்கள். அடமானதாரின் பாத்தியதையை மேடோவர் பெற்ற வாதி 1912-ல் வேறு தாவா செய்ததில் முன் செய்யப்பட்ட உத்தரவில் மறு தாவாவுக்கு அனுமதி எற்படாத காரணத்தால் அதே பரிகாரத்தைப்பற்றியஇந்தப்பிராதைஎற்றுக்கொள்ளத்தகாதென்ற எதிரியின் கக்ஷியைக் கீழ்கோர்ட்டார் ஒப்புக்கொண்டு வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஹைகோர்ட்டில் 2-வது அப்பீலை ஈரங்கி கேட்ட ஹானரபில் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள் வாதிக்கனுகூலமாய் விண்ணப்பத்துடன் சேர்த்து உத்தரவை அர்த்தப்படுத்தவேண்டுமென்றும் ஆகையால் விண்ணப்பதாரன் கோறினபடி மறு தாவாவுக்கு அனுமதியும் கொடுக்கப்பட்டதாகவே உத்தரவை நிதானித்து வாதியின் மறுதாவாவை எற்றுக்கொள்ளத் தகுமென்று அபிப்பிராயப்பட்டார்கள்.

ஹானரபில் ஜஸ்டிஸ் பேக்வெல் துரையவர்கள் மாறுன அபிப்பிராயங்கொண்டு விண்ணப்பதாரன் அனுமதிகேட்டும் அதைப்பற்றியாதொரு உத்தரவும் செய்யப்படாத காரணத்தால் மறு தாவாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாகவே யூகிக்கவேண்டுமென்று கீழ் கோர்ட் தீர்மானங்களை சரியென்று அங்கீகரித்தார். ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்களுடைய அபிப்பிராயம் மேலிட்ட போதிலும் பிரதிவாதிக்கு லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் முறை எற்பட்டதால் அது புல்பெஞ்சில் ஈரங்கியாகி ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்களுடைய அபிப்பிராயம் ஸ்தாபிக்கப்பட்டது. புல்பெஞ்சு தீர்ப்பின் காரணச் சுருக்கமாவது:—35 கல்கத்தா 990-ஐ அனுஸரித்து விண்ணப்பத்தையும் உத்தரவையும் ஒன்ருய்ப் படித்துக் கருத்துக்கொள்ளவேண்டும். [மறுதாவாவுக்கு அனுமதி கிடையாதென்று உத்தரவளிக்கப்படவில்லை. அவ்விதமான அனுமதி விண்ணப்பத்தில் பரிஷ்காரமாய் அபேக்ஷிக்கப்பட்டிருக்கிறது. அனுமதி கொடுக்கப் பிரியமில்லாத பட்சத்தில் கோர்ட்டார் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்திருக்கவேண்டும். மறு தாவாவுக்கு அனுமதி வேண்டியதற்காகவே உவித்டிராயல் மனுதாகல் செய்வது அவசியமாகும். பிராதை வாபிஸ் வாங்

16

224706

திக்கொண்டு எதிரியின் செலவைக் கொடுத்துவிடத் தயாராயிருந்தால் அதற்குக் கோர்ட்டாரின் அனுமதி அவசியமில்லையன்றோ. ஆகவே மறு தாவா அனுமதி கொடுத்த கருத்துடனேயே டி-மு கோர்ட்டார் மேற்கண்டவிதமான உத்தரவளித்திருக்கிறார்கள். 6 M. L. T. 191, 32 பம்பாய் 345 இவைகளைப் பார்க்கவும். 34. M. L. J. 515.

—o—

சீவ்ஜஸ்டிஸ் & எய்லிங்-J.

(தஞ்சாவூர் ஜில்லா)

A.S. 207 of 1916 - 22 ஜனவரி 1919.

குருஸாமி நாடார் vs கோபாலசாமி உடையார்

குடும்பத் தலைவன் எழுதிக்கொடுத்த நோட்டுக் கடன் குடும்பக்கடனல்லவென்று ஆட்சேபித்தால் ருஜு பாரம் வாதியைச் சேர்ந்ததாகும். வாதிக்கு சாட்சி பலம்கிடையாதென்ற தைரியத்தால் குடும்பக் கணக்காக சம்மன்படி கட்டியும் எதிரிகள் ஆஜர்படுத்தாத சந்தர்பத்தில் குடும்பக் கணக்கானது எதிர்வாதத்திற்கு விரோதமென்று அனுமானித்து வாதியின் சாட்சி பலக்குறைவை கவனியாமல் ருஜுபாரத்தைப் பிரதிவாதிகளின் மீது மாற்றி தாவா கடன் குடும்பக் கடனல்லவென்று ருஜுப்படுத்தவேண்டியது பிரதிவாதிகளின் கடமையென்று நிர்ணயித்து தாவாவைப் பைசல் செய்யவேண்டியது.

காலஞ்சென்ற ரத்னசாமி நாடார் என்ற அப்காரி கண்டிராக்டர் 1893-ல் இரண்டு பிராமிஸரி நோட்டுகள் எழுதிக்கொடுத்துக் கடன் வாங்கியிருந்தார். குடும்பத்தலைவராக கண்டிராக்ட் வியாபாரம் செய்து வந்திருக்கிறார் 1893ல்ஷியாருடையசகோதரர்கள் அந்த இரண்டு நோட்டுகளும் இடைக்கிடையில்புதுப்பிக்கப்பட்டு கடைசியாக ஏற்பட்ட பாக்கிக்காக ரத்னஸாமி நாடார் காலஞ்சென்றபிறகு ஷியாருடையசகோதரர்களையும் மற்ற குடும்ப மெம்பர்களையும்பிரதிவாதிகளாய்ச் சேர்த்து வாதி கும்பகோணம் சப் கோர்ட்டில் தாவா செய்தார்கள். தாவாக் கடன் குடும்ப வியாபாரத்திற்காக வாங்கப்பட்டதல்லவென்றும் ஆகவே மற்ற மெம்பர்களை அது கட்டுப்படுத்தாதென்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது. வாதிக்கு அனுகூலமாய் அசல் கோர்ட்டில் தீர்ப்பளிக்கப்பட்டது. பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். இதில் சம்மந்தப்பட்ட ஒரு நம்பர் ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீலாகி அது ஹைகோர்ட்டுக்கு மாற்றப்பட்டு இரண்டு அப்பீல்களும் ஒன்றாய் ஈரங்கியாகி கீழ் கோர்ட் தீர்மானமே காயமாச்சுது. ஹைகோர்ட் தீர்பின் காரணச்சுருக்கமாவது:—

எதிர் ஆட்சேபனையின் அம்சத்தால்சாதாரணமாய் ருஜுபாரம் வாதிகளைச்சேர்ந்ததாகும், தாவாக் கடன் குடும்பச்செலவுக்காக வாங்கப்பட்டதென்று வாதி ருஜுப்படுத்தவேண்டும். வாதி வகையறாக்கள் ஒரு தேவஸ்தான கமிட்டியாராதலால் கடன் கொடுத்த காலத்தில் கமிட்டி மெம்பர்களாக இருந்தவர்கள் தாவா காலத்தில் காலஞ்சென்று விட்டமையால் கடன்வாங்கப்பட்ட காரணத்தை ரூபப்படுத்த வாதிகள் நேரான சாட்சிகளல்ல. கணக்குப்பிள்ளையும் நேரான தகவல் கொடுக்கமுடியவில்லை. பிரதிவாதிகளின்குடும்பத்தைச் சேர்ந்த சில சாட்சிகளைக் கூட்டி லேற்றிப் பார்த்ததில் அவர்கள் வாதிக்கனுகூலமான பாயிண்டுகளை வெளியிடமனமில்லாதிருந்தார்கள் எதிரிகளின் குடும்பக் கணக்குகளை வரவழைத்து காட்டினால் குடும்ப வியாபாரத்திற்குதாவாகடன் துகை உபயோகப்பட்டதென்று துலங்குமென்று கருதி எதிரிளுக்கு படி கட்டி கணக்கு புஸ்தகத்தை ஆஜர்படுத்தவேண்டியும் எதிரிகள் கணக்குகளைக் காட்ட முடியாததற்குத் தகுந்தசமாதானங்கள் யாதொன்றும் உரைக்காமல் வாதிக்குச் சாட்சிகள் கிடையாதாகையால் கேஸ்தள்ளுபடியாகிவிடுமென்ற தைரியத்தைக்கொண்டு தாங்களும் யாதொருசாட்சியம் விடாமல் கோர்ட்டாருடைய தீர்மானத்திற்கு எதிர் பார்த்திருந்திருக்கிறார்கள். எவிடென்ஸ் ஆக்டு 114 (G) - வது பிரிவின்படி எதிரிகள் கணக்குகளை ஆஜர்படுத்த தவறினதாலும் அல்லது அதற்குத்தகுந்தகாரணம் சொல்லாதபடியாலும் கணக்குகளை ஆஜர்படுத்தினால் பிரதிவாதிகளுக்கு விரோதமான அம்சம் அதில் துலங்குமென்று கோர்ட்டார் அனுமானிக்கவேண்டியகடமையாகும். 32 M.L J. 369-க்குச் சரியான 40 மதராஸ் 402-ன் தீர்மானத்தில் பிரிவி கௌன்ஸிலார் சொல்லியிருக்கிறபடி ருஜுபாரத்தின் முறையை முக்கியமாய்க் கருதி

கீழ்கோர்ட்டார் முடிவடையவேண்டியதற்கு முக்கியமானதருந்த சாதனங்களைத்தரக்கூடியவர்கள் அவ்வித சாதனங்களைத்தாராமல் மறுத்து விடும் பட்சத்தில் அவ்வித அம்சங்கள் வெளிப்பட்டால் அது எதிரிகளுக்கு விரோதமானவை யென்று கோர்ட்டார் நிர்ணயிக்கலாமென்றும் வாதிக்குப் போதுமானசாட்சியம் ஏற்பட்டிருந்த போதிலும் கூட எதிரிகள் தரக்கூடிய சாதனங்களை மறைத்த காரணத்தால் எதிரிகளுக்கு விரோதமான தீர்மான அப்பிராயங் கொடுக்கத்தகும்.

இந்தக்கேஸில் ருஜுபாரம் வாதியின்பேரில் ஏற்பட்டிருந்தபோதிலும் எதிரிகளின் நடத்தைக் குறைவால் ருஜுபாரத்தை எதிரிகளின் பேரில் சுமற்றி தாவா கடன் குடும்பக்கடனல்லவென்று பிரதிவாதிகள் திருப்திகரமாய் ருஜுப்படுத்த வேண்டிய கடமையாகுமென்று சொல்லவேண்டும் குடும்பத்தலைவன் குடும்பப்பொதுவான வியாபாரம் நடத்திவந்தவரானாலும் எதிரிகளின் நடத்தைக் குறைவால் ஏற்படக்கூடிய அடமானத்தைக் கோர்ட்டார் பிரயோகப்படுத்தலாமென்று 34 அலகபாத் 135-ல் சொல்லப்படிருக்கிறது. 34 பம்பாய் 72-ஐப் பார்கவும். இத்தியாதி வாதங்களால் எதிரிகளுடைய எதிர் வாதம் ருஜுப்படுத்தப்படாத காரணத்தால் ஏற்றுக் கொள்ளப்படாமல் வாதிக்கு டிக்கிரீயளித்தது நியாயமென்று தீர்மான அபிப்பிராயங்கொடுக்கப்பட்டது. 36 M. L. J. 568.

—o—

புல்பெஞ்சு கேஸ்.

சீவ்ஜஸ்டிஸ், பேக்வெல் & குமாரசாமி சாஸ்திரிகள் - J. J.

(கர்நூல் ஜில்லா)

L. P. A. 261 of 1916-20 செப்டெம்பர் 1917.

கெங்கய்யா vs வெங்கட்ராமய்யர்.

அவிபக்தர்களான ஹிந்து குடும்பத் தலைவர் அந்நியர்களுடன் பங்காளியாய்ச் சேர்ந்து கூட்டு வியாபாரம் செய்துவரும்பொழுது ஷை குடும்பத்தவர்களில் ஒரு மெம்பர் சட்ட நியாயத்தை அனுஸரித்து விபக்தனுன நிலமையை அடைந்து இதரமான் குடும்ப சொத்துக்களை பாகம் பிரித்துக் கொண்டபின் கூட்டு வியாபாரத்திலுள்ள பங்கு விகிதத்தையும் அடையக்கோருவதற்காகத் தானும் ஒரு கூட்டுப்பங்காளி என்கிற ஸ்தானத்தை வகித்தவராய் கூட்டு வியாபாரத்தை க்ளோஸ் செய்து கணக்குகளைத் தீர்த்து தன் பங்கு விகிதத்தைப் பிரித்துக்கொடுக்கவேண்டுமென்று மற்ற கூட்டுப்பங்காளிகளின்மீது காண்டிராக்டு ஆக்டு 254-வது பிரிவின்படி தாவா செய்வது தப்பான முறையென்றும் அப்படிப் பிரிந்துபோன விபக்தன் கூட்டுப்பங்கு வியாபாரத்தில் குடும்பத் தலைவனுடைய விகிதத்திற்குக் கிடைத்திருக்கிற லாபத்தில் தனக்குறிய விகிதத்தை வாங்கித்தரவேணுமென்று குடும்பத்தாரின்மீது பாக விய்ர்ஜ்ஜியம் செய்திருக்கவேண்டுமென்றும் புல்பெஞ்சார் ஒற்றுமையான தீர்மான அபிப்பிராயங் கொடுத்தார்கள்.

இந்த வியவகார்மானது ஹைகோர்ட்டுக்கு 2-வது அப்பீலாக வந்து ஹானரபில் ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்களும், ஹானரபில் ஜஸ்டிஸ் பிலிப்ஸ் துரையவர்களும் வித்தியாஸமான தீர்மானம் கொடுத்தமையால் வாதியின் பிராது செல்லத்தகாதென்ற ஜஸ்டிஸ் ஸ்பென்ஸர் துரையவர்களுடைய அபிபபிராயம் மேலிட்டபோதிலும் வாதி லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் செய்து புல்பெஞ்சில் வாதம் செய்து திரும்பவும் தோல்வியடைந்தார்.

புல்பெஞ்சுக்காக ஹானரபில் ஜஸ்டிஸ் குமாரஸாமி சாஸ்திரிகளின் தீர்மானத்திற்குறிய நியாயங்களாவன:—

காண்டிராக்டு ஆக்டு 239-வது பிரிவின்படி வியாபாரத்தை க்ளோஸ் செய்து கணக்குப் பார்க்கவேண்டிய தாவா செய்யும் அதிகாரம் பங்காளிகளாக சேர்ந்திருக்கிறவர்களுக்குமட்டு முண்டு. குடும்பத்தார் அனைவரும் ஒரு பங்காளியாக மதிக்கப்படவும் தகாது, குடும்பத்தவர்களில் ஒருவா பங்காளியானாலும் மற்ற குடும்ப மெம்பர்களுக்கு அந்த வியாபாரத்தில் பங்காளி யென்ற சட்ட நிலமை உண்டாகாது. பங்காளியான மெம்பருடைய சிலாக்கியங்களில் பங்கு விகிதத்திற்கு மட்டும் லாயக்குள்ளவனுகும். அதிகமாய்க் கவ

னித்தால் பங்காளியின் கீழ் உட்பங்காளியாக வாதியை மதிக்கலாம். உட்பங்காளிக்கு மேற்கண்டவிதமான தாவா செய்யத் தகாதென்றும் நிர்ணயமாய்த் தீர்மானங்களேற்பட்டிருக்கின்றன. குடும்பத் தலைவன் குடும்பதிற்குப் பிரதிநிதியாக மற்றவர்களுடன் கூட்டுப்பங்காளியாகச் சேர்ந்த காரணத்தால் பங்காளி என்றும் சட்டநிலைமை அவருக் குண்டேயொழிய மற்ற குடும்ப மெம்ப்ர்களுக்கு அந்த நிலைமை வாராது. 28 மதராஸ் 344. 30. M, L. J. 241. 27. பம்பாய் 157. இவைகளைப் பார்க்கவும் பங்காளியாய்ச் சேர்ந்தவனிடத்தில் லாபத்தைப் பற்றிக் கணக்குக் கொடுத்துத் தன் விகிதத்தை வாதி அடையலாயக்குண்டு. இதனால் வாதி மற்ற பங்காளிகளுடன் யாதொரு ஒப்பந்தம் செய்துகொண்ட கருத்தில் வியவகாரம் நடத்தக்கூடாது. வியாபாரத்தில் நஷ்டம் வந்து விட்டால் குடும்ப சொத்துகள் முழுவதின் பேரிலும் மற்ற பங்காளிகள் தொடர்ந்து குடும்பப் பங்காளியின் நஷ்ட விகிதத்தை வசூலிக்கத் தகுமானாலும் கூட வியவகார நியாயம் வித்தியாசப்படாதென்றும் சொல்லவேண்டும். குடும்பத் தலைவன் மற்ற மெம்பர்களுக்கு ஏஜண்டாகவும் மற்றமெம்பர்கள் எஜமானாகவும் மதிகப்படவும்தகாது. ஏஜண்டுக்கு வந்த நிலைமை எஜமானுக்கு முண்டென்ற கட்சி இந்த சந்தர்ப்பத்தில் உதவாது. 26-மதராஸ் 545-ஐ உத்தேசிதது கும்பத்தலைவனை மற்ற மெம்பர்களுக்கு டிரஸ்டியாக மதிக்கப்படலாம். குடும்பத்தைச் சேர்ந்த மெம்பருக்கே இவ்விதமான நியாயத்தைப் பிரயோகித்து பங்காளியென்னும் நிலைமை கிடையாதென்று சொல்லும்பொழுது விபக்தனாய்ப்போன மெம்பருக்கு அதிக சிலாக்கியமான காரணம் யாதொன்றும் ஏற்பட்டதாகக் காணப்படவில்லை. வாதி விபக்தனாகு முன் வியாபாரத்திற்குப் பங்காளி என்ற நிலைமையை அடையத் தகாதென்றாலும் பின்னால் பிரிந்துபோனபடியால் அவன் வியாபாரத்தில் பங்காளியாக மாட்டான் 36. மதராஸ் 185-ன் தீர்மானம் உதவக்கூடியதல்ல. காலாவதி ஆக்டு 106-வது ஆர்டிகிலைப் பிரயோகிப்பதற்காக பங்காளிகளில் ஒருவன் குடும்பத்திலிருந்து விபக்தனாய் போனதினிமித்தம் மற்ற மெம்பர்களைப் பங்காளிகளாய்மதித்து மற்ற பங்காளிகள் அவர்களுடன் கூட்டமாய் வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தக் கடமைப்பட்டவர்களல்லவென்று தீர்மானித்து வியாபாரம் நின்றுபோனதாக மதிக்கப்படவேண்டிய காலம் ஏதென்று நிர்ணயிக்கும் சந்தர்ப்பத்தில்கொடுக்கப்பட்ட தீர்மான அபிப்பிராயம் தாவா கேஸின் சந்தர்ப்பத்திற்குப் பிரயோகப்படத் தகாது.

வாதி விபக்தனாய்ப்போனதும் குடும்பத் தலைவனைக் கணக்குக் கேட்டு கூட்டு வியாபாரத்தின் லாப நஷ்டத்தைக் கண்டுபிடிப்பதற்காக நடவடிக்கை எடுக்கச்சொல்லி தன் விகிதத்திற்குறிய பரிகாரம் தேடலாம். குடும்பத் தலைவன் வழிக்கு வாராத பட்சத்தில் கூட்டு வியாபாரத்தின் கொள் முதல் லாப நஷ்டம் இவைகளை ஒரு குடும்ப சொத்தாகக்காட்டி அதில் தன்னுடைய பங்கு விகிதத்தை பாகவியாஜ்ஜியத்தில் கோறிக்கொள்ளலாம்வியாபாரத்திலிருந்துவரவேண்டிய பாகத்தை வசூலிப்பதற்காக ரிஸீவர் நியமிக்கப்படலாம். ரிஸீவரிடம் வந்து சேரும் தொகையில் வாதி தன் பங்கு விகிதத்தை அடையலாம். ரிஸீவர் வியாபாரத்தில் போடப்பட்டிருக்கிற துகைகளை வசூலிக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய சிரமத்தையும் வழக்குகள் நீடித்து வளருவதையும் அசந்தர்ப்பமாகச் சொல்லிப் பிரிந்துபோன மெம்பரை கூட்டு வியாபாரத்தின் போக்குமுறையைத் தடுக்கும்படி இடம் கொடுப்பது உசிதமான காரியமல்ல.

குடும்ப சொத்துக்கள் பலவற்றில் மற்றவர்களுடன் செய்யப்படும் கூட்டு வியாபாரம் என்ற அயிட்டமானது பாகப்பிரிவினையில் யாராவது ஒரு மெம்பருடைய விகிதத்திற்குச் செலவும் சந்தர்ப்பமுண்டு. அப்படியிருக்க சொத்துக்களைப் பிரிவினை செய்துகொள்ளாமலே விபக்த நிலைமையை அடைய யோக்கியமுள்ள வாதி குடும்ப வியாபாரத்தைக் கெடுத்துத் தன் விகிதத்தை அடைவதற்கு காண்டிராக்டு ஆக்டின் முறையை நேரான பங்காளியின் நிலைமையில் அனுஷ்டிக்கத் தகாதென்றும் சொல்லவேண்டும். இத்தியாதி காரணங்களால் லட்டர்ஸ் பேடெண்டு அப்பீல் தள்ளுபடியாச்சுது. 34. M. L. J. 271.

—0—

ஜஸ்டிஸ் ஓல்ட் பீல்டு & பேக்வெல்-J.

L.P.A. 233 of 1916-28 பிப்ரவரி & மார்ச்சு 14 - 1917.

ஸ்ரீனிவாஸய்யர் vs சேஷய்யர்.

நடைபெறாத நிறைவேறாதவிவாக உடன்படிக்கையை அனுஸரித்துப் பெண் வீட்டுக்காரர் மாப்பிளை வீட்டாரிடம் கொடுத்திருந்த பரிசத் தொகையின் அட்வான்ஸை வாபிஸ் அடையும்பொருட்டு செய்த தாவாவில் விவாகத்தின் பரிசத்தைப் பற்றிய உடன்படிக்கை சட்டவிரோதமென்றும்ஜனப் பொது நலத்திற்கு விரோதமென்று இருதரத்தாராலும்ஆதாரங்கொள்ளப்பட்டதில் காண்டிராக்டு ஆக்டு 65-வது பிரிவின்படி வாதி பரிகாரம் தேடுவதற்கு உடன்படிக்கை ஏற்பட்டகாலத்தில் அது சட்ட விரோதமென்று தெரியாமல் பின்னல் தெரியவந்ததாக வாதி ருஜுப்படுத்தியிருக்கவேணுமென்றும்எதிரிகள் அந்நியாயத்தைப்பாராட்டி வாதியின் தாவாவை ஆட்சேபிக்கவேண்டுமானல் சட்டவிரோதமான தாவா உடன்படிக்கையின் ஒரு முக்கியமான பாகத்தையாவது தாங்கள் பூர்த்தி செய்துவிட்டதாக ரூபிக்கவேண்டுமென்றும் இந்தக் கேஸில் லா பாயிண்டான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

வாதியாகிய P. R. ஸ்ரீனிவாஸய்யரின் மைனர் சகோதிரியை 1-ம் பிரதிவாதியின் மகனும் 2-ம் பிரதிவாதியின் சகோதரனுமாகிய இராமன் என்ற பையனுக்கு விவாகம் செய்து முடிப்பதாய் நிச்சியித்து பையனுக்கு ரூ 1,100 வரதட்சணையாக பெண் வீட்டார்கொடுத்து விடவேண்டுமென்றும் பையனுடைய பந்துக்கள் பெண்ணுக்கு சில ஆபரணங்களை அணியவேண்டுமென்று பரஸ்பரமாய் ஒப்பிக்கொண்டதின் பேரில் வாதிவசையராபையனுக்காக ரூ 400-ஐ அட்வான்ஸாகக் கொடுத்தார். விவாகம் நிறைவேராதபடியால் வாதி மேற்கூறிய அட்வான்சை வாபிஸ் அடையும் பொருட்டு சப்கோர்ட்டில் ஸ்மால்காஸ்தாப்பில் தாவாசெய்தார்

பிரதிவாதிகள் எதிரான்ஸரில் ரூ 400-ம் ஒப்பந்தகாலத்தில் தகுந்த வயதுக்குவந்த இராமன் என்றபையனிடம்கொடுக்கப்பட்டதாகவும் அவன் வேறு குடும்பத்திற்கு ஸ்வீகாரம் புகுந்தமையால் தங்களுக்கு அத்தொகையால் யாதொரு நன்மை லாபமும் கிடையாதென்றும் தவிர 2-ம் பிரதிவாதி ஒப்பந்தத்திற்குப் பார்ட்டியல்லவென்றும் இராமன் என்ற பையனுக்சாக 1-ம் பிரதிவாதி ஒப்பந்தம் செய்துகொண்டமையால் வாதிக்கு 1-2-ம் பிரதிவாதிகளின் பேரில் வியாஜ்ஜிய மூலமே கிடையாதென்றும் (2) வாதி உடன்படிக்கையை மீறி நடந்தமையால் (நிறைவேற்றத் தவறினதால்) அட்வான்ஸ் ரூ 400 - ஐயும் வாபிஸ் அடையத்தகாதென்றும் (3) ஒப்பந்தமே ஜனப் பொது நலத்திற்கு விரோதமாகையால் வியவகாரத்திற்கு ஆதாரங் கொள்ளத்தகாத சட்ட விரோதமான நடவடிக்கையென்றும் ஆட்சேபித்தார்கள்.

சப்கோர்ட்டார் 2-வது பாயிண்டைப்பற்றி மட்டும் வாதிக்கு விரோதமாய்த் தீர்மானித்து அதாவது பிரதிவாதிகளால் தடையாதொன்றும் கிடையாதென்றும் வாதி ஒப்பந்தப்படி நடக்கத் தவறிப்போனதாகவும் ஆகவே அட்வான்ஸை வாபிஸ் அடையத் தகாதென்று அபிப்பிராயப்பட்டு மற்ற பாயிண்டுகளைப்பற்றி யாதொரு தீர்மானமும் கொடுக்கத் தேவையில்லையென்று சொல்லி வாதியின் தாவாவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

வாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்து நூதனமாக பிராதில் காணப்படாத அம்சத்தை ஆதாரங்கொண்டு அதாவது காண்டிராக்டு ஆக்டு 65-வது பிரிவின்படி சட்ட விரோதமான ஒப்பந்தத்தின்பேரில் செலுத்தப்பட்ட தொகையை வாபீஸ் கேட்டு வாங்கத் தகுமென்று ஆர்கியுமெண்டு செய்தார். ஜஸ்டிஸ் பர்ன் துரையவர்கள் அந்த வாதம் செய்ய அனுமதி கொடுக்காமல் சப்கோர்ட்டாருடைய தீர்மானத்தைக் காயப்படுத்தி விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். தவிர மேற்கூறிய காண்டிராக்டு ஆக்டின் சட்டப் பிரிவை ஆதாரங் கொண்டும் வாதி அட்வான்ஸ் தொகையை வாபிஸ் அடையத் தகாதென்ற அபிப்பிராயமும் கொடுத்தார்கள்.

வாதி லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் செய்ததில் சப்கோர்ட் தீர்மானத்தை ரத்து செய்து

பிரதிவாதிகளின் மற்ற இரண்டு எதிராட்சேபனைகளின் சம்பந்தமாக (1) வாதியுடன் பிரதிவாதிகள் ஒப்பந்தம் செய்துகொண்டார்களா அல்லது அவ்விருவரில் எவருடன் ஒப்பந்தம் செய்துகொண்டார், அல்லது இராமன் என்ற பையனுடன் ஏஜண்டு மூலமாக அல்லது ஏஜண்டில்லாமலே ஒப்பந்தம் செய்துகொண்டாராவென்றும் (2) ஒப்பந்தம் சட்ட விரோதமென்ற வாதியின் கக்ஷிக்குச் சமாதானமாக பிரதிவாதி உடன்படிக்கையின் முக்கியமான அம்சங்களை நிறைவேற்றிவிட்டாரா இல்லையாவென்றும் தேவையானல் புது சாட்சியம் கேட்டு விஜாரித்துத் தீர்மான முடிவு செய்யவேண்டுமென்று சப்கோர்ட்டாருக்கு ரிமாண்டு உத்தரவளித்தார்கள்.

லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் தீர்ப்பின் நியாயங்களாவன:—

உடன்படிக்கையை யார் தவறினதென்ற பாயிண்டைப்பற்றி விஜாரணை ஆரம்பம் செய்யுமுன் பிரதிவாதிகளின் பேரில் தொடர வியாஜ்ஜியமூலமுண்டாவென்று நிர்ணயித்திருக்கவேண்டியது நியாயமாகும். இந்த வாதத்தைப் பிரதிவாதிகள் போராடாமல் விட்டதாகச் சொல்லக்கூடாது. வாதி செலுத்திய ரூ. 400-ரையும் இராமன் என்ற பையன் வாங்கிக்கொண்டு போய்விட்டதாக சாட்சியம்சம் விடப்பட்டிருக்கிறது. ஸ்மால்காஸ் நம்பரானதால் இஷ்யூ ஏற்படவில்லை.

இரண்டாவதாக வாதியின்பேரில் மீறி நடந்ததாக சப்கோர்ட்டார் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். அதை ஒப்புக்கொள்ளவேண்டியது நியாயமானலும் உடன்படிக்கையே சட்ட விரோதமானதென்று ஆட்சேபித்து அதை வாதி நிறைவேற்றத் தவறி விட்டதாகப் பிரதிவாதிகள் குறை கூறக்கூடாது.

மூன்றுவதாக தாவா உடன்படிக்கை சட்ட விரோதமென்றும் செல்லத்தகாதென்றும் இருதரத்தாரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ரூ. 1,100-ரையும் பெண்ணுக்காவது அவளால் ஏற்படும் சந்ததிக்காவது ஸ்திரமான ஜீவனாம்சமாக கொடுக்கப்படவேண்டுமென்று ஒப்பந்தம் செய்யப்படவில்லை. பெண்ணை விவாகத்தில் சேர்த்து வைப்பதற்காகப் பிரதிவாதிகளுக்கு இனம் (பிரதிபிரயோஜனம்) என்பதைத் தவிர்த்து வேறு வகையாகப் பிராதில் காணப்படவில்லை. ஆகவே இது செல்லத்தகாத உடன்படிக்கையென்றே சொல்லவேண்டும். 32 மதராஸ் 185, 37 மதராஸ் 393. இவைகளைப் பார்க்கவும்.

இப்படிப்பட்ட சட்ட விரோதமான உடன்படிக்கையை முன்னிட்டுச் செலுத்தின தொகையைப் பிரதிவாதிகள் வைத்துக்கொள்ளலாமாவென்று தீர்மானிக்கவேண்டியது முக்கியமான பாயிண்டாகும், பிராதில் இது விஷயமாய் பிரஸ்தாபமில்லை. சப்கோர்ட்டாரும் பிரதிவாதிகளால் ஏவப்பட்டும் யோஜிக்கத்தேவையில்லையென்று மறுத்துவிட்டார்கள். ரிவிஷன் ஸ்டேஜிலும் அதைப்பற்றி வாதிக்கக்கூடாதென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் சட்ட விரோதமென்று தெரிந்து வாதி உடன்படிக்கை செய்துகொண்டபடியால் காண்டிராக்டு ஆக்டு 65-வது பிரிவின்படி வாதி தான் செலுத்திய அட்வான்ஸை வாபிஸ் அடையத்தகாதென்று ரிவிஷன் ஜட்ஜியவர்கள் அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள்.

சட்ட விரோதமான உடன்படிக்கையானலும் அதன்படி செலுத்தப்பட்ட தொகையை வாபிஸ அடையாதபோனலும் அந்தப்படி முழுவதிலும் அல்லது ஒரு முக்கியமான பாகத்தையாவது பிரதிவாதிகள் செய்து முடித்திராத பட்சத்தில் பிரதிவாதிகள் அட்வான்ஸ் தொகையை வாபிஸ் செய்யவேண்டுமென்று மேற்கூறிய பொதுவான நீதி முறைக்குப் புறநடையாக இந்த லட்டர்ஸ் பேடெண்டு அப்பீலில் வாதிக்கப்படுகிறது. 26 சான்ஸரி D 616-ஐக் கவனித்து இந்த வாதத்தை ஒப்புக்கொண்டு உடன்படிக்கையின் முக்கியமான அம்சமாகிலும் பிரதிவாதிகளால் நிறைவேறப்பட்டதா வென்ற பாயிண்டைப்பற்றித் தீர்மான முடிவடைவதற்காக சப்கோர்ட்டாருக்கு ரிமாண்டு செய்யவேண்டியது நியாயமாகும். வாதி பிராதில் தாவா உடன்படிக்கை சட்ட விரோதமென்று சொல்லாமல் எதிரி ஒப்புக்கொண்ட நிமித்தம் அதன்படி நடக்காதபடியால் அட்வான்ஸைக் கொடுத்துவிடவேண்டுமென்று வாதிக்கலாமா வென்ற பாயிண்டுக்கு வாதி சட்ட விரோதமான உடன்படிக்கையை

நிறைவேற்றக் கோறவும் அல்லது அதன் ஆதாரத்தைக்கொண்டு யாதொரு பரிகாரத்தை தேடவும் இந்த தாவா செய்யாமல் உடன்படிக்கை ஏற்பட்டதற்குமுன் இருந்த நிலைமையில் தன்னை நிறுத்திக்கொள்ளப் பிரியப்பட்டதினால் தான் செலுத்தின தொகையை வாபிஸ் கேட்கிறார் என்றும் ஆகவே பிராதில் உடன்படிக்கை சட்ட விரோதமென்று சொல்லத் தேவையில்லையென்றும் சமாதானம் சொல்லலாம்.

உடன்படிக்கை சட்ட விரோதமென்று பிரதிவாதிகளின் ஆட்சேபனையாகிறது. அவ்வித ஆட்சேபனையும் செய்து வாதி அதைப் பூர்த்தி செய்யத் தவறிவிட்டார்களென்று புகார்சொல்லி எதிர் வழக்காடக்கூடாது. ஆனால் சட்ட விரோதமென்ற ஆட்சேபனையுடன் தாங்கள் அதின் முக்கிய அம்சத்தைச் செய்து முடித்துவிட்டதாகவும் சொல்லவேண்டும். அப்படிச் சொல்லத் தவறின எதிரான்ஸரைத்தான் குறைகூறவேண்டும். ஆகையால் அது விஷயமாய் மறு விசாரணைக் கனுப்புவதவசியமாகுமென்று சொல்லவேண்டும்.

பிரதிவாதிகள் தங்களுக்கு நஷ்டப்பரிகாரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். உடன்படிக்கைக்குத் தாங்கள் பார்ட்டிகளல்லவென்று வாதம் செய்தமையால் வாதியின் தவறுதலால் ஏற்பட்ட நஷ்டத்திற்கு தாவா செய்ய வியாஜ்ஜிய மூலம் கிடையாதென்று சொல்லவேண்டும்.

இத்தியாதி காரணங்களைச் சொல்லி ரிமாண்டு உத்தரவளித்த ஜஸ்டிஸ் ஒல்ட் பீல்டு துரையவர்களின் அபிப்பிராயத்திற்கு ஒற்றுமையாக ஜஸ்டிஸ் பேக்வெல் துரையவர்கள் தீர்ப்பளித்தார்கள். 34 M. L. J. 282.

—o—

புல்பெஞ்சு கேஸ்.

சீவ்ஜஸ்டிஸ், பேக்வெல் &

குமாரஸ்வாமி சாஸ்திரிகள் - J. J.

(மங்களூர் ஜில்லா)

L.P.A. 283 of 1916 - 21 ஸெப்டெம்பர் 1917.

மஞ்சேசுவரகிருஷ்ணய்யா

vs

வாஸுதேவமல்லய்யர்.

ப்ராபர்டி ஆக்டு 52-வது பிரிவின் கருத்தைப் பிரயோகித்து, யாதொரு சொத்து விஷயமாய் தாவா பெண்டிங்கிலிருந்த காலத்தில் ஒற்றுமையாக ஒரேவிதமான எதிர்வாதம் செய்து வருகிற பிரதிவாதிகளில் ஒருவர் செய்த பராதீனத்தைக் கூட்டுப்பிரதிவாதியின் வாரிஸ்கள் சட்ட விரோதமான பராதீனமென்றும் கூட்டுப் பிரதிவாதிக்கு முந்திய டிக்கிரீயில் ஏற்பட்ட நன்மையைப் பராதீனம் பெற்றவர் நிராகரிக்கத்தகாதென்றும் பிந்திய தாவாவில் ஆட்சேபித்த கட்சியைப் புல்பெஞ்சார் அங்கீகரிக்கவில்லை. வாதியின்பேரில் ஒரேவிதமான எதிர்வாதம் செய்தவர்களுக்குள் யாதொரு விவாதமும் இல்லாதிருக்க அந்த வியாஜ்ஜியத்தில் ஏற்பட்ட தீர்மானம் பின்னால் அவ்விருவருக்குள் ஏற்படும் வழக்குகளுக்குத் தடையாக மாட்டாதென்றும் சொல்லப்பட்டது.

மஞ்சுநாதய்யா என்றவர் தாவா சொத்துக்களை 1-ம் பிரதிவாதிக்கு விக்கிறயம் செய்து கொடுத்தார். கிரயத்தொகையில் ரூ. 1000 ஒரு பிராமிஸரி நோட் வகையில் செல்லாகவேண்டியதற்காக நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் ரூ. 500 ரெஜிஸ்டராபீஸில் செலுத்தப்படவேண்டியதாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டும் ரெஜிஸ்டராபீஸில் ரூ. 500 செலுத்தப்படவுமில்லை. அண்டிமாண்டு கணக்கு தீர்ந்ததாகவும் ஏற்படவில்லை. ஆகவே ரூ. 1500 - ம் விக்கிறயத்தின் செல்லாகாத பிரதி பிரயோஜனமாக மதிக்கப்பட்டதற்குவேறு சில சந்தர்ப்பங்களும் சேர்ந்தன. 1-ம் பிரதிவாதி கிறயம் பெற்ற கையோடு வாதிகளின் தகப்ப

னுக்கு ஷை சொத்துக்களை அடமானம் வைத்து மேற்கண்ட விக்கிரயத் துகையைச் செலுத்துவதற்காக ரூ. 1500-ம் இதரமான செலவுக்காக ரூ. 500-ஆக மொத்தமாய் ரூ 2000-கடன் வாங்கிக் கொண்டதாக தஸ்தவேஜுகள் எழுதிக் கொடுத்துவிட்டார். 2-ம் பிரதிவாதி மஞ்சுநாதய்யாவின்பேரில் ஏற்பட்டிருந்த டிக்கிரீயை நிறைவேற்றுவதற்காக 1-ம் பிரதிவாதியால் ஷை யாருக்குச் சேரவேண்டிய விக்கிரய பாக்கித் துகையை ஜப்தி செய்து 1-ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தின்பேரில் உண்டாகியிருந்த ஆதீனபாத்தியதையை ஏலத்திற்கு கொண்டுவந்து தாமே ஏல விக்கிரயம் பெற்றார். ஆகவே 2-ம பிரதிவாதி 1-ம் பிரதிவாதியின் ஸ்தானத்திற்கு வந்தார். அடமான தஸ்தவேஜை எழுதி வாங்கிக்கொண்டவராகிய வாதிகளின் தகப்பனுக்கு உத்தரவாதம் சொல்லக்கடவராகினர். இவ்வித சந்தர்ப்பத்தில் மஞ்சுநாதய்யா தனக்குறிய விக்கிறய பாக்கித் துகைக்கு தாவா சொத்தின்மீது ஹக்கு பாத்தியதை அடமானதாரனுடைய பாத்தியதையினால் மறைந்து போகுமோவெனச் சந்தேகித்து தான் எழுதிக்கொடுத்த விக்கிரயத்தையும் 1-ம் பிரதிவாதியால் வாதியின் தகப்பனுக்கு ஏற்பட்ட அடமானத்தையும் ரத்து செய்ய வேண்டுமென்றும் தனக்குப் பிரதிப் பிரயோஜனம் கொடுக்கப்படவில்லையென்றும் அடமானம் பவந்தமென்றும் காரணம் சொல்லி 1-ம் பிரதிவாதியுடன் ஷை யாருடைய மனைவியை 2-ம் பிரதிவாதியாகவும் அடமானம் பெற்ற வாதிகளின் தகப்பனை 3-ம் பிரதிவாதியாகவும்சேர்த்து தாவா செய்தார். இந்த தாவாவில் 1-ம் பிரதிவாதியும் அடமானதாரும்சேர்ந்து ஒற்றுமையாக விக்கிரயத்தை உறுதிப்படுத்தும் பொருட்டும் அடமானத்தைக் காயப்படுத்தும்பொருட்டும மஞ்சுநாதய்யாவின் தாவா தப்பென்றும் இரண்டு தஸ்தவேஜுகளும் மெய்யான பிரதிப் பிரயோஜனத்தோடு கூடிய நடவடிக்கைகளென்று எதிர்வாதம் செய்தார்கள். அசல் அப்பீல் இரண்டிலும் விக்கிரயம் யதார்த்தமானநடவடிக்கையென்றும் ஆனால் அடமானம் மோசக்கருத்தாயும் பிரதிப் பிரயோஜனமில்லாமலும் எழுதிக்கொடுக்கப்பட்டதென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஹைகோர்ட்டார் 2-வது அப்பீல் செய்த அடமானதாருக் கனுகூலமாக மஞ்சுநாதய்யாவைப்பற்றின மட்டில் அடமானம் செல்லத்தகுமென்றும் அதாவது அவருடைய விக்கிரயம் நிலைத்துப்போனதால் அடமானத்தைப்பற்றி அவர் பொய்யென்று வழக்காடத் தகாதென்றும் ஆனால் அவருக்குச் சேரவேண்டிய விக்கிரய பாக்கித்துகை ரூ. 1000 என்பதை மட்டும் ஒப்புக்கொள்ளப்பட்டு அடமானதாருக்கு முன் பாத்தியதையாக அத்துகைக்கு தாவா சொத்தில் ஹக்கு ஏற்படுத்தி அடமானதாரின் பாத்தியதையை உறுதிப்படுத்தினார்கள். விக்கிரயம் பெற்ற 1-ம் பிரதிவாதி இந்த 2-வது அப்பீலில் எக்ஸ்பார்ட்டியாகநின்றுவிட்டார். அது நியாயமே.

அடமானதாரின் மக்களாகிய வாதிகள் 1-ம் பிரதிவாதியின பாத்தியதையை விக்கிரயம் பெற்றவர்களாகிய 2-3-ம் பிரதிவாதிகளிடமிருந்து அடமான கடன் பாக்கியை வசூலிக்கும்பொருட்டு தாவா செய்ததில் முக்கியமாய் எதிர்வழக்காடின 3-ம பிரதிவாதி முந்திய தாவாவில் 1-ம் பிரதிவாதியின் ஸ்டேட்மெண்டுக்கு விரோதமாக அடமானம மெய்யான நடவடிக்கையல்லவென்றும் ஆகவே வாதிகளின் தாவா தள்ளுபடியாகவேண்டியதென்றும் ஆட்சேபித்தார். சப் கோர்ட்டாரும் அப்பீலில் ஜில்லா கோர்ட்டாரும் 3-ம் பிரதிவாதியின் எதிராட்சேபனையை நிராகரித்து வாதிகளுக்கு அனுகூலமாய் டிக்கிரீயளித்தார்கள். அதாவது முந்திய தாவாவில் அடமானம் யதார்த்தமென்று 1-ம் பிரதிவாதி ஒப்புக்கொண்ட நிமித்தம் 1-ம் பிரதிவாதியினிடமிருந்து பாத்தியங்கொண்டாடுகிற 2-3-ம் பிரதிவாதிகளும் அந்தத் தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டவர்களாக மதிக்கப்படவேண்டுமென்றும் தவிர முந்திய தாவா பெண்டிங்கிலிருந்தபொழுது 2-3-ம் பிரதிவாதிகளுக்கு பாத்தியதை உண்டானபடியால் ப்ராபர்டி ஆக்டு 52-வது பிரிவின்படி முந்திய தாவாவில் சேர்க்கப்பட்டிருந்த மற்ற பார்டிகளுக்குக் கிடைத்த பாத்தியதைக்கு விரோதமாய்த் தங்கள் பாத்தியதையைப் பாராட்டத் தகாதென்றும் ஆகவே முந்திய தாவாவில் வாதிகளின் தகப்பனுக்கு அடமான பாத்தியம் நிலைத்துப்போனதால் அதை 2-3-ம் பிரதிவாதிகள் ஆட்சேபிக்கத்தகாதென்றும் தீர்மானம் கொடுத்தார்கள். ஹைகோர்ட்டில் 2-வது அப்பீலானதில் ஹானரபில் ஜஸ்டிஸ் ஒல்ட் வீல்டு துரை

அவர்கள் 3-ம் பிரதிவாதிக் கனுகூலமாயும் ஜஸ்டிஸ் பிலிப்ஸ் துரையவர்கள் வாதிக்கனுகூலமாகவும் வித்தியாஸமான அபிப்பிராயங் கொடுத்தார்கள். சட்டப்படி 3-ம் பிரதிவாதிக்கு விரோதமான டிக்கிரீ ஏற்பட்டது. அதன்பேரில் லட்டர்ஸ்பேடெண்டு அபபீல் செய்யப்பட்டு புல்பெஞ்சில் ஈரங்கியாகி ஜஸ்டிஸ் ஓல்ட் வீல்டு துரையவர்களின் தீர்மானமே சரியென்று சொல்லப்பட்டு 3-ம் பிரதிவாதிகள் முந்திய தாவாவின் தீர்மானத்தால் கட்டுப்பட்டவர்களல்லவென்று ஏற்பட்டது. மற்ற பாயிண்டுகளைப்பற்றி ஈரங்கி கேட்டுத் தீர்ப்பளிக்கும்படி அப்பீலானது ஜில்லா கோர்ட்டுக்கு ரிமாண்டாச்சுது. புல்பெஞ்சு தீர்மானத்தின் காரணச்சுருக்கமாவது:—

[3-ம் பிரதிவாதி ஹைகோர்ட் மட்டும் வந்து அடமானத்தை நிராகரிக்க மனந்துணிந்ததற்குக் காரணமாக முந்திய தாவாவில் கீழ்கோர்ட்டாருடைய அபிப்பிராயத்தில் அடமானம் பவந்தமென்றும் பிரதிப் பிரயோஜனமற்றதென்றும் 1-ம் பிரதிவாதியின் விக்கிறயத்தை நிலைநாட்டும் பொருட்டு செய்துகொண்ட ஏற்பாடென்றும் சொல்லப்பட்டதும் தவிர ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலிலும் அந்த அபிப்பிராயத்தை சரியானதென்று ஒப்புக்கொண்டுமிருக்கிறார். மஞ்சுநாதய்யா அடமானத்தை ஆட்சேபிக்கத்தகாதென்றும் விக்கிறயத்தை நிராகரிக்க முடியாமற் போனதால் விக்கிறயதாரன் செய்த அடமானத்தை மஞ்சுநாதய்யா ஆட்சேபிக்க ஏதுகாமில்லையென்று சொல்லி அவருடைய விக்கிறய பாக்கித்துகைக்கு ஹக்கு உண்டாக்கி அடமானத்திற்கு ஹைகோர்ட்டார் பலம் கொடுத்திருக்கிறார்கள். தவிர 1-ம் பிரதிவாதியும் அடமானம் மெய்யென்று ஒப்புக்கொண்டிருக்கிறார். விக்கிறயத்தை ஸ்தாபிக்கும்பொருட்டு அவ்விதமாய் ஒப்புக்கொள்ள நேரிட்டிருக்கலாம். விக்கிறயம் நிலைத்தபிறகு அதே வழக்கில் அடமானத்தை அடிக்க விவாதம் செய்யத்தகாது. இவ்விதமான சந்தர்ப்பத்தில் இந்தத் தாவாவில் 3-ம் பிரதிவாதியினிடமிருந்து பாத்தியமடைந்தவராய் 1-ம் பிரதிவாதி ஆடவேண்டிய வழக்கைத்தான் ஆடியிருக்கிறார். அதற்கு வாதிகள் 2-வது அப்பீலில் முக்கியமாய் மூன்றுவிதமான சட்டபாயிண்டுகளைச்சொல்லி ஆட்சேபனை சொல்லுகிறார்கள்.]

(ப—ர்) 1-ம் பிரதிவாதி பிந்திய தாவாவில் அடமானத்தை ஒப்புக்கொண்டமையால் 2-3-ம் பிரதிவாதிகள் அதைப்பற்றி ஆட்சேபிக்கத் தகாதென்ற (Estoppel) வாதம் சொல்லப்பட்டது. இது கீழ்கோர்ட்டுகளில் செய்யப்படாத வாதமாகையால் 2-வது அப்பீலில் முதல் முதல் ஆர்கியுமெண்டு செய்ய விடக்கூடாது.

இரண்டாவதாக அடமானம் நிஜமான நடவடிக்கையென்று முந்திய தாவாவில் தீர்மானிக்கப்பட்டதால் அதில் பார்டிகளாயிருந்த பிரதிவாதிகளின் ஸ்தானத்தை வகித்து வந்தார்கள் அந்தத் தீர்மானத்திற்குக் கட்டுப்படவேண்டுமென்று ரீஜுடிகேடா என்ற பாயிண்டை வாதித்தார்கள். அதுவும் பிரயோஜனமில்லாத வாதமென்று சொல்லவேண்டும். ஏனெனில் முந்திய தாவாவில் 1-ம் பிரதிவாதிக்கும் வாதிகளின் தகப்பனுக்கும் விவாதமான பாயிண்டு யாதொன்றும் ஏற்படவில்லை. அப்படிப்பட்ட பாயிண்டைப் பற்றிய தீர்மானம் ஒன்றும் கிடையாது. ஆகையால் இவ்விருவருடைய பிரதிநிதிகள் பின்னால் வழக்காடக்கூடாத முந்திய தீர்மானம் யாதொன்றும் கிடையாதென்று சொல்லவேண்டும். 11 பம்பாய் 216, 11 மதராஸ் 204 இவைகளைப் பார்க்கவும்.

மூன்றாவதாக யாதொரு தாவா பெண்டிங்கிலிருந்தபொழுது அதில் அமைந்திருக்கிற பார்ட்டிகள் தாவாசொத்துக்களை மற்றபார்ட்டிகளுடைய பாத்தியதைக்கு விரோதமாகப் பராதீனம் செய்யத் தகாதென்று ப்ராபர்டி ஆக்டு 52-வது பிரிவை ஆதாரங்காட்டி வாதிக்கப்படுகிறது. இந்த வாதம் மூன்று கோர்ட்டுகளிலும் செய்யப்பட்டதினால் முந்திய தாவா பெண்டிங்கிலிருந்தபொழுது 2-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதியின் விக்கிறய பாத்தியதையை ஏலமெடுத்திருக்கிறதாகத் தெரிகிறது. சொத்து விஷயமாய் தாவா பெண்டிங்கிலிருந்தபொழுது அதில் சம்பந்தப்பட்ட பார்ட்டியானவன் தாவாசொத்தை எதிராளிக்கு ஏற்படக்கூடிய பாத்தியதைக்கு விரோதமாய்ப் பராதீனம் செய்யக்கூடாதென்பது நியாயமே. எதிராளி என்ற பதத்திற்கு எதிர்வழக்காடுகிறவன் என்று வியாக்கியானமாகவேண்டும். முந்திய தாவாவில் 1-ம் பிரதிவாதியின் பாத்தியதையை விக்கிறயம் பெற்றவனுக்கு மேற்கூறிய நியாயத்தைப் பிரயோகிக்கத்தகாது. நிறைவேற்றும் நடவடிக்கையில் விக்கிறயம் பெற்றவனுக்கும்

பார்ட்டியினால் ஸ்வதாவாக விக்கிரயம்பெற்றவனுக்கும் வித்தியாஸமான கருத்து ப்ராபர்டி ஆக்டு 52-வது பிரிவில் அடங்கியதல்ல. ஆனால் 1-ம் பிரதிவாதியும் வாதிகளின் தகப்பனும் எதிர் வழக்காடின பார்ட்டிகளல்ல. 2-ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட விக்கிரயம் வாதிகளின் தகப்பனுடைய பாத்தியதைக்கு விரோதமான நடவடிக்கையென்று சொல்லத்தகாது. ஏனெனில் 1-ம் பிரதிவாதியும் வாதிகளின் தகப்பனும் ஒருவருக்கொருவர் எதிராளிகளான நிலைமையில் நின்று வழக்காடவில்லை. மற்ற பார்ட்டிகளுக்கு என்ற பதத்திற்கு மேற்கூறிய வியாக்கியானத்தைத் தவிர்த்து விசாலமான கருத்தைக் கொடுத்தால் தாவா முடியுமட்டும் பார்ட்டிகளில் ஒருவன் அதில் சேர்க்கப்பட்டிருக்கிற எதிர்வழக்காடாத யாதொரு பரிகாரத்தையும் அபேட்சிக்காத பார்டிகளுடைய பாத்தியதைக்கும் குறைவு வரும்படியாக தாவா சொத்தைப் பாராதீனம் செய்யக்கூடாத தடை முறை யுண்டாகும். முந்திய தாவாவில் ஏற்பட்ட தீர்மானம் அதே பார்ட்டிகளையும் அவர்களுடைய பிரதிநிதிகளையும் சதாகாலமும் கட்டுப்படுத்துமென்பது தான் ரீஜுடிகேடா வென்னும் நியாயம். அந்த நியாயமானது எதிர்வழக்காடின பார்ட்டிகளைத்தான் கட்டுப்படுத்துமென்பதுபோல் தாவா பெண்டிங்கிலிருந்தபொழுதும் எதிர்வழக்காடுகிற பார்ட்டிகள் தான் பின்னால் ஏற்படும் தீர்மானத்திற்குக் கட்டுப்படவேண்டிய காரணத்தால் ஒருவர் எதிரிக்கு விரோதமுண்டாகும்படி தாவா சொத்துக்களைப் பாராதீனம் செய்யக்கூடாதென்று சொல்லவேண்டும். ஆகவே எதிர் வழக்காடாத பார்ட்டிகளுடைய நடவடிக்கையின் விஷயமாய் ப்ராபர்டி ஆக்டின் நியாயத்தைப் பிரயோகிக்கத் தகாது. அதனால் 2-3-ம் பிரதிவாதிகளுடைய பாத்தியதை முந்திய தாவா பெண்டிங்கிலிருந்தபொழுது ஏற்பட்டாலும் வாதிகளின் தகப்பனுக்கு விரோதமான பாராதீனமாய் மதிக்கத்தகாது. ஆகவே 2-3-ம் பிரதிவாதிகள் வாதிகளின் தாவாவை ஆட்சேபித்து எதிர்வழக்காடலாயக்குள்ளவர்களென்றுசொல்லத்தகும் ஹானரபில் ஜஸ்டிஸ் ஓல்ட் வீல்டு துரையவர்களின் உத்தரவை அனுஷ்டிக்கும்படி புல்பெஞ்சு தீர்மானம் கொடுக்கப்பட்டது. 34 M. L, J 263.

இந்தக் கேஸின் தீர்மானத்தால் நாம் அறியக்கூடிய தகவலாவது ஒருவன் கிரயம்பெற்று அதை அடமானம் வைத்த பிறகு விக்கிரயம், அடமானம் ஆகிய இரண்டு நடவடிக்கைகளையும் செல்லத்தகாதென்று கொண்டுவரப்பட்ட வியவகாரத்தில் கிரயதாரனும் அடமானதாரனும் ஒற்றுமையாக கிரயத்தை உறுதிப்படுத்தும்பொருட்டு இரண்டு நடவடிக்கைகளும் வாஸ்தவமென்று எதிர்வழக்காடினாலும் பின்னால் கிரயதாரன் அல்லது அவன் கீழ் பாத்தியமடைந்தவன் அடமானத்தை பவந்தமென்று ஆட்சேபிக்கலாமென்று ஏற்படுகிறது.

இரண்டாவதாக 2-ம் பிரதிவாதி மஞ்சுநாதய்யாவின்பேரில் ஏற்பட்டிருந்த டிக்கிரீபாக்கிக்காக விக்கிரய பாக்கித்தொகையை ஜப்தி செய்து 1-ம் பிரதிவாதியின் விக்கிரய பாத்தியதையை ஏலத்திலமைந்தகாரணத்தால் டிக்கிரீ பாக்கி தீர்ந்துபோச்சுதா வென்று யோஜிக்குமிடத்து 2-ம் பிரதிவாதியின் ஏல நடவடிக்கையும் விக்கிரயமும் முந்திய தாவா பெண்டிங்கிலிருந்தபொழுது ஏற்பட்டது. ப்ராபர்டி ஆக்டு 5-வது பிரிவின்படி மஞ்சுநாதய்யாவின் பாத்தியதைக்கு விரோதமாக 2-ம் பிரதிவாதியின் விக்கிரய பாத்யதை பிரயோகிக்கத் தகாது. மஞ்சுநாதய்யாவுக்குறிய பாக்கித்தொகைக்கு ஹக்கு ஹைகோர்ட் டிக்கிரீயினால் ஏற்பட்டிருக்கிறபடியால் அதற்கு முன் 2-ம் பிரதிவாதி ஏல விக்கிரயம் பெற்ற நடவடிக்கையின் பலனை யோஜிக்கத்தகும். ஆனால் 2-ம் பிரதிவாதி டிக்கிரீயின்படி சேரவேண்டிய தொகைக்கு மார்க்கமுண்டாகி விட்டதாகச் சொல்லலாம், மஞ்சுநாதய்யாவுக்கு வரவேண்டிய தொகை ஜப்தியாகியிருந்தமையால் அவருக்கு ஹைகோர்ட் டிக்கிரீயை அனுஸரித்துக் கிடைத்த பரிகாரத்தின் நன்மையைப் பொருத்து ஜப்தி செய்த 2-ம் பிரதிவாதி தன் பாக்கியை வசூலித்துக்கொள்ளலாம்.

மூன்றாவதாக அடமானம் பவந்தமென்ற கீழ் கோர்ட் அபிப்பிராயத்தை அங்கீகரித்து அடமானம் வைத்த 1-ம் பிரதிவாதி அதை மெய்யென்று ஒப்புக்கொண்ட நிமித்தம் மேற்கண்ட விதமாய் டிக்கிரீயளித்திருக்கிறார்கள். மஞ்சுநாதய்யாவுக்கு விக்கிரய நடவடிக்கையின் விஷயமாய் வியவகாரம் விரோதமாய்ப் போனதினிமித்

தம் அடமானத்தைப்பற்றிக் கவலைப்படவேண்டியதவசியமில்லை. தனக்குறிய தொகைக்குமுன் பாத்தியதை ஏற்பட்டதே போதுமானதென்று திருப்தியடைந்திருக்கிறார். இவ்வித சந்தர்ப்பத்தில் அடமானம் சிலைத்தும் பின்னால் 2-3-ம் பிரதிவாதிகள் அடமானத்தை நிராகரிக்க சட்ட சம்மதமுண்டாயிற்றென்று நமது நேயர்கள் கவனித்தறியவேண்டும். (ப-ர்)

—o—

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர்.

(தென்மலையாளம் ஜில்லா)

C. R. P. 444 of 1918 - 10 அக்டோபர் 1918.

குன்னிகோயஹாஜீ vs அஸன்பாவாஹாஜீ

பிரிட்டிஷ் இலாகாவுக்கு வெளியில் எழுதிக்கொடுக்கப்பட்ட பிராமிஸரி நோட்டின்மீது இந்திய சட்ட முறைப்படி ஒட்டவேண்டி ஸ்டாம்புத்தொகை செலுத்தாமலே பிரிட்டிஷ் இந்திய கோர்ட்டுகளில் தாவா செய்யலாம்.

பிரதிவாதிகள் மெக்காவில் யாதொரு ஸ்டாம்பும் ஒட்டாமல் வாதியின் பெயருக்கு ஒரு பிராமிஸரி நோட் எழுதிக்கொடுத்திருந்தார். அந்த நோட்டின் பேரில் வாதி தென் மலையாளம் சப் கோர்ட்டில் தாவா செய்ததில் ஸ்டாம்பாக்டு 19-வது பிரிவின் கருத்தைக்கொண்டு தாவா நோட்டை ருஜுபாகத்தி லேற்றுக்கொள்ளாமல் வாதியின் பிராதை டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள், அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் தாகல் செய்ததில் சப் கோர்ட்டாருடைய உத்தரவு ரத்தாகி தாவா நோட்டுகளை ருஜுவில் ஏற்றுக்கொண்டு சட்டப்படி பைசலளிக்கவேண்டுமென்று சப்கோர்ட்டுக்கு ரிமாண்டு உத்தரவனுப்பப்பட்டது. ஹைகோர்ட்டாருடைய உத்தரவின் காரணச் சுருக்கமாவது:—

தாவா நோட்டுகளை ருஜுவில் ஏற்றுக்கொள்ளத் தகாதென்பதற்கு சப்கோர்ட்டார் யாதொரு அதாரிடியும் எடுத்துக்காட்டவில்லை. பிரிட்டிஷ் இலாகாவுக்கு வெளிப்பிரதேசங்களில் எழுதப்படும் தஸ்தவேஜுகளை செல்லுவைக்கவும், மாற்றிக்கொடுக்கவும் அல்லது ஒப்புக்கொள்ளவும் யாதொரு குறிப்புகள் செய்யப்படும் காலத்தில் பிரிட்டிஷ் ஸ்டாம்புகள் ஒட்டப்படவேண்டுமேயல்லாது மற்றப்படிக்கு அவ்வித நோட்டுகளின் மீது தாவா செய்யுமுன் பிரிட்டிஷ் ஸ்டாம்பு ஒட்டவேண்டிய அவசியமில்லையென்று 8 M.L.J. 182, 22 மதராஸ் 337-க்குச் சரியான 9 M.L.J. 135-இவைகளில்உரைக்கப்பட்டிருக்கிறது. தாவா தஸ்தவேஜுகள் மெக்காவில் செல்லத் தகுமாயின் இந்தியாவில் அதன்மீது தாவா செய்யும்பொழுது பிரிட்டிஷ் சட்டத்திற்குகந்த ஸ்டாம்பு ஒட்டத் தேவையில்லையென்று சொல்லவேண்டும். 8 M. L. J. 182-ல் ஹானரபில் ஜஸ்டிஸ் ஷெப்பர்டு துரையவர்கள் சொல்லியிருக்கிறபடி இவ்வித தாவாவில் டிக்கிரீ ஏற்படும் காலத்தில் அவசியமானால் ஸ்டாம்பு ஒட்டச் செய்யலாம், மெக்காவில் இவ்விதநோட்டின்பேரில் யாதொரு ஸ்டாம்பு ஒட்டாமலே தாவா செய்யலாமாவென்று துலங்கவில்லை. என்றாலும் சப்கோர்ட்டார் தாவா நோட்டுகளை அடியோடு பிரயோஜனமற்றதென்று நிர்ணயித்த முறை சரியானதல்ல. மேற்கூறிய அதாரிடிகளின் நியாயத்திற்கு விரோதமாகவு மிருக்கிறது. ஆகையால் சப்கோர்ட்டாருடைய உத்தரவை மாற்றி வாதியின் தாவாவைத் திரும்பவும் பயிலுக்கெடுத்து சட்டப்படி பைசலளிக்கவேணுமாய்த் தீர்மானிக்கப்பட்டது. 36 M. L. J. 188.

ஜஸ்டிஸ் ஏயிலிங் & கிருஷ்ணன் - J.

(தஞ்சாவூர் ஜில்லா)

C. R, P. 35 of 1918 - 3 &-8 அக்டோபர் 1918.

சீதாபாய் vs ராதாபாய்

தகப்பனைப்பெற்ற பாட்டியாரின் சவாக்ஷணையிலுள்ள மைனரின் சொத்துக்களைக் கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட கார்டியனாகிய மைனரின் தாயினிடம் ஒப்பிவிக்கும்படி ஷெ யாள் கொடுத்த விண்ணப்பத்தின்பேரில் ஜில்லா கோர்ட்டார் உத்தரவளித்தது சரியென்றும்பாட்டியாருக்கு ஷெ சொத்தில் ஏதேனும் ஹக்கிருந்

தால் அசல் தாவா செய்துகொள்ளலாமென்றும் ஹைகோர்ட்டார் ரிவிஷன் கேஸ்கியில் உத்தரவளித்தார்கள்.

ஒரு ஹிந்துபுமான் இறந்தபின் அவனுடைய தாயார் ஒரே மைனருக்கு கார்டியனாக ஷியானுடைய சொத்துக்கள் யாவற்றையும் தன் வசத்தில் வைத்துக்கொண்டு கார்டியன் அண்டு உவார்டு ஆக்டு முறைப்படி தன்னை மைனருக்கு கார்டியனாக நியமனம் செய்யவேண்டுமென்று ஜில்லா கோர்ட்டில் விண்ணப்பம் கொடுத்தாள். ஜில்லா கோர்ட்டார் சகலவித சந்தர்ப்பங்களையும் கவனித்து மைனரின் தாயாரை அதாவது காலஞ்சென்ற புமானுடைய மனைவியை மைனருக்கு கார்டியனாக நியமித்துவிட்டார்கள். அதன் பேரில் ஷியாள் ஆக்டின் 41 (3)-வது பிரிவின்படி மாமியாரின் சுவாதீனத்திலிருந்த மைனருக்குச் சொந்தமான ஒரு வீட்டைத் தன் வசப்படுத்திக் கொடுக்கும்படி ஜில்லா கோர்ட்டுக்கு விண்ணப்பம் கொடுத்ததில் தாவா வீட்டைத் தனக்கு தன் மகன் சொந்தப்படுத்திக்கொடுத்துவிட்டதாகவும் தவிர இந்தக் கேஸின் சந்தர்ப்பத்தில் மனுதார் 41 (3)-வது பிரிவின்படி விண்ணப்பம் கொடுப்பது சரியான முறையில்லையென்றும் மாமியார் எதிராட்சேபனை செய்தாள். ஜில்லா கோர்ட்டார் இருவித ஆட்சேபனைகளையும் நிராகரித்துவிட்டு தாவா வீட்டை மனுதாரின் வசம் ஒப்பிவிக்கும்படி கட்டளையிட்டார்கள். அதன்பேரில் எதிரி ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்ததில் ஜில்லா கோர்ட்டாருடைய உத்தரவு காயமாகி ரிவிஷன் விண்ணப்பம் செலவுடன் தள்ளுபடியாச்சுது.

கார்டியன் என்ற பதத்திற்கு 4 (2)-வது பிரிவில் ஏற்பட்டிருக்கிற வியாக்கியானத்தில் மைனரின் தாயாராகிய மனுதாரியும் உரிமையான கார்டியனாக மதிக்கப்படலாம்: தவிர மனுதாரியானவள் கோர்ட்டாரால் நியமிக்கப்பட்ட கார்டியனாகவுமிருக்கிறாள். எதிரியும் கார்டியன் நிலைமையிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறாள். இவ்வித சந்தர்ப்பத்தில் ஜில்லா கோர்ட்டார் செய்த உத்தரவானது அதிகார வரம்புக் குட்பட்டதாகவே சொல்லவேண்டும். எதிரி தனக்குறிய பாத்தியதையைப் பற்றி அசல் தாவா செய்துகொள்ளலாம். மைனரின் சொத்தை கார்டியனிடம் ஒப்பிவித்துவிடவேண்டியது நியாயமாகும்.

கார்டியன் உவார்டு ஆக்டு 48-வது பிரிவின் அம்சத்தில் 41 (3)-வது பிரிவின்படி செய்யப்படும் கட்டளைகள் அடங்கவில்லையென்றும் ஆகவே அவ்விதமான கட்டளைகளின் நேர்மைக் குறைவைப்பற்றி அசல் தாவா செய்யலாமென்றும் அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது. அதாவது ஜில்லா கோர்ட்டார் எதிரியின்மீது 41-(3)-வது பிரிவின்படி தாவா சொத்தைப்பற்றி அளித்த உத்தரவானது சரியானதல்லவென்று நிர்ணயிக்கும்பொருட்டும் அசல் தாவா செய்யத் தகுமென்று சொல்லப்பட்டது, 36 M.L.J. 189.

—o—

சீவ்ஜஸ்டிஸ் & நேபியர் J.

(மதராஸ்)

O. S. A. 4 of 1918 - 4 டிசம்பர் 1918.

அபிஷியல் அஸையனி

VS

மேடா அண்டு ஸன்ஸ்

அதிகமான கடன் மொல்லையில் அவஸ்தைப்படுகிற வியாபாரி நிர்ப்பந்தப்படுத்துகிற ஒரு கடனாளிக்கு சரக்குகளை விற்பனை செய்து கொடுத்து கடனுக்கு மேல் நின்ற தொகையைக் கொண்டு வியாபாரத்தை மேல் நடத்தின நடவடிக்கையானது மதராஸ் இன்ஸால்வென்ஸி ஆக்டு 56-வது பிரிவின் கருத்துப்படி ஆட்சேபிக்கத் தக்க நடத்தையல்லவென்றும் அதாவது மற்ற பாக்கிதாரர்களை மோசம் செய்யும் கருத்துடன் ஒரு பாக்கிதாரனுக்குத் தன் சொத்துக்களைக்கொண்டு கடனைத்தீர்க்கிற நடவடிக்கை 56-வது பிரிவின்படி ஒழுங்கீனமென்றும் சட்டவிரோதமென்றும் சொல்வதுபோல் மேற்கூறிய வியாபாரியின் நடத்தையைப்பற்றி புகார் செய்யத் தகாதென்று இந்தக் கேஸில் நிர்ணயிக்கப்பட்டது.

இன்ஸால்வெண்டாய்த் தீர்மானிக்கப்பட்ட முத்தையப்ப செட்டி என்றவர் ரத்ன வியாபாரம் செய்து மிகுந்த கடனாளியாகியும் வியாபாரத்தை நிறுத்த மனமில்லாதவராய் சென்னையிலுள்ள பாக்கிதாராகிய மேடா அண்டு சன்ஸ் கம்பெனியாருடைய உண்டியலுக்காகச் செலுத்தக்கடவதான தொகை ரூ 36,062, கணக்கு பாக்கி ரூ. 3000-ஆகிய மொத்தக்கடனையும் கெடுத்தேதிகளில் செலுத்த முடியாதபடியால் மிகுந்த நிர்பந்தம் செய்த ஷை கம்பெனியாருக்குத் தன்னுடைய ரத்னங்களைப் பற்பல நாட்டுக்கோட்டை செட்டிமார்களிடம் கொதுவை வைத்திருப்பதாகவும் அவைகளை கிரயத்திற்கு வாங்கிக்கொண்டு கொதுவைக் கடன் போக உண்டியல்களுக்குறிய தொகையை எடுத்துக்கொள்ளும்படி சொன்ன யோஜனையையும் மேடா வீட்டார் தற்கால ரத்ன வியாபார நிலைமை துக்கலாக இருப்பதையும் கவனித்து அந்த ஏற்பாடுக்கு ஒப்புக்கொண்டு மொத்தத்தில் ரூ. 2,87,000-க்கு ரத்னங்களை விக்கிரயத்திற்கு வாங்கிக்கொண்டார்கள். இதனால் முத்தைய செட்டியின் கையில் ரூ. 41000-மிகுதியாக வந்து சேர்ந்தது. குதவை வைத்த நகைகளுடன் வேறு சில நகைகளும் சேர்த்து விக்கிரயமாகி யிருக்கிறது. இந்தத் தகவல் மேடா வீட்டாருக்குத் தெரியாதென்று காணப்படுகிறது. நகைகளைக் கிரயம் செய்ய ஆரம்பித்த காலமுதல் வீவில் வாரண்டில் பிடிபடுமட்டும் இடையில் ரூ. 71.000-வரையில் வேறு சில பாக்கிதாரர்களுடைய கடனையும் தீர்த்திருக்கிறார். மற்ற சில பாக்கிதாரர்களுக்குப் பின்னால் கடனைத் தீர்ப்பதாய் சாக்குச்சொல்லி வந்திருக்கிறார். அதனால் மிகுந்த கடனாளியாகியும் கடனைத் தீர்க்க மார்க்கமில்லையென்று தெரிந்தும் தன் வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தி வந்திருக்கிறதாகத் தெரிகிறது. அவ்விதமாய் நடத்திவந்து சிற்சில பாக்கிதார்களுக்கு மட்டும் கடனைத் தீர்த்துவிட்டு மற்றவர்களுக்கு யாதொரு ஐவேஜும் வைக்காமல் கையை விரித்துவிட்டது மோச நடவடிக்கையாகுமாவென்ற பாயிண்டு ஹானாபில் ஜஸ்டிஸ் கவுட்ஸ்டிராட்டர் துரையவர்களின் முன் மேடா வீட்டாருக்கு செய்த விக்கிரய நடவடிக்கையை ரத்து செய்ய வேண்டுமென்று அபிஷியல் அஸைனியவர்கள் கோறிக்கொண்ட விண்ணப்ப விசாரணை காலத்தில் வாதிக்கப்பட்டு இன்ஸால்வெண்டின் விக்கிரய ஏற்பாடுகள் மோசக்கருத்துடன் செய்யப்பட்டவைகளல்லவென்றும் மதராஸ் டவுன் இன்ஸால்வென்ஸி ஆக்டு 56-வது பிரிவின் கருத்துக்குள் அடங்காத விஷயமென்றும் சொல்லி அபிஷியல் அஸைனியாரின் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். 55-வது பிரிவின் அம்சத்தைப் பிரயோகிக்க விக்கிரயத்தை ரத்து செய்வதற்கிடமில்லையென்று சொல்லப்பட்டது. ஏனெனில் மேடா வீட்டாருக்கு முத்தய்ய செட்டியின் இன்ஸால்வெண்டான நிலமையின் தகவல் தெரியாது. இரண்டு அவர்கள் சரியான விலை கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். மற்ற பாக்கிதார்களை மோசம் செய்யவும் தாமதப்படுத்தவும் செய்த என விக்கிரய நடவடிக்கையல்ல. ஆகவே 55 வது பிரிவின் நியாயத்தையும் பிரயோகிக்கத் தகாதென்று சொல்லப்பட்டது. அதன்மேல் அபிஷியல் அஸைனீ அவர்கள் அப்பீல் செய்ததில் அசல் கோர்ட்டாருடைய உத்தரவு சரியானதென்று காப்பபடுத்தப்பட்டது. அப்பீல் தீர்மானத்தில் சொல்லப்பட்ட முக்கியமான காரணமாவது:—

மற்ற பாக்கிதார்கள் பம்பாயிலிருப்பதாகவும் சென்னையிலுள்ள மேடா வீட்டாருக்கு மட்டும் கடனைத் தீர்த்துவிடலாமென்ற கருத்துடன் ரத்னங்களை விக்கிரயப்படுத்த ஆரம்பித்ததாகச் சொல்லப்படுகிறது. ருஜுபாகத்தைக் கவனித்துப் பார்த்தால் வியாபாரம் நின்றுபோகக்கூடாதென்ற சொந்த நன்மையைப்பற்றிய யோஜனையைக் கொண்டு வியாபாரம் நடைபெற்று வருவதற்கு இடையூறாக வரக்கூடிய ஸ்தலத்திலுள்ள பாக்கிதாரனுடைய கடனைத் தீர்த்துவிடலாமென்று ரத்னங்களை விக்கிரயம் செய்யத் துவக்கினதாகத் தோன்றுகிறது. இவ்வித நடத்தையானது 56-வது பிரிவின் கருத்திலடங்கியதல்லவென்று சொல்லவேண்டும். ஒரு பாக்கிதாரனுக்குமட்டும் கடனைத் தீர்த்து (அவனுக்கு நஷ்டம் வாராதபடிக்கு) பார பட்சமாய் நடந்தால் மட்டும் அவ்வித நடத்தை சட்ட விரோதமாகும்.

ஆகவே ஆபிஷியல் அஸைனியவர்களின் அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது. 36, M. L. J. 196.

—o—

எய்லிங் & கிருஷ்ணன்-J.J.

(மதுரை ஜில்லா)

A. S. 128 of 1917-19 எப்ரல் 1918.

அல்லா பிச்சை ராவுத்தர் vs பாப்பாத்தியம்மாள்

யாதொரு அனுமதியன்னியில் யாதொரு சொத்து மானேஜ் மெண்டை வகித்துவந்தவர் எஸ்டேட்டின் வருமானத்தைப்பற்றிக் கணக்குக் காட்டப் பிணைப்பட்டவரல்லவென்றும் அவர் கைவசம் வந்த தொகைகளை உரியவர்களுக்கு வாபிஸ் செய்ய வேண்டியவராகுமென்றும் மகம்மதிய குடும்பத்தைச் சேர்ந்த வாரிஸ்களுக்குக் குறித்த பாகம் ஏற்பட்டிருப்பதால் தங்கள் தங்கள் விகிதத்தை அடைவதற்குத் தனியான வியாஜ்ஜிய மூலம் தனித்தனியென்றும் அனைவரும் ஒன்று சேர்ந்து கூட்டுப்பங்காளிகளாய் ஒரே வியாஜ்ஜிய மூலத்தைக் காட்டி தாவா செய்யத் தகாதென்றும் இந்த அப்பீல் கேஸில் தீர்மானிக்கப்பட்டது. சஞ்சியப்ப ராவுத்தர், ஷேக் மகமது ராவுத்தர் என்ற இரண்டு சகோதரர்கள் ஏராளமான சொத்துக்களை சம்பாத்தியம் செய்தார்கள். ஷேக் மகமது 1894-லும் சஞ்சியப்பா 1901-லும் இறந்துபோனார்கள். சஞ்சியப்பாவுக்கு ஒரு மனைவியும் ஒரு மகனும் ஒரு மகளும் வாரிஸ்களானார்கள். ஷேக் மகமதுக்கு மனைவியும் ஒரு புத்திரியும் வாரிஸானார்கள். ஷேக் மகமதின் புத்திரிக்கு விவாகமாகி மருமகன் சஞ்சியப்ப ராவுத்தருக்குப் பின் குடும்ப மெம்பர்களுக்காக சொத்துக்களை மானேஜ்மெண்டுசெய்து வந்தார். சில காலங்களுக்குப் பின் அவருடைய நடத்தை ஒழுங்காயில்லையென்று அதாவது வருமானங்களைச் சொந்தப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள ஆரம்பித்து வருவதைக் கண்டு தகரார் ஏற்பட்டு மத்தியஸ்தர்கள் நிர்ணயித்த பிரகாரம் சஞ்சியப்பாவின் வாரிஸ்கள் பெயருக்கு சில சொத்துக்களை மாற்றிக்கொடுத்துவிட்டார் என்றாலும் அவர்களுக்குச் சொந்தமான சில தொகைகளை மருமகன் வாபிஸ் செய்யாமல் ஆலஸ்யமாக இருந்ததை யிட்டு சஞ்சியப்பாவின் வாரிஸ்களாகிய மூவரும் வாதிகளாய் மருமகனை 1-ம் பிரதிவாதியாகவும் ஷேக் மகமதின் மனைவியையும் புத்திரியையும் 2-3-பிரதிவாதிகளாகவும் சேர்த்து மதுரை சப்கோர்ட்டில் தங்கள் சொத்துக்களை 1-ம் பிரதிவாதி மானேஜ்மெண்டு செய்து வந்த காலத்திற்குறிய கணக்குகளை ஆஜர்படுத்தித் தங்களுக்குறிய பாக்கி விகிதத்தைச் செலுத்தும்படி தாவா செய்தார்கள்.

1-ம் பிரதிவாதி எதிரான்லரில்தான் வாதிகளுக்காகிலும் அக்குடும்பத்திற்காகிலும் ஏஜண்டல்லவென்றும் ஆகவே கணக்குக் கொடுக்க வேண்டிய கடமையில்லையென்றும் ஆட்சேபித்தார்.

சஞ்சியப்பா இறந்தகாலமாகிய 1901-முதல் 1909-மட்டும் 1-ம் பிரதிவாதி குடும்ப சொத்துக்களை சீராய் மானேஜ்மெண்டு செய்து வந்ததாகவும் ஒவ்வொரு பாகஸ்தர்களுக்குறிய வருமான விகிதத்தை ஒருங்காய்ச் செலுத்திவந்தாரென்றும் அதற்குப் பின் சரிவர நடக்காதபடியால் 1909-க்குப் பின்னுள்ள வருமானத்திற்கும் வசூலுக்கும் கணக்குக் கொடுக்கவேண்டுமென்றும் சப்கோர்ட்டார் தீர்மானங் கொடுத்தார்கள். 1-ம் பிரதிவாதி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார். வாதிகளும் தங்களுக்கு விரோதமான அம்சத்திற்காக க்ராஸ் அப்பீல் தாகல் செய்தார்கள்.

ஹைகோர்ட்டார் கொடுத்த தீர்மானத்தின் ஸாராம்சமாவது:—

ஷேக் மகமதின் சொத்துக்களை மானேஜ்மெண்டு செய்யும்படி 1-ம் பிரதிவாதி வேண்டிக் கொள்ளப்பட்டிருக்கலாம். அதைப்பற்றி அவர் ஏஜண்டு ஸ்தானத்தை நிராகரிக்கவில்லை (தாவாவும் கிடையாது) சஞ்சியப்பாவின் மனைவியானவள் 1-ம் பிரதிவாதியுடன் நடந்துகொண்ட முறையால் 1-ம் பிரதிவாதி அவளுக்கு ஏஜண்டாக நடந்துகொண்டதாக அனுமானிக்கலாம்; ஏஜண்டாக நியமிக்கப்பட்டாரென்று பிரத்தியட்சமான ருஜுவாகமில்லாவிடில் கணக்குக் கொடுக்கவேண்டிய கடமையில்லையென்ற வக்கீல் மிஸ்டர் K. V. கிருஷ்ணஸாமி அய்யரவர்களின் வாதம் ஒப்புக்கொள்ளத் தகாது. ஆகவே 1-ம் பிரதிவாதிக்கு ஏஜண்டாக நடந்துகொண்டாரென்று மதிக்கப்படலாம். ஆனால் மைனர்களான 2-3-ம் வாதிகளுக்கும் அவர் ஏஜண்

டென்று சொல்லத் தகாது. மகமதிய லாப்படி தாயார் மைனர்களுக்கு சட்ட சம்மதமான கார்டியன்களல்ல. 37 மதராஸ் 514-க்குச் சரியான 23 M. L. J. 244-ஐப் பார்க்கவும். ஆகவே 1-ம் வாதி மைனர்களுக்காகவும் 1-ம் பிரதிவாதியை ஏஜண்டாக மானேஜ்மெண்டு செய்ய அனுமதி கொடுக்க லாயக்குள்ளவளல்ல, அதனால் 2-3-ம் வாதிகளின் சொத்து பாகத்தைப் பரிபாலித்து வந்த நடத்தையானது 1-ம் பிரதிவாதியின் ஸ்வயங்கிருதமான நடத்தையாக (தாயின் பாகத்தை மேல் பார்க்கும்பொழுது மக்களின் பாகத்தையும் மேல் பார்க்க நேரிட்டது) பாவிக்கப்படவேண்டும். இவ்வித சந்தர்ப்பத்தில் 1-ம் வாதியின் சொத்து பாகத்தைப் பற்றினமட்டில் கணக்குக் கொடுக்கவேண்டும். 2-3-ம் வாதிகளைப் பற்றினமட்டில் அவர்களுக்காக வசூலிக்கத் துகையை வாபிஸ் செய்யவேண்டிய கடமையை தவிர வேறுவிதமான பொறுப்பு யாதொன்றும் கிடையாது.

1-ம் வாதி மேஜராக 1-ம் பிரதிவாதியை மானேஜ்மெண்டுக்கு ஏற்படுத்தினாள். ஆகவே அவ்வித ஏஜண்டு நிலமை நீங்கின முதல் 3-வருஷங்களுக்குள் 1-ம் வாதி தாவா கொண்டுவந்திருக்கவேண்டும். 1911-ல் மத்தியஸ்தர்களிடம் சகலமான ஐவேஜுகளையும் ஒப்பிவித்த காரணத்தால் 1911-ல் ஏஜண்டு நிலைமையை விட்டு விலகிக்கொண்டாரென்று சொல்லவேண்டும். அது முதல் 3-வருஷங்களுக்குள் 1-ம் வாதி தாவா செய்யாத காரணத்தால்ஸ்தாவர சொத்து வருமானத்தைப்பற்றிய பரிகாரத்திற்குக் காலாவதி தோஷம் வந்து விட்டது. ஆனால் நிலுவை பாக்கிகளில் சிலவற்றை 1-ம் பிரதிவாதி காலாகாலத்தில் வசூலிக்காமல் அஜாக்கிறதையாக இருந்தாரென்று 1911-ல் மத்தியஸ்தர்கள் தீர்மானித்தபடியால் அந்த அவார்டில் கண்ட விதமான நஷ்டங்களை 1-ம் வாதி வசூலிக்க வியாஜ்ஜிய மூலம் 1911-ல் ஏற்பட்டபடியால் அதைப் பற்றி 1-ம் பிரதிவாதிக்கு 1-ம் பிரதிவாதியின் பேரில் பரிகாரம் கிடைக்கத்தகும். தாவாவில் கண்ட நிலுவை பாக்கிகளில் 1-ம் வாதியின் அஜாக்கிறதையால் அவளுக்கு நேர்ந்த நஷ்டத்திற்கு டிக்கிரீயளிக்கவேண்டும்,

2-3-ம் வாதிகளின் சொத்து விஷயமாய் சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்ட பிரகாரம் 1909 மட்டும் 1-ம் பிரதிவாதி வசூலித்த வருமானங்களைத் தன்னுடைய சொந்தப் பிரயோஜனப் படுத்திக்கொள்ளாதபடியால் அதற்குப் பின் அதாவது 1909-முதல் மத்தியஸ்தர்களிடம் யாவற்றையும் ஒப்புக்கொடுக்குமட்டும் மைனர்களுடைய சொத்து பாகத்திலிருந்து வசூலிக்கப்பட்ட துகையை 2-3-ம் வாதிகளுக்குச் செலுத்திவிடக் கடவதாகும் தவிர நிலுவை பாக்கிகளில் வாய்தா கடந்துபோகும்படி அஜாக்கிறதையாய் விட்ட பாண்டுகளின் துகையை 1-ம் பிரதிவாதி கட்டிக்கொடுக்கவேண்டியதென்று மத்தியஸ்தர்கள் தீர்மானித்தபடியால் மைனர்களுக்கு ஏஜண்டான நிலைமையை வகிக்காதவராயினும் மத்தியஸ்தர்களுடைய தீர்மானத்திற்குட்பட்டவராய் 1909-முதல் 1911-மட்டும் எந்த பாண்டுகள் காலாவதி கடந்துபோச்சுதோ அவைகளின் துகைக்கு ஜவாப்தாரியாகவேண்டும். 1911-க்குப் பின் கடனை வசூலிக்கும் கடமை 1-ம் பிரதிவாதியை விட்டுப்போனதால் அதற்குப் பின் ஏற்பட்ட நஷ்டங்களுக்காக 1-ம் பிரதிவாதியின் பேரில் பரிகாரமளிக்கத் தகாது வாதிகளின் க்ராஸ் அப்பீலும் தள்ளுபடியாகவேண்டுமென்பதற்கு மேற்கூறிய சந்தர்ப்பங்களும் அபிப்பிராயமுமே போதுமான காரணமாகும்.

சில வருமானங்களைப்பற்றி 1-ம் வாதிக்கு 1-ம் பிரதிவாதி கணக்குக் கொடுக்கக் கடமைபட்டவரென்றாலும் 1-ம் வாதிக்கு வியாஜ்ஜியமூலம் 1-ம் பிரதிவாதியின் ஏஜண்டு நிலமை நீங்கின உடன் உற்பத்தியாகிவிட்டது. 2-3-ம் வாதிகளுக்குறிய பரிகார முறை பிரத்தியேகமான வியாஜ்ஜிய மூலத்தையடுத்ததாகும். சப்கோர்ட்டார் மூன்று வாதிகளுக்கும் ஒரே வியாஜ்ஜிய மூலமென்றும் மூவருடைய சொத்துக்களும் கூட்டான அனுபோகமாதலால் மொத்தமாய் வசூலிக்கும் பாத்தியதை ஒரே காலத்தில் உண்டாகலாமென்று சப்கோர்ட்டார் 25-மதராஸ் 26-ஐ அனுஸரித்துச் சொல்லுகிறார்கள். ஆனால் மகமதிய குடும்பத்தவர்களுக்குத் தனித்தனியான பாகம் அமைக்கப்பட்டிருப்பதால் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பாகத்தை வசூலிக்கத் தனிமையான வியாஜ்ஜிய மூலமுடையவர்களாகச் சொல்லப்படவேண்டும்.

இத்தியாதிகாரணங்களால் சிலவருமான விஷயமாய் 1-ம் வாதிக்குக் காலாவதி தோஷத்தால்

பரிகாரம் கிடையாதென்றும் 2-3-ம் வாதிகளுக்கு 1909-முதல் 1911-முதல் வசூலான துகையை 1-ம் பிரதிவாதி செலுத்திவிடவேண்டியதென்றும்

நிலுவை பாக்கி சம்பந்தமான பாண்டுகளைப் பற்றினமட்டில் மத்தியஸ்தர்கள் தீர்மானித்த காலத்தில் 1-ம் பிரதிவாதியின் அஜாக்கிறதையால் காலாவதி கடந்துபோன பாண்டுகளின் துகைகளை 1-ம் பிரதிவாதி மூன்று வாதிகளுக்கும் கட்டிக்கொடுக்கவேண்டியதென்று தீர்மானிக்கப்பட்டது. 36 M.L.J. 184.

—o—

ஜஸ்டிஸ் எய்லிங் & கிருஷ்ணன்-J.

(கடப்பை ஜில்லா)

C.M.A. 84 of 1918 - 20 ஸெப்டெம்பர் 1918.

இந்திய காரியதரிசியார்

vs

தாதி ரெட்டி நாகய்யா

மாகாண இன்ஸால்வென்ஸி ஆக்டு 4 (b)-வது பிரிவின்படி ஒரு கடனாளி தன்னுடைய சொத்துக்களை ஒருவனுக்கு விக்கிறயம் செய்துவிட்டமையால் பாக்கிதாரனுக்கு ஐவேஜில்லாமற்போவதைப்பற்றி அக்கடனாளியின் விக்கிறய நடவடிக்கை நிஷ்பிரயோஜனமாகும்பொருட்டு அவனை இன்ஸால்வெண்டாக நிர்ணயிக்கவேண்டுமென்று விக்கிறயத்தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் பாக்கிதார்களில் ஒருவன் கொடுத்த விண்ணப்பத்தில் 1-ம் எதிரியாகிய கடனாளி 2-ம் எதிரிக்கு செய்த விக்கிறயம் நாமகார்த்தமென்றும் பிரதிப் பிரயோஜனம் கிடையாதென்றும் பாக்கிதார்களை மோசம் செய்யும் கருத்துடன் செய்த விக்கிறயமென்றும் கண்டிருந்தமையால் ஜில்லா கோர்ட்டார் மாகாண இன்ஸால்வென்ஸி ஆக்டு 4 (b)-வது பிரிவின் கருத்தில் அடங்கிய நடவடிக்கையாக தாவா விக்கிறயத்தை மதிக்கக்கூடாதென்றும் அதாவது தாவா விக்கிறயத்தால் சொத்தின் பாத்தியம் கைமாறிப்போகவில்லையென்றும் பவந்தமான தஸ்தவேஜுமட்டும் ஏற்பட்டபடியால் அதனால் பாக்கிதாரர்களுக்கு யாதொரு விக்கினமும் ஏற்படாதென்றும் அபிப்பிராயப்பட்டு மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

அதன்பேரில் ஹைகோர்ட்டில் மனு அப்பீல் தாகல் செய்யப்பட்டதில் ஜில்லா கோர்ட்டாருடைய அபிப்பிராயம் தப்பென்று சொல்லப்பட்டு கடனாளியின் விக்கிறய நடவடிக்கையால் சொத்து பாத்தியதை மாறிப்போனதாகவே பாவிக்கப்படவேண்டுமென்று கடனாளி எண்ணங்கொண்டமையாலும் பாக்கிதார்களை மோசம் செய்யும் கருத்தும் கொண்டவராய் தாவா விக்கிறய தஸ்தவேஜெழுதிக்கொடுத்தமையாலும் மாகாண இன்ஸால்வென்ஸி ஆக்டு 4 (b)-வது பிரிவிலடங்கிய நடவடிக்கையாக நிதானித்து பாக்கிதார் அவரை இன்ஸால்வெண்டாக நிர்ணயித்து விக்கிறயத்தை ரத்து செய்து கடனாளியின் சொத்துக்களை பாக்கிதாரர்களனைவருக்கும் விகிதப்படுத்திக் கொடுக்கும் வண்ணமாய் உத்தரவளிக்கலாமென்று அபிப்பிராயங்கொடுக்கப்பட்டு மனுவைத் திரும்பவும் ஜில்லா கோர்ட்டுக்கு ரிமாண்டு செய்யப்பட்டது. ஹைகோர்ட் தீர்மானத்தில் ஹானரபில் ஜஸ்டிஸ் கிருஷ்ணன் அவர்கள் எடுத்துக்காட்டிய முக்கிய காரணங்களாவன:—

கடனாளியாகிய 1-வது எதிரி கொடுத்த ஸ்டேட்மெண்டில் தான் மிகுந்த கடன தொல்லையில் அவஸ்தைப்படுவதாயும் தன்னுடைய சொத்துக்களைக் கடனாளிகள் அபகரித்துக்கொள்ளுவார்களென்ற பயத்தால் நாமகார்த்தமாக 2-ம் எதிரிக்குத் தன்னுடைய சொத்தை விக்கிறயப்படுத்திக் கொடுத்ததாயும் பிரதிப் பிரயோஜனம் யாதொன்றும் வாங்கவில்லையென்றும் 2-ம் எதிரி தன்னுடைய பந்துவாகையால் அவர் திரும்பி சொத்தை மறு விக்கிறயப்படுத்திக்கொடுத்துவிடுவாரென்று நம்பி அவருக்கு விற்பனை செய்துகொடுத்துவிட்டதாயும் ஒப்புக்கொள்ளுகிறார். 2-ம் எதிரியோ தான் சரியான கிறயத்துகை கொடுத்ததாகவும் விக்கிறயம் யதார்த்தமான நடவடிக்கையென்றும் ஸ்டேட்மெண்டு கொடுத்திருக்கிறார்.

ஜில்லா ஜட்ஜியவர்கள் யாதொரு ருஜு அம்சம் எடுக்காமல் மனுதார் விக்கிறயத்தை நேம

கிட்டமாகச் செய்ததாய்ச் சொன்ன வசனத்தை ஆதாரங்கொண்டு அதனால் 4 (b)-வது பிரிவின் அம்சத்தைக் கருதக்கூடாதென்று விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். மனுதார் தன்னுடைய கடனைக்கொடுக்காமல் மோசம் செய்யும்பொருட்டு சொத்தை பராதீனம் செய்திருப்பதாய்ச் சொன்ன பாயிண்டை ஜில்லா ஜட்ஜியவர்கள் கவனிக்கவில்லைபோலும்,

பாக்கிதார்களை மோசம் செய்யும்பொருட்டு யாதொரு சொத்தை மற்றொருவரின் கைவசத்தில் ஒப்புக்கொடுத்துவிட்டால் மட்டும் அவ்வித நடவடிக்கையைக் காட்டி அவரை இன்ஸால்வெண்டாகத் தீர்மானிக்க மனுகொடுக்கலாமென்று (1869) L. R. Exch 159-ல் விளம்பியிருக்கிறது. ஜங்கம சொத்தைப்பற்றிச் சொல்லப்பட்ட மேற்கூறிய அதாரிடியானது ஸ்தாவர சொத்தைப்பற்றியும் பிரயோகிக்கலாம். ஆனால் இந்தக் கேஸில் ஜில்லா கோர்ட்டார் தாவா விக்கிரய ஏற்பாட்டை (நிஷ்பிரயோஜன) வீணான நடவடிக்கையாக மதித்தது பிசகு. மேல்பார்வைக்கும் சட்டக் கருத்திலும் சொத்து பாத்தியதை மாறிப்போய்விட்டதாகவே தாவா விக்கிரயத்தால் ஏற்படவேண்டுமென்று இருதரத்தாரும் கருத்துக்கொண்டிருக்கிறார்கள். (மறு விக்கிரயத்தால் அந்த பாத்தியதை திரும்பிக்கொள்ளலாமென்ற நம்பிக்கையைத் தவிர்த்து மற்றப்படி விக்கிரயம் யதார்த்தமான விக்கிரயமாகவே மதிக்கப்பட்டிருக்கவேண்டும்.)

நாமகார்த்தமாய் விக்கிரயம் செய்துவிட்டதாக மனுதார் மனுவில் சொன்ன வசனத்தை அவர் கோரிக்கொண்டபடி விலக்கிவிட்டுப் பார்த்தபோதிலும் தாவா விக்கிரயம் வியர்த்தமாக ஏற்பட்டதென்று ஜில்லா ஜட்ஜியவர்களைப்போல் தீர்மானிக்க மனுவின் வசனங்கள் இடங்கொடுக்கவில்லை, விக்கிரயத்திற்குப் பிரதிப்பிரயோஜனமில்லாத போனாலும் பாக்கிதார்களை மோசம் செய்யும்பொருட்டு விக்கிரயம் ஏற்பட்டதாக மனுதார் சொல்லுகிறார்கள். 1-ம் எதிரி போதான் தொகை செலுத்தி விக்கிரயம்பெற்றதாக சொல்லுகிறார். ஆகவே சொத்து பாத்தியதை கைமாறிப்போனதாக இருதரத்தாருடைய வாதத்தாலும் ஏற்படும்பொழுது 4 (b)-வது பிரிவின் அம்சத்திலடங்கிய நடவடிக்கையாக மதித்து விண்ணப்பத்தை வாங்கி கேட்டு ருஜூ அம்சத்தைக் கவனித்துப் பைசலளிக்கவேண்டியது நியாயமாகும்.

பாக்கிதாரனாகிய மனுதாரனுக்கு தாவா விக்கிரயத்தால் யாதொரு உபத்திரவமும் கிடையாதென்றும் பலந்தமான நடவடிக்கையாதலால் சொத்தின்பேரில் தொடருவதற்கு யாதொரு அப்பியந்தரமும் கிடையாதென்று சொல்லப்படுகிறது. பாக்கிதாரை மோசம் செய்யும்பொருட்டு ஏற்பட்ட விக்கிரயமென்று மனுதார் ருஜூப்பந்தத் தவறினால் பாக்கியை வசூலிக்க மார்க்கமில்லாமற்போய்விடும். இவ்வித அசந்தர்ப்பமே மாகாண இன்ஸால்வென்ஸி ஆக்டின்படி மனுக்கொடுக்கப் போதுமான காரணமாகும் தவிர பிரதிப்பிரயோஜனமில்லாத விக்கிரயமாகவுமிருக்கிறது. கிரயத் தொகை வசூலானாலும் அதைத் தொடர்ந்து பாக்கியை வசூலிக்கலாம் அதவுமில்லை. ஆகவே மனுதாருக்கு விண்ணப்பம் செய்துகொள்ளக் காரணம் இன்னும் பலமாக ஏற்படுகிறது.

இத்தியாதி காரணங்களால் ஜில்லா கோர்ட்டாருடைய உத்தரவானது ரத்தாகி மனுவைத் திரும்பி பயிலுக்கெடுத்து சாட்சி விசாரணை செய்து சட்டப்படி பைசலளிக்கவேண்டுமென்று உத்தரவளிக்கப்பட்டது. 36 M. L. J 180.

—o—

ஜஸ்டிஸ் பிலிப்ஸ் & கிருஷ்ணன்-J.

(திருநெல்வேலி ஜில்லா)

ஸி. A. 279 of 1917-9 அக்டோபர் 1918.

கோபாலஸாமி நாயக் vs நம்மாள்வார் நாயக்

டிக்கிரீயான தொகையில் ஒரு பாகத்தைப் பெற்றுக்கொண்ட தகவலைக் கோர்ட்டில் ரிகார்டு செய்யாமல் டிக்கிரீயான தொகை முழுவதையும் வசூலிக்க நிறைவேற்றும் நடவடிக்கை தாகல் செய்த தேதியில் ஷியான்பேரில் நஷ்டப்பரிகாரத்திற்கு தாவா செய்ய வியாஜ்ஜிய மூலம் உற்பத்தியாகிறதென்றும் நிறைவேற்றும் நடவடிக்கையில் தொகை முழுவதையும் வசூலித்தபிறகு

தான் நஷ்டப்பரிகாரத்திற்கு வியாஜ்ஜிய மூலம் உற்பத்தியாகிறதென்ற வாதம் ஒப்புக்கொள்ளத் தகாதென்றும் நிறைவேற்றும் மனுவை தாகல் செய்கிற ஒவ்வொரு தடவையும் நூதனமாக வியாஜ்ஜிய மூலம் உண்டானதாகச் சொல்லி நஷ்டப்பரிகாரம் தேடலாமென்றும் செலுத்தின துகையைத் திரும்பவும் வசூலித்தால் மட்டும் நஷ்டம் ஏற்படுமென்ற வாதமும் ஒப்புக்கொள்ளத் தகாதென்றும் நிறைவேற்று மனு தாகல் செய்த மாத்திரத்தினால் ஏற்கனவே துகையைச் செலுத்தியிருக்கிற எதிரியின் மனதிற்கு வியாகூலமும் கவலையும் உண்டாகுமாதலால் அதையிட்டு நஷ்டப்பரிகாரம் கேட்க லாயக்குண்டென்றும் இந்தக் கேஸில் தீர்மானிக்கப்பட்டது.

1906-ல் 1-2-பிரதிவாதிகளின் தகப்பன் வாதியின்பேரில் டிக்கிரீ பெற்றிருந்தார் 1907-ல் வாதி அதற்காக ரூ. 500-ரொக்கம் செலுத்திவிட்டார். திரும்பவும் ரூ. 40 செலுத்தியதாகவும் வாதியின் கக்ஷியாகும். பிரதிவாதிகள் மேற்கண்ட துகைகளின் வரவைக்காட்டாமல் டிக்கிரீயான துகை பூராவுக்கும் 1910-ல் ஒரு தடவையும் அதன்பின் 1913-ல் ஒரு தடவையுமாக இரண்டு நிறைவேற்று மனுக்கள் தாகல் செய்தார்கள். 1914-ல் வாதி தான் செலுத்தியிருந்த துகையையும் சேர்த்துத் திரும்பவும் வசூலிக்க பிரயத்தனப்பட்ட எதிரிகளின்பேரில் 1913-ல் தாகலான நிறைவேற்று மனுத்தேதியில் வியாஜ்ஜிய மூலத்தைக் காட்டி கோவில்பட்டி டி-மு கோர்ட்டில் நஷ்டப்பரிகார தாவா செய்து தான் செலுத்தின துகைகளை டிக்கிரீயளித்த கோர்ட்டில் ரிகார்டு செய்யும்படி எதிரிகளின்மீது இஞ்சங்கிஷன கட்டளையளிக்கப்பட வேண்டுமென்றும் அப்படிச்செய்ய எதுகாமில்லாவிடில் தான் செலுத்திய துகை ரூ 540-யும் 100-க்கு 18-விகிதம் வட்டியுடன் வாபிஸ் செய்யும்படி எதிரிகளின்மீது டிக்கிரீயளிக்கவேண்டுமென்றும் கோரிக்கொண்டார்.

டி-மு கோர்ட்டார் முதலாவது கோரிக்கையைப் பற்றி ஸி.பி.ஸி, ஆர்டர் 21 ரூல் 2-ன்படி நிறைவேற்றும் நடவடிக்கையில் உத்தரவளிக்கப்படவேண்டுமேயல்லாது அசல் தாவாவில் அவ்விதமான கட்டளையிடக்கூடாதென்று அபிப்பிராயப்பட்டு மொத்தத்தில் வாதியின் தாவாவுக்குக் காலாவதி தோஷம் சொல்லி தாவாவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். ஜில்லா கோர்ட்டார் முதலாவது கோரிக்கையைப் பற்றி டி-மு கோர்ட்டாருக்கு ஒற்றுமையான அபிப்பிராயங்கொண்டவர்களாய் இரண்டாவது பரிகாரத்தைப் பற்றினமட்டில் வாதிக்கனுகூலமாய் செலுத்த திருப்திகரமாய் ரூபிக்கப்பட்ட துகையாகிய ரூ. 500-ரையும் அதற்கு வாதி கோரிய விகிதமான வட்டியையும் சேர்த்து வாதிக்கு வாபிஸ் செய்ய வேண்டியதென்று டிக்கிரீயளித்தார்கள். இது விஷயமாய் வாதியின் பரிகார முறைக்குக் காலாவதி தோஷமில்லையென்று ஜில்லா ஜட்ஜியவர்கள் தீர்மானித்தார்கள் போலவும்.

அதன்பேரில் பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் தாகல் செய்ததில் வாதிக்கு நஷ்டப்பரிகார முறைக்கு வியாஜ்ஜியமூலம் நிறைவேற்றும் நடவடிக்கை தாகலான தேதியில் உற்பத்தியாகிறபடியாலும் 1910-ல்தாகலான மனுத்தேதி முதல் கணித்தால் வாதியின் பரிகாரத்திற்கு காலாவதி தோஷமுண்டாகுமென்ற காரணத்தால் 1913-ல் திரும்பவும் எதிரிகள் நிறைவேற்று மனு தாகல் செய்ததை வியாஜ்ஜியமூலமாய் எடுத்துக்கொண்டு தாவா செய்யத் தகுமென்றும் நிறைவேற்றும் நடவடிக்கையில் துகை வசூலாகாதபடியால் ஜில்லா ஜட்ஜியவர்கள் வாதியால் செலுத்தப்பட்ட பூரா துகையையும் வாபிஸ் பெற லாயக்குள்ளவரென்று தீர்மானித்தது பிசகென்றும் யதார்த்தமாய் எதிரிகளின் நிறைவேற்றும் நடவடிக்கைகள் தாகலானதைப்பற்றி வாதிக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதோ அதை மட்டும் நிர்ணயித்து டிக்கிரீயளிப்பது நியாயமாகுமென்றும் சொல்லி காலாவதி பாயிண்டைப் பற்றி ஜில்லா ஜட்ஜியவர்களுக் கொற்றுமையாக 1913-ல் தாகலான மனுத்தேதியில் வியாஜ்ஜிய மூலம் உற்பத்தியானதாகச் சொல்லி 115-வது ஆர்டிகிலின்படி அது முதல் 3-வருஷங்களுக்குள் செய்யப்பட்ட இந்த தாவாவுக்குக் காலாவதி தோஷமில்லையென்றும் சொல்லி வாதிக்கு நேர்ந்த நஷ்டத்தை நிதானித்துச் சொல்லவேண்டுமென்று ஜில்லா ஜட்ஜியவர்களுக்கு உத்தரவளித்தார்கள். ஜட்ஜியவர்கள் வாதிக்கு நஷ்டம் யாதொன்றும் ஏற்படவில்லையென்று எழுதியனுப்பிய அபிப்பிராயத்தைக்கொண்டு வாதியின்

பிராதை முற்றிலும் தள்ளுபடி செய்து ஆனல் அவரவர் செலவை அவரவர் வகிக்கவேண்டுமென்று உத்தரவளித்தார்கள்.

ஹைகோர்ட் தீர்ப்பில் சொல்லப்பட்ட முக்கிய நியாயங்களாவன: —

டிக்கிரீ பெற்றவன் எதிரியினிடமிருந்து யாதொரு தொகையைப் பெற்றுக்கொண்டால் அதைப்பற்றிக் கோர்ட்டில் ரிகார்டு செய்து டிக்கிரீயில் செல்லுவைப்பதாய் தொகை பெற்றுக்கொள்ளுகிறவன் ஒப்புக்கொள்ளவேண்டும் அவ்விதமாய் ஒப்புக்கொள்ளாதபோதிலும் அவ்வித ஒப்பந்தத்தை இருவரும் கருத்தில் கொண்டவர்களாய்த் தொகை கொடுத்து வாங்கினதாகவே அனுமானிக்கலாம். ஆகவே தொகை பெற்றவர் அவ்வித ஒப்பந்தப்படி நடவாத பட்சத்தில் அதனல் ஏற்படும் நஷ்டத்திற்குப் பாத்திரனுகி விடுகிறன். பெற்றுக்கொண்ட தொகையைத் திரும்பவும் வசூலிக்கப் பிரயத்தனப்பட்டு நிறைவேற்றும் நடவடிக்கை தொடுத்த உடனே மேற்கூறிய ஒப்பந்தத்தை மீறி நடந்தவனுக மதிக்கப்பட்டு நஷ்டப்பரிகாரத்திற்குப்பாத்திரனுகிறன். அவ்வித பிரயத்தனப்படும் ஒவ்வொரு நடவடிக்கையின் காலத்திலும் வியாஜ்ஜியமூலம் நூதனமாய் உற்பத்தியாகிறது. தொகையைத் திரும்பவும் வசூலித்த தேதியிலும் நூதனமாக வியாஜ்ஜியமூலம் ஏற்படும்.

நஷ்டப்பரிமானம் சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி கணிக்கப்படவேண்டும். தொகை முழுவதும் திரும்பவும் வசூலிக்கப்பட்டால் முதலில் எம்மட்டில் தொகை செலுத்தப்பட்டிருந்ததோ அதுவே உயர்ந்த நஷ்டப்பரிமாணமாகும். மற்றப்படிக்கு வாதிக்கு யதார்த்தமாய் நேர்ந்த நஷ்டத்தைக் கவனித்து நஷ்டப்பரிகார டிக்கிரீயளிக்கவேண்டும். 5 மதராஸ் 397, M.L J 546, இவைகளைப் பார்க்கவும். 30 மதராஸ் 515-ல் வித்தியாஸமான அபிப்பிராயங் கொடுத்ததற்குக் காரணங்கள் யாதொன்றும் சொல்லப்படாததினல் அதைக் கவனிக்கத்தகாது. 3 M H C R 188-ம் பிந்திய புல்பெஞ்சு தீர்மானமாகிய 5 மதராஸ் கேஸினுல் அடிபட்டுப் போச்சுது.

வாதியின் முதலாவது பரிகாரத்தைப்பற்றி அசல் கோர்ட்டாரும் ஜில்லா கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாய் வாதிக்கு விரோதமாய்த் தீர்மானித்த 2-வது அப்பீலில் ஆட்சேபிக்கப்படவில்லை. ஆகவே அந்தப் பரிகாரத்தைப் பற்றிக் காலாவதி பாயிண்டை நிர்ணயிக்கத் தேவையில்லை. இத்தியாதி காரணங்களால் 2-வது அப்பீல் பிரதிவாதிகளுக் கனுகூலமாகவே முடிந்தது. 36 M. L. J. 175,

---

சீவ்ஜஸ்டிஸ் & சேஷகிரி அய்யர்-J.

(விசாகப்பட்டணம் ஜில்லா)

A. S. 360 of 1917 - 2 அக்டோபர் 1918.

ஸ்ரீ ராஜாராவ் வெங்கடமஹிபதி கங்காதர ராமராவ் பகதூர்காரு

VS

ஸ்ரீ ராஜாராவ் வெங்கடகுமார மஹிபதி ஸூர்யராவ் பகதூர்காரு

ஸி. பி ஸி. ஆர்டர் 1-நூல் 10-ன்படி தாகலான பிராதில் சேர்க்கப்பட்டிருந்த ஒரு பார்ட்டியை அனுவசியமென்று நீக்கி அவரைப்பற்றிய பரிகாரமளிக்கத் தகாதென்று தீர்மானித்த உத்தரவை ஒரு டிக்கிரீயாக மதித்து அந்த உத்தரவின்பேரில் அப்பீல் செய்யலாமென்று தீர்மானிக்கப்பட்டதும் தவிர விதவையின் ஜீவ்ய காலத்தில் அனந்தரவாரிஸ் நிலமையைக் கொண்டாடிய ஒருவன், மற்றொருவனும் அதேவிதமான பாத்தியதையைக் கொண்டாடவருவதால்அவன் அனந்தர வாரிஸல்லவென்று முதற்கூறியவன் டிக்லேரேஷன் பரிகாரம் கேட்டால் ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்டு 42-வது பிரிவின்படி அவ்வித பரிகாரமளிப்பது கோர்ட்டாருடைய யுக்தானுஸாரத்தைப் பொருத்ததாகும். தவிர அவ்வித பரிகாரமளிக்க மறுப்பதே தற்கால வழக்கமுறையாய் நடைபெற்று வருகிறது. விதவை இறந்துபோகும் காலத்தில் மேற்கூறிய இருவர்களையாரும் ஜீவனேடிராவிடில் மூன்றாவது மனிதன் அனந்தரவாரிஸ் பாத்தியங்கொண்டாடி சொத்தைக் கைவசப்படுத்த வருவான். ஆதலால் விதவையின் ஜீவதசையில் அனந்தர வாரிஸ் பாத்தியதையை இருவர் விவாதமாடி டிக்லே

ரேஷன் தீர்மான மடையக் கோர்ட்டார் இடங் கொடுக்கக் கூடாதென்றும் இந்த அப்பீலில் தீர் மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

பித்தபுரம் ஜமீன் வம்சத்தைச் சேர்ந்த காலஞ் சென்ற கனிஷ்டரொருவருடைய பாரியாளாகிய 4-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதியை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டதை 1-ம் பிரதிவாதியாகிய பித்தபுரம் ராஜா அவர்கள் அனந்தர வாரிஸ் நிலமையில் ஆட்சேபித்து ஷெ மாதுக்கு ஸ்வீ கார அதிகாரம் கிடையாதென்று சொல்லி ஸ்வீ காரத்தைசட்டவிரோதமென்றுதீர்மானிக்கும்படி காகிநாடா ஸப்கோர்ட்டில் டிக்லேரேஷன்தாவா செய்தார்கள். அவ்விதவையானவள் பித்தபுரம் ராஜா அவர்களைத் தன் கணவனுக்கு பந்துவல்ல வென்றும் அனந்தரவாரிஸுமல்லவென்றும் ஆகவே ஸ்வீகாரத்தைப்பற்றி ஆட்சேபித்து டிக் லேரேஷன் தீர்மானமடைய லாயக்குள்ளவரல்ல வென்று எதிரான்ஸரில் ஸ்டேட்மெண்டுகொடுத் துத் தன் கணவனுக்கு வாதி வகையராக்கள் அனந்தரவாரிஸ்களாகுமென்றும் தெரிவித்துக் கொண்டார்கள். ஆகவே வாதி வகையராக்கள் ஷெ வியாஜ்ஜியத்தில் தங்களையும் பார்ட்டிக ளாய்ச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று விண் ணப்பம் கொடுத்தார்கள். அந்த விண்ணப்பம் தள்ளுபடியாகிவிட்டது. அதாவது 1-ம் பிரதி வாதி 4-ம் பிரதிவாதியின் ஸ்வீகார அதிகா ரத்தை நிராகரிக்கச் செய்த தாவாவில் வாதிகள் அவசியமான பார்ட்டிகளல்லவென்றும் அவர் களை 1-ம் பிரதிவாதி செய்த வியாஜ்ஜியத்தில் பிரதிவாதிகளாய்ச் சேர்க்கத் தேவையில்லையென் றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்பேரில் வாதி வகையராக்கள் பித்தபுரம் ராஜா அவர்களை 1-ம் பிரதிவாதியாகவும் மூலபுருஷனுடைய பாரி யாளை 4-ம் பிரதிவாதியாகவும் ஸ்வீகார புத்தி ரனை 2-ம் பிரதிவாதியாகவும் சேர்த்து தாகல் செய்த இந்த வியாஜ்ஜியத்தில் 1-ம் பிரதிவாதி சமீப அனந்தரவாரிஸல்லவென்றும் அல்லது ... அனந்தர வாரிஸ்களில் சேர்ந்தவரேயல்ல வென்றும் 4-ம் பிரதிவாதி 2-ம் பிரதிவாதியை ஸ்வீகாரமெடுத்துக் கொண்டது செல்லத்தகா தென்றும் டிக்லேரேஷன் தீர்மானமடையக் கோறிக்கொண்டார்கள். 1-ம் பிரதிவாதியாகிய பித்தபுரம் ராஜா அவர்கள் ஸி.பி.ஸி. ஆர்டர் 1-ரூல்-10-ன்படி விண்ணப்பங்கொடுத்துத் தன்னை வாதிகள் பிரதிவாதியாய்ச் சேர்த்தது பிசகென் றும் அதாவது தன்மீது வாதிகள் தற்காலம் யாதொரு டிக்லேரேஷன் தீர்மானமும் அடை யத் தகாதென்றும் ஆட்சேபித்தார்கள். ஸப் கோர்ட்டார் ஷெ விண்ணப்ப சாங்கியில் 1-ம் பிரதிவாதியின் பெயரை பிராதிலிருந்து விலக்கி அவரைப் பற்றினமட்டில் வாதிகளின் கோறிக் கையை டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள் இந்த உத்தரவானது ஸி பி ஸி ஆர்டர் 1 ரூல் 10-ன் கீழ் ஏற்பட்டபோதிலும் வாதிகளுடைய பிரா தின் அம்சத்தில் ஒரு முக்கியமான பாகம் முடி வாய்ப் பைசல் செய்யப்பட்டதால் ஷெ உத்தர வானது ஒரு டிக்கிரீயாக மதிக்கப்பட்டு அதன் பேரில் அப்பீல் செய்யப்பட்டது. வாதிகளுக்கு மேற்கூறிய மனு உத்தரவின்பேரில் அப்பீல் பரிகாரம் கிடையாதென்ற பிரதம ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டு அப்பீலாகி சாங்கி கேட்கப் பட்டு வாதிகளின் அப்பீல் செலவுடன் தள்ளு படியாச்சுது. அதாவது 1-ம் பிரதிவாதியின் பெயரை சப்கோர்ட்டார் பிராதிலிருந்து விலக்கி னது நியாயமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

சீவ்ஜஸ்டிஸ் ஹானரபில் வாலிஸ் துரையவர் கள் கொடுத்த தீர்மானத்தின் காரணச் சுருக்க மாவது:—

ஸி. பி. ஸி. ஆர்டர் 1-ரூல் 10-(2)-ன்கீழ் செய் யப்படும் உத்தரவுகளுக்கு அப்பீல் முறை கிடை யாதென்றாலும் 1-ம் பிரதிவாதியின்பேரில் வாதி களுக்கு வியாஜ்ஜியமூலமே கிடையாதென்று சப்ஜட்ஜியவர்கள் நிர்ணயித்து அவரைப் பற்றின மட்டில் வாதிகளின் தாவாவை டிஸ்மிஸ்செய்து விட்டமையால் அவ்வித உத்தரவுக்கு அப்பீல் பரிகாரமுண்டென்று சொல்லத்தகும் இதுவிஷ யமாய் ஏற்பட்ட பிரதம ஆட்சேபனை ஒப்புக் கொள்ளத் தக்கதல்ல.

இரண்டாவதாக 2-4-பிரதிவாதிகள் எதிரான் ஸரில் வாதிகளின் அனந்தரவாரிஸ் நிலமையை ஆட்சேபிக்கவில்லை. அன்றியும் 1-ம்பிரதிவாதி கொண்டு வந்திருக்கிற வியாஜ்ஜியத்தில் 1-ம் பிரதிவாதி அனந்தர வாரிஸ்தாரல்லவென்றும் வாதிகள் தான் அனந்தர வாரிஸ் பாத்தியஸ்தர் களென்றும் ஸ்டேட்மெண்டுகொடுத்திருக்கிறார்.

கள்." அப்படியானால் வாதிகள் செய்கிற வியாஜ்ஜியத்தில் 1-ம் பிரதிவாதி அவசியமான பார்ட்டியல்லவென்று தெளிவாய்ச் சொல்லலாம். 1-ம் பிரதிவாதிக்கு அனந்தர வாரிஸ் பாத்தியதை கிடையாதென்று நிர்ணயிக்கும் பொருட்டு வாதிகள் டிக்லேரேஷன் தாவா செய்யத் தகுமானால் அவரை இந்த தாவாவில் பார்ட்டியாகச் சேர்க்கலாமென்று வாதிக்கப்படுகிறது. ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்டு 42-வது பிரிவின் சட்ட நியாயப்படி அனந்தர வாரிஸ்களான வாதிகளின் பாத்தியதையை நிராகரிக்கிற 1-ம் பிரதிவாதியின் பேரில் டிக்லேரேஷன் தாவா செய்யலாமென்றாலும் இவ்வித தாவாவில் டிக்கிரீயளிப்பது கோர்ட்டாருடைய யுக்தானுஸாரமாகும். ஆனால் இருவரில் சம்ப அனந்தாவாரிஸ்தார் எவரென்று தீர்னிக்கப்படவேண்டிய பாயிண்டுக்காக மட்டும் கோர்ட்டார் ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்டு 42-வது பிரிவின்படி தீர்மானமளிக்கிற சம்பிரதாயமே கிடையாதென்று சொல்லலாம். ஏனெனில் விதவை ஜீவதசை முடிந்த காலத்தில் இவ்விருவரும் மறித்து மூன்றாவது பார்ட்டி அனந்தர வாரிஸ் பாத்தியதைக்குப் பாத்திரராக வரலாம். அப்படியிருக்க 45-கல்கத்தா 510-க்குச் சரியான 34, M.L.J. 67-ல் பிரிவி கௌன்ஸிலார் தீர்மானித்தபடி வாதிகளுக்கும் 1-ம் பிரதிவாதிக்குமாக ஏற்பட்ட ஒரே பாயிண்டைப்பற்றி டிக்லேரேஷன் பரிகாரமளிக்க நியாயமில்லையென்று சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டது சரியே. டிக்லேரேஷன் பரிகாரத்துடன் 1-ம் பிரதிவாதி செய்திருக்கிற தாவாவை மேல்நடத்தக்கூடாதென்ற இஞ்சங்கிஷன் டிக்கிரீயும் அளிக்கவேண்டுமென்று வாதிகள் இந்தப் பிராதில் கோரிக்கொண்டால் மேற்கூறிய ஆட்சேபனைக்குப் பரியாஸமாகும். அவ்வித இஞ்சங்கிஷன் பரிகாரத்தைக் கோராமலிருந்தது நல்ல யோஜனைதான் (ஏனெனில் அவ்வித இஞ்சங்கிஷனுக்கு வியாஜ்ஜியமூலமே கிடையாது, 1-ம் பிரதிவாதி செய்திருக்கிற தாவாவில் வாதிகள் பார்ட்டிகளாய் சேர்ந்துகொள்ளக் காரணங்களிருந்தும் அதில் நுழைந்துகொள்ள முடியாத காரணத்தாலும் அல்லது வேறெந்தக் காரணத்தாலும் 1-ம் பிரதிவாதியின்பேரில் வாதி இந்த தாவாவில் எவ்விதமான பரிகாரம் தேடிக்கொள்ளத் தகாதென்ற ஸப் ஜட்ஜியவர்கள் தீர்மானித்தது நியாயமாகும்.

வாதிகளின் அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது.

[இதனால் 1-ம் பிரதிவாதி ஸ்வீகாரத்தை ஆட்சேபிக்க ஒரு வியாஜ்ஜியமும் வாதிகள் அதே ஸ்வீகாரத்தை நிஷ்பிரயோஜனமாக்க ஒருவியாஜ்ஜியமும் ஆக ஸ்வீகாரத்தை ரத்து செய்ய இரண்டு கக்ஷிக்காரர்கள் தனித்தனியாய் தாவா செய்ய நேரிட்டது. 1-ம் பிரதிவாதி அனந்தரவாரிஸல்லவென்று தீர்மானிக்கப்பட்டு பிராது தள்ளுபடியானாலும் ஆகலாம். வாதிகள் அந்தத் தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டவர்களாக மாட்டார்கள். ஆகையால் வாதிகள் தனிமையாய் தாவா செய்து ஸ்வீகாரத்தை ரத்து செய்யக் கோரிக்கொண்டிருக்கிறார்கள் இரண்டு வியாஜ்ஜியங்களில் ஸ்வீகாரத்தின் நிலைமை வித்தியாஸமாய்த் தீர்மானிக்கப்பட்டால் அவ்வித சந்தர்ப்பம் எவ்விதமான நிலைமைகளுக்கிடங்கொடுக்குமோவென்று கவனித்துப் பார்க்கவேண்டும். ஸ்வீகாரத்தை ரத்து செய்வதில் வாதிகளும் 1-ம் பிரதிவாதியும் சமமான சிரத்தை உடையவர்களாதலால் அதைப்பற்றிய வியவகாரத்தை இருவரும்ஒற்றுமையாக நடந்துகொண்டால் அனுகூலமாகும். வாதிகள் 1-ம் பிரதிவாதியின் தாவாவில் பார்ட்டிகளாய்ச் சேர்க்கப்படாத காரணம் தெரியவில்லை. இந்தக் கேஸில் ஏற்பட்டிருக்கிற சட்ட பாயிண்டுகள் இரண்டை மட்டும் கவனித்துச்சொல்லவேண்டும். அதாவது ஸி.பி.ஸி. ஆர்டர் 1 - ரூ 10 (2)-ன் கீழ் ஏற்பட்ட உத்தரவுக்கு அப்பீல் முறை உண்டான சந்தர்ப்பம்-விதவையின் ஜீவதசையில் அனந்தரவாரிஸ் பாத்தியதையைப்பற்றி இருவர் போட்டியில் டிக்லேரேஷன் பரிகாரம் தேடக்கூடாதென்ற நியாயம். (ப-ா)] 36, M. L. J. 169.

—o—

பிரிவி கௌன்ஸில் கேஸ்.

மதராஸ் ஹைகோர்ட்டிலிருந்து பிரிவி கௌன்ஸிலுக்குச் செய்யப்பட்ட அப்பீல் தீர்மானம்

P. C. A. 13 of 1917 - 7 நவம்பர் 1918.

ராஜராஜேசுவர துரை

vs

சுந்தரபாண்டியஸ்வாமித் தேவர்

கணவனுடைய சொத்துக்களை அனுபவித்து வருகிற விதவை வருமானத் தொகையை எஸ்டேட்டுடன் ஐக்கியமாகும்படி ஏற்படுத்தலாமென்றும் அப்படி நடந்துகொண்டாளாவென்பது தகராருக்குவரின் அதை நிர்ணயிக்கவேண்டியது ருஜுவாயிண்டாகுமென்றும் அவ்விதமாய் நடந்துகொண்டதாகத் துலங்கினல் வருமான ஐவேஜைக்கொண்டு ஏற்பட்ட எஸ்டேட்டுக்கும் விதவைக்கு வரவேண்டிய வருமான பாக்கித்தொகைக்கும் அனந்தர வாரிஸ்தாரன் பாத்தியங் கொண்டாடத்தக்க வாரிஸாகிறான்.

ஒருவனை காலஞ்சென்ற பார்ட்டியின் ஸ்தானத்தில் வாரிஸாகக் கோர்ட்டார் நியமனம் செய்தால் அதைப்பற்றிய ஆட்சேபனை உடனே செய்யப்படவேண்டும்.

1861-ல் மதுரை ஜில்லா ராமனாதபுரம் ஜமீன்தாரியின் பாத்தியதையைப்பற்றி அப்பீல் வாதியாகிய ராமனாதபுரம் ராஜா அவர்களின் முன்னோர்களுக்கும் பிரதிவாதியின் முன்னோருக்கும் விவாதமாகி ராஜீநாமா பிறந்து ஜமீனைச்சேர்ந்த ஒரு கிராமத்தைமட்டும் பிரதிவாதியின் வம்சத்தார் அடையவேண்டியது மற்ற ஜமீன் சொத்துக்கள் யாவற்றையும் வாதியின் வம்சத்தார்கள் அடைந்து ஜமீனை ஆண்டுவரவேண்டியதென்றும் தவிர பிரதிவாதியின் முன்னோரில் மேற்கூறிய வியவகாரம் நடத்தினவருக்கு வருஷாசலமாக மாதந்தோறும் ஜமீன்தார் ரூ. 700-விகிதம் செலுத்திவரவேண்டுமென்றும் இருதரத்தாராலும் ஒப்பக்கொள்ளப்பட்டிருந்தது.

மேற்கூறிய வருஷாசலத்திற்கு லாயக்குள்ள பிரதிவாதியின் வம்சத்தவர்களில் ஒருவருக்கு நேரான வாரிஸ்தார் இல்லாதபடியால் வாரிஸில்லாமல் மறித்தவருடைய பாரியாள் அவ்வருஷாசலத்தை அடைய லாயக்குள்ளவளாகவும் தன் கணவனுக்கு ஸ்வீகார புத்திரனாக பாத்தியங் கொண்டாடி வந்த நபருடன் சேர்ந்துகொண்டு வெகு காலமாய் பாக்கியில் நின்ற வருஷாசல விகிதத்தை வசூலிக்கும்பொருட்டும் பிந்திய காலத்திற்கும் நிராட்சேபனையாக தங்களுக்கு மாதந்தோறும் வருஷாசல விகிதத்தை ஜமீன்தார் தவறாமல் செலுத்திவரவேண்டுமென்று கோர்ட் மூலமாய் டிக்கிரியடையும்பொருட்டு 1910-ல் ஸ்வீகார புத்திரன் 1-ம் வாதியாகவும் விதவை 2-ம் வாதியாகவும் சேர்ந்து மதுரை ஜில்லா கோர்ட்டில் அசல் தாவா செய்தார்கள். அந்தப் பிராதில் ஸ்வீகாரம் ஊர்ஜிதமாகும்பட்சத்தில் வருஷாசல முன் பாக்கியுடன் 1-ம் வாதிக்கு டிக்கிரியளிக்கவேணுமாகவும் ஸ்வீகாரம் நிலைக்காத பட்சத்தில் விதவையாகிய 2-ம் பிரதிவாதிக்கும் அடுத்த அனந்தரவாரிஸ்தாரனுக்கும் பிராதில் கண்ட பரிகாரத்திற்காக டிக்கிரியளிக்கப்படவேண்டுமென்றும் இருமுறையாக வேண்டிக்கொள்ளப்பட்டது. 1-ம் வாதியின் ஸ்வீகாரம் ஊர்ஜிதப்படாமல் அவனைப் பற்றின மட்டில் பிராது தள்ளுபடியாச்சுது. அவர் அப்பீல் செய்யவில்லை. 2-ம் வாதி 1910-மார்ச்சில் இறந்துபோனாள். அடுத்த அனந்தர வாரிஸ்தாரன் தானாகவே வருஷாசல பாத்தியதையைக் கையாடச் சித்தமில்லாதவராய் சில குடும்பக் காரியங்களை செட்டில்மெண்டு செய்யும் வண்ணமாக சொற்ப பிரதிப்பிரயோஜனத்திற்காக ஜமீனில் அடுத்த வாரிஸாகத் தனக்கேற்பட்ட சிலாக்கியங்கள் யாவற்றையும் 3-ம் வாதியாகிய சுந்தரபாண்டிய துரைஸாமித் தேவருக்கு தஸ்தவேஜின் மூலமாய் மாற்றிக்கொடுத்துவிட்டார். 3-ம் வாதியோ 2-ம் வாதிக்கு அடுத்த அனந்தரவாரிஸ்தாரராகும் மேற்கூறிய தஸ்தவேஜில் 1-ம் பிரதிவாதிக்கு ஜமீனிலிருந்து வரவேண்டியதாக பிராதில் குறிக்கப்பட்ட முன் பாக்கி வருஷாசல தொகையின் பாத்தியதையையும் 3-ம் வாதிக்குச் சேரவேண்டியதென்று கண்டிருந்தது.

3-ம் வாதி மேற்கூறிய பிராதை மேல் நடத்தும்பொருட்டுத் தனக்குக் கிடைத்த வாரிஸ் பாத்தியமே டோவர் பத்திரத்தையிட்டு வியாஜ்ஜியத்தை மேல் நடத்த ஒருவகையான பாத்திய

மிருப்பதாய்ச் சொல்லி 1-ம் வாதியின் ஸ்தானத்தில் தன்னுடைய பெயரை ஷியாருடைய வாரிஸாக ரிகார்டு செய்து வியாஜ்ஜியத்தை மேல் நடத்த அனுமதி கொடுக்கவேண்டுமென்று மனு செய்துகொண்டார். ஜமீன்தாராகிய பிரதிவாதி 3-ம் வாதியின் பாத்திய மேடோவர் பத்திரத்தை மோச நடவடிக்கையென்று ஆட்சேபித்து ஷியாரின் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்று எதிர்வாதம் செய்தார்கள். ஜில்லா கோர்ட்டார் எதிராட்சேபனையை நிராகரித்து 3-ம் வாதியை 1-ம் வாதியின் வாரிஸாக ரிகார்டு செய்து வியாஜ்ஜியத்தை மேல் நடத்த அனுமதி கொடுக்க வாங்கி கேட்டு 2-ம் பிரதிவாதியாகிய ஜமீன்தாரிணிபேரில் மூன் வருஷாசல பாக்கி ரூ. 21,126-க்கும் பிந்திய காலத்திற்குரிய மாச வருஷாசல பாத்தியதைக்குமாக பிராதில் கோறிக்கொள்ளப்பட்ட பிரகாரம் டிக்கிரீ ஏளித்து அதற்காக ஜமீன் சொத்துக்கள் முழுவதிலும் மொத்தமாய் ஹக்கு ஏற்படுத்திவிட்டார்கள்.

அப்பீலில் ஹைகோர்ட்டார் ஜில்லா கோர்ட் தீர்மானத்தைக் காயப்படுத்தி ஆனால் வாதியின் பரிகாரத்திற்கு ஜமீன் சொத்துக்கள் முழுவதிலும் ஹக்கு ஏற்படுத்துவது நியாயமல்லவெனத் தீர்மானித்து யாதொரு குறித்த சொத்துபாகத்தின்மீது வருஷாசல விகிதத்திற்காக ஹக்கு ஏற்படுத்தவேணுமாய் ஜில்லா கோர்ட்டாருக்குக் கட்டளையிட்டார்கள்.

2-ம் பிரதிவாதியாகிய ஜமீன்தாரவர்கள் பிரிவி கௌன்ஸிலில் அப்பீல் செய்ததில் ஹைகோர்ட்டார் செய்த தீர்மானம் காயமாகி பிரிவி கௌன்ஸிலில் அப்பீல் செலவுடன் தள்ளுபடியாச்சுது.

பிரிவி கௌன்ஸில் தீர்மானத்தின் காரணச் சுருக்கமாவது:—

1861-ம் வருஷத்திய இராஜீநாமாவின் சருக்கில் மாசந்தோறும் செலுத்துவரப்படவேண்டிய வருஷாசலமானது அப்பீல் பிரதிவாதியின் வம்சத்தாருக்கென்று குறிக்கப்பட்டிருப்பதை யிட்டு ஒவ்வொரு குடும்பத்தலைவனுக்கும் நேரான வாரிஸ்தாரர்களுக்குமட்டும் அவ்வித வருஷாசலமுண்டென்றும், அதாவது 1861-ல் விவாதத்திற்கு வந்தவருக்கும் அவர் மரித்தபின் அவருடைய வரிசைக்கிரமமான வாரிஸ்களுக்குமென்று வியாக்கியானப்படுத்தி இந்த தாவாவை மேல் நடத்துகிற 3-ம் வாதி நேரான வாரிஸ் வரிசையில் வந்தவரல்லவென்றும் தவிர அடுத்த அனந்தர வாரிஸ்தாரின் பாத்தியதையை மேடோவர் வாங்கிக்கொண்டு அதனால் ஏற்பட்ட பாத்தியதையைக் கொண்டாடுவதாலும் மூலபுருஷனுடைய பாரம்பரை வாரிஸ் வரிசைக்குச் சமீபமான பக்க வரிசைக்காரனுடைய நிலமை வகித்தவராகுமென்றும் ஆகவே ராஜீநாமாவின் வசனங்களுக்குகந்தபடி வருஷாசல விகிதத்திற்குப் பாத்திரரான படிப்படியான வாரிஸ வரிசையில் சேர்ந்தவரல்லவென்றும் முதலாவதாக ஜமீன்தாருக்காக ஆர்கியுமெண்டு செய்யப்படுகிறது. ராஜீநாமாவின் கருத்தை கவனித்தால் இருவகையார் ஜமீன் பாத்தியதையைப்பற்றி விவாதம் செய்து கொண்டபின் அதிக பலமான பாத்தியமுடையவர் ஒரு கிராமத்தை மட்டும் எதிரியின் வம்சத்தாருக்கு ஒப்பிவித்து மிகுதியை தன் வம்சத்தார் பாரம்பரையாக அடைந்து அனுபவிக்கவேண்டியதென்றும் எதிரிக்கு விட்ட கிராமத்தின் அனுபோகத்தைப் போலவே வருஷாசலமாகிய மாதாந்தர விகிதத் தொகையும் அவ்வம்சத்தாருக்குச் செலுத்திவரப்படவேண்டுமென்றும் நேரான தலைவாரிஸானாலும் அல்லது பக்க வரிசையின வாரிஸானாலும் மேற்கண்ட வருஷாசலத்தையும் ஜமீன கிராமத்தையும் அடைந்து அனுபவிக்கவேண்டியதென்றும் இருதரத்தாரும் நோக்கங்கொண்டு ராஜீநாமா ஏற்படுத்திக்கொண்டதாக நிதானிக்கத்தகும். எதிரிக்கு விடப்பட்டிருக்கிற ஜமீன் கிராமத்தின் அனுபோகத்தை ராஜீநாமாவில் வரைந்திருக்கிற வசனங்களைக் கவனித்தால் வாதிகளின் கக்ஷிக்கு பலமான நியாயம் துலங்குகிறது. (அதை யொட்டியே வருஷாசல விகிதத்தின் பாத்தியதையையும் வாதிக்கனுகூலமாகத் தீர்மானிக்கவேண்டியது நியாயமாகும்) ஆதலால் அப்பீல் வாதியின் முதலாவது ஆட்சேபனை பிரயோஜனமில்லையென்று சொல்லவேண்டும்.

உற்பத்தி செய்யத்தகாத ஒரு ஸ்திரமான சம்பந்தத்தையும் சாசுவதமான ஒரு சிலாக்கியத்தையும் உண்டுபண்ணுகிற ராஜீநாமாவின் ஏற்பாடானது சட்ட சம்மதமானதல்லவென்று இரண்டா

வதாக ஆட்சேபிக்கப்படுகிறது. ஜமீன் சொத்துக்களின்மீது ஹக்கு ஏற்பட்ட உடன்படிக்கையாக ராஜீனாமாவின் ஷரத்துகளைக் கவனித்தால் சாசுவதமான ஏற்பாடென்பதால் சட்ட விரோதமென்று ஆட்சேபணைக் கிடங் கொடுக்காது.

3-ம் வாதிக்கு ஏற்பட்டிருக்கிற வருஷாசல பாத்தியதைக்கு ஜமீன் சொத்துக்கள் ஜாமீனாக வேணுமென்று ராஜீனாமாவின் கருத்தாக மகாராஸ் ஹைகோர்ட்டில் ஹானரபில் ஆக்டிங் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் அபிப்பிராயப்பட்டாலும் ஜில்லா ஜட்ஜியவர்களும் ஹானரபில் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்களும் ஜமீன் சொத்துக்களின்மீது ஹக்குண்டாக்கப்பட்டதாகவே ராஜீனாமாவை வியாக்கியானித்திருக்கிறார்கள். அது நியாயமான அபிப்பிராயமாகும். தவிர ஹைகோர்ட்டார் மிகுந்த யூகத்துடன் எதிரியின் சம்மதி பெற்று எதிரிக்கு யாதொரு தீங்கும் சம்பவிக்காதபடிக்கு ஜமீன் சொத்துக்களில் யாதொரு குறித்த பாகத்தின்மீது ஹக்கு ஏற்படுத்தினால் போதுமானதென்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதுவும் ஒப்புக்கொள்ளத் தக்க முறையாகும்.

மூன்றாவதாக 3-ம் வாதி அடுத்த வாரிஸ்தாரனிடத்திலிருந்து மேடோவர் பெற்ற பாத்தியத்தால் இந்த வழக்கின் பரிகாரத்தை அடையக் கோருவதால் அவ்வித தஸ்தவேஜானது மோசக் கருததால் ஏற்பட்டதென்றும் அதற்குப் பிரதிப் பிரயோஜனமே கிடையாதென்றும் பலவிதமாய் செய்யப்பட்ட ஆட்சேபணையை கீழ் கோர்ட்டார் அவமதித்ததுபோல் பிரிவி கௌன்ஸிலாரும் ஒருபொருட்டல்லவென்று சொல்லிவிட்டார்கள்.

அப்பீல் வாதி முக்கியமாய் வாதிக்கிற பின்வரும் பாயிண்டை மட்டும் கவனமாய் யோஜித்துத் தீர்மானங்கொடுக்கவேண்டிய அவசியமாகும். அதாவது 1-ம் வாதிக்குச் சேரவேண்டியதான முன் பாக்கி நின்ற வருஷாசலத் தொகையை 3-ம் வாதி அடைய லாயக்குண்டாவென்று கவனிக்கவேண்டும் 3-ம்வாதி 1-ம்வாதிக்குவாரிஸாக ரிகார்டில் பதிவு செய்யப்பட்டிருப்பதால் 2-ம் வாதிக்குக் கிடைக்கவேண்டிய பரிகாரம் யாவற்றும் 3-ம் வாதிக்குக் கிடைக்கத் தகும். 3-ம் வாதியை வாரிஸாக ரிகார்டு செய்த காலத்தில் அப்பீல் பிரதிவாதி ஆட்சேபித்திருக்கவேண்டும். மேடோவர் தஸ்தவேஜானது மோசநடவடிக்கையென்று ஆட்சேபித்திருக்கவேண்டும். மேடோவர் தஸ்தவேஜானது மோச நடவடிக்கையென்று ஆட்சேபித்தார்களேயொழிய அடுத்த அனந்தரவாரிஸின் பாத்தியதையை மேற்படி தஸ்தவேஜினால் மேடோவர் பெற்று அனந்தர வாரிஸாகக்கூடிய பின் பாத்தியதையை அடையத் தகுமேயொழிய 2-ம் வாதியின் வாரிஸாக மேற்படி யாளுக்குக் கிடைக்கவேண்டிய பரிகாரங்களெவற்றையும் அடையத்தக்க விதமாய் 3-ம் வாதியை 2-ம் வாதிக்கு நேரான வாரிஸாக ரிகார்டில் பதிவு செய்யக் கூடாதென்று அப்பீல் பிரதிவாதி ஆட்சேபிக்கவில்லை. 2-ம் வாதிக்குச் சேரவேண்டிய பாக்கியைப் பெற்றுக்கொண்டு செல்லு ரசீது கொடுக்க 3-ம் வாதி லாயக்குள்ளவரல்லவென்று பிரிவி கௌன்ஸில் அப்பீல் சாரங்கியின் பொழுது வாதிக்கப்படுகிறது. இதற்கு சமாதானமாக ஜீவதசை பாத்தியமுள்ள விதவையின் அனுபோகத்திலிருக்கிற சொத்தின் வருமானத்தைச் சேர்த்து வைத்து கணவனுடைய சொத்துக்களுடன் ஐக்கியப்படுத்தும்படி நடந்துகொள்ளலாமாகையால் அவ்விதமாய் விதவை நடந்துகொண்டாளாவென்று ருஜுவு அம்சத்தினால் தெரிந்துகொண்டு வருமானத் தொகையும் கணவன் சொத்துடன் சேர்ந்ததாக ஏற்பட்டால் அனந்தரவாரிஸுதாரனுக்கு சொத்து வருமானத் தொகையும் அதில் ஏதேனும் வசூலாகாமல் பாக்கி ஏற்பட்டால் அதை முந்திய நடத்தையின ஆதாரத்தால் எஸ்டேட்டுக்குச் சேரவேண்டியதாக அனந்தர வாரிஸ்தாரன் தாவா செய்து வசூலிக்கத் தகும். இந்தக் கேஸில் 3-ம் வாதிக்கு ஏற்பட்ட தஸ்தவேஜில் 2-ம் வாதிக்குச் சேரவேண்டிய முன் பாக்கி நின்ற வருஷாசலத் தொகையுடன் சேர்த்து அடையவேண்டியதென்று சொல்லப்பட்டிருப்பதால் 2-ம் வாதிக்குச் செலுத்தப்பட்டிருக்கிற வருஷாசல விகிதத்தில் ஏதாகிலும் எஸ்டேட்டுடன் சேர்ந்திருக்குமாகில் 3-ம் வாதிக்கு பாக்கி நிற்கும் வருஷாசல விகிதத்தையும் வசூலிக்க பாத்தியமுண்டாகுமென்று சொல்லத்தகும்.

என்றாலும் 3-ம் வாதியை 2-ம் வாதியின் வாரிஸாக தாவாவை மேல் நடத்திப் பரிகாரமடைய கோரின விண்ணப்பத்திற்கு பிரதமத்திலேயே ஆட்சேபணை செய்யப்படாத காரணத்தாலும் அது விஷயமாய் யாதொரு இஷ்யூவும் ஏற்ப

டாக் ஷாணத்தாலும் நூதனமாக பிரிவி கௌன்ஸல் காகிதசாதனத்தை தக்கபடி பண்ணைப்பற்றி விசாரணை செய்ய இடங்கொடுக்கத் தகாது. 2-ம் காரியத்துக்கு வேறு காரணங்களிருந்தால் அவர்களைப் [illegible] சேர்ப்பது நலமென்று சற்று [illegible] போதிக்க சகாயமாகச் சொல்லவேண்டும். இக்கியமான காரணங்களைக் பிரிவி கௌன்ஸில் அப்பீல் செய்வதற்கு தள்ளுபடியாகவேண்டுமென்று மகிமை தங்கிய இந்திய சக்கிரவர்த்தி அவர்களுக்கு சிபார்சு செய்யப்பட்டது 36. M L J. 164

—o—

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & நேபியர் J.

(ராமநாதபுரம் ஜில்லா)

Crl A 707 of 1918 7 ஜனவரி 1919.

காமாட்சிநாதபிள்ளை - எதிரி.

கோர்ட் அமீனா யாதொரு சம்மன் அல்லது நோட்டீஸை குறித்த வாய்தாவுக்குள் ரிட்டர்ன் செய்யாமல் தான் சீக்காக இருந்துவிட்டதாக பொய்யான அத்தாட்சி வாங்கி அனுப்பித் தாமதத்திற்காகத் தனக்கு டி-மு கோர்ட்டார் மன்னிக்க வேண்டுமென்ற கருத்துடன் அந்த அத்தாட்சியை ஆஜர் செய்ததில் அந்த அத்தாட்சி சிருஷ்டிக்க நேரிடுமென்றும் டி-மு கோர்ட்டாரை ஏமாற்றும் பொருட்டு அவ்விதம் ரிகார்டை சிருஷ்டிக்க செய்ததாக இ. பி. கோ. 471-வது பிரிவுகளின்படி குற்றமாகுமென்று தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது

எதிரி திருச்செல் டி-மு கோர்ட்டைச் சேர்ந்த அமீனா அவர் ஒரு சட்டத்தையை குறித்த வாய்தாவில் ரிட்டர்ன் செய்யாமல் தான் 1917 வருஷம் [illegible] முதல் 30வ மட்டும் ஒரு கிராமத்தில் விஷபேதியினால் அவஸ்தைப்பட்டதாயும் இரண்டு கிராமக்கர்ணங்கள் தனக்கு சிகிச்சை செய்த மருந்துகள் கொடுத்ததாயும் சொல்லி தாமதத்திற்குக் காரணம் சொல்லி அவ்விருவருடைய அத்தாட்சி யொப்பத்துடன் ஒரு மகஜர் எழுதி தாக்கல் செய்தார். டி-மு கோர்ட்டார் அதை நம்பாமல் விசாரணை செய்து அதில் கண்ட விஷயம் பொய்யென்று தெரிந்து சிருஷ்டியை யென்னும் குற்றத்துக்காக ராமநாதபுரம் ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்களிடம் கமிட் செய்துவிட்டார்கள்.

ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் எதிரிக்கு 6-மாசக் கடினக் காவல் தண்டனை விதித்தார்கள். ஹைகோர்ட்டுக்கு எதிரி அப்பீல் செய்தார். ஹைகோர்ட்டாருக்கு ஸெஷன்ஸ் கோர்ட்டாருடைய டைரியை (Diary) பரிசீலனை செய்து இந்தக் கேஸில் எதிரியை தண்டித்தது சரியல்லவென்று தீர்மானித்து வைகாவில் ஸெஷன் ஜட்ஜியவர்களின் தீர்ப்பைப் பற்றி ரிவிஷனில் ஏற்றுக்கொண்டு சேட்டப் பைசலளிக்க வேணுமாய் நோட்டீஸ் பிறப்பித்தார்கள். எதிரியின் அப்பீலும் மேற்கூறிய ரிவிஷன் கேஸும் ஒரே காலத்தில் ஏகமாகி இருகக்ஷியின் வாதங்களைக் கேட்ட ஹானரபிள் ஜஸ்டிஸ் சதாசிவய்யரவர்களும் ஜஸ்டிஸ் நேபியர் துரையவர்களும் ஒரே அபிப்பிராயமாக எதிரியின் நடத்தை குற்றமாகுமென்று தீர்மானித்து அசல் கோர்ட்டார் அளித்த தண்டனையைக் காயப்படுத்தினார்கள்.

ஹைகோர்ட் தீர்மானத்தின் முக்கிய காரணங்களாவன:—

அத்தாட்சியில் ஒப்பம் வைத்ததாகச் சொல்லப்பட்ட இரண்டு கர்ணங்களும் எதிரிக்குப் பிரதிகூலமாய் சாட்சி சொல்லுகிறார்கள். தங்களுக்கு எதிரி விஷபேதயில் அவஸ்தைப்பட்டதும் தெரியாதென்றும் தாங்கள் மருந்து கொடுக்கவுமில்லையென்றும் சொல்லுகிறார்கள் எதிரியின் 2வது சாட்சி வேலையை ராஜீநாமா கொடுத்த ஒரு எட்கான்ஸ்டெபில் 10-மாத காலத்திற்குமுன் எதிரி காய்ச்சலில் அவஸ்தைப்பட்டிருந்ததாகச் சொல்லுகிறார். வேறுவிதமான சாட்சியம் கிடையாது ஆகவே எதிரி ஒருவாரமட்டும் சீக்காயிருந்ததாக சொன்ன சமாதானம் சட்டுக்கதை என்பதில் சந்தேகமில்லை ஒரு குற்றத்திலிருந்து தப்பிக் கொள்ளுவதற்காக பொய்யான ரிகார்டுகள் சிருஷ்டியை செய்தால் அது குற்றமாகாதென்று 5-அலகாபாத் 211, 8 அலகபாத் 653 இவைகளில் அபிப்பிராயங் கொடுக்கப்பட்டிருந்தபோதிலும் அந்தக் கேஸுகளின் சந்தர்ப்பங்கள் வேறுகுமென்றும் தவிர அந்தத் தீர்மானத்தின் நியாயம் நேர்மையானதென்று நிச்சயமாய்ச் சொல்ல முடி

யாதி அன்றியும் அதற்கு மாறான அபிப்பிராயங்கள் மற்பல தீர்மானங்களில் ஏற்பட்டிருக்கிறது 11 மதராஸ் 411, 35 கல்கத்தா 45 இவைகளைப் பார்க்கவும்

தவிர 28 மதராஸ் 90 ல் புல்பெஞ்சார் அபிப்பிராயப்படி இந்தக் கேஸில் எதிரி கிருஷ்டனை செய்த அத்தாட்சியானது மோசக்கருத்துடன் ஏற்பட்டதாகவே சொல்லவேண்டும். டி-மூ கோர்ட்டாரை மோசம் செய்யவேண்டி கிருஷ்டனை செய்து உண்மையான அத்தாட்சியாக உபயோகப்படுத்தினதால் எதிரி இ. பி. கோ. 463, 471-வது பிரிவு பிரகாரம் குற்றவாளியாகிறான். இத்தியாதி காரணங்களால் கீழ் கோர்ட்டார் அளித்த தண்டனை காயமாகிறது 36 M. L. J. 201.

—o—

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & ஸ்பென்ஸர்-J.

(தஞ்சாவூர் ஜில்லா)

S. A. 1401 & 1402 of 1917 - 25 ஸெப்டம்பர் 1918.

வெங்கட்ராமசிவன்

vs

இந்தியசக்ரவர்த்தியாரவர்கள்.

ஸர்வமானியமாக கிராண்டு அளிக்கப்பட்ட கிராமத்தில் புறம்போக்குள்பட என்ற வசனம் கிராண்டில் காணப்பட்டிருந்தாலும் கிராமத்தாருடைய பொதுவான உபயோகத்திற்குரியதான ஸ்மசானம், கோவில் நிலம், மேடு நிலம், களம் முதலிய சிலவகையான புறம்போக்குகளும் கிராண்டில் சேர்ந்ததாக மதிக்கப்படாதென்றும் அவ்விதமான பொது நிலங்களை கவர்ன்மெண்டார் கிராமத்தாருக்கு டிரஸ்டியாக சுவாதீன பாத்தியங் கொண்டாடத் தகுந்தவர்களாகையால் கிராமத்தை கிராண்டு பெற்றவருடைய சொந்தப் பிரயோஜனத்திற்காக அவ்வித புறம்போக்கு நிலங்களை அனுபவிக்கவிடக்கூடாதென்று தீர்மான அபிப்பிராயம் கொடுக்கப்பட்டது. 21, M. L. J. 31-ம், 24 M. L. J. 36-ம் அதாரிடிகளாகக் குறித்துக் காட்டப்பட்டது.

கும்பகோணம்தாலூகா வலங்கிமானைச்சேர்ந்த கோவிந்தபுரம் என்னும் கிராமத்தை முழுவதையும் 1801-ல் பிரதாபசிங் ராஜா சாகிப் என்ற தஞ்சை மஹாராஜா அவர்களால் இனாமாக கிராண்டு அளிக்கப்பட்டது. 1905-ம் வருஷத்தில் III-ஆக்ஷேபனை பைசல் நெ. 301-க்கு சரியான ஸர்வே நெ. 151-ல் உள்ள புறம்போக்கு நிலத்தின் அனுபோகம் கிராமத்தாருடைய வம்ச பாரம்பரையைச் சேர்ந்த வாதி வகையறாக்களிடமிருந்து கவர்ன்மெண்டாரால் அபஹரித்துக்கொள்ளப்பட்டது. அதன்பேரில் வாதி வகையறாக்கள் 1914-ல் வலங்கிமான் டி-மூ கோர்ட்டில் தாவா செய்து அந்த நிலத்தின் சுவாதீனத்தைத் திருப்பிக்கொள்ளுவதற்காகவும் அந்த நிலத்திலுள்ள விருக்ஷங்களை வெட்டிக்கொண்டதால் ஏற்பட்ட நஷ்டத்திற்காகவும் கவர்ன்மெண்டுக்குப் பிரதிநிதியாகிய இந்தியசக்ரவர்த்தியின் பேரில் டிக்ரீயளிக்கப்படவேண்டுமெனப் பிரார்த்தித்தனர்.

டி-மூ கோர்ட்டாரும் அப்பீலில் கும்பகோணம் சப்கோர்ட்டாரும் ஒரே அபிப்பிராயமாக தாவா புறம்போக்கின் பாத்தியதை கிராண்டில் சேர்க்கப்பட்டதாக மதிக்கப்படாதென்றும் சொல்லி வாதியின் பிராதை டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலிலும் கவர்ன்மெண்டாருடைய சுவாதீன பாத்தியதையை ஒப்புக்கொண்டு 2-வது அப்பீலை வாதிகளுக்கு விரோதமாய்ப் பைசலளித்துவிட்டார்கள்.

ஹைகோர்ட் தீர்ப்பின் காரணச் சுருக்கமாவது:—

இந்தக் கேஸில் அசல் கிராண்டு சீட்டு அகப்படவில்லை. 1865 ல் இனாம் கமிஷனரவர்கள் இனாம்தாரின் பாத்தியதையை அங்கீகரித்து E-ஆதாரமாய் தாகலாகியிருக்கிற இனாம் கிராண்டு சீட்டைக் கொடுத்திருக்கிறார்கள். அதில் கோவிந்தபுரம் கிராமத்திலடங்கியதாக 84 ஏகர் புஞ்சை நிலங்களும் 216 ஏகர் நஞ்சை நிலங்களும் 54 ஏகர் தோட்ட நிலங்களும் என்ற விவர ஜாபிதாவில் புறம்போக்கு நிலங்களல்லாது என்று கண்டிருக்கிறது. இங்கிலீஷில் Besides Peremboke என்று கண்டிருக்கிறது. (Besides என்றால் தவிர என்றும் உள்பட என்றும் அர்த்தங்கொள்

224706

வேண்டும். நீங்கலாக வென்ற கருத்துடன் உபயோகப்பட்ட ஆங்கிலேய வசனமல்ல) வாதியவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டதாகச் சொல்லப்பட்ட புறம்போக்கு நிலமானது ருத்ரபூமி என்று வழங்கும் சூத்திரர்களின் பிரேதங்களை ஸம்ஸ்காரம் செய்யும் நிலபாகம் என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலபாகத்தை வாதிகளின் சுவாதீனத்திலிருந்து கவர்ன்மெண்டார் அபஹரித்துக் கொண்டுவிட்டார்கள். இவ்வகையான புறம்போக்கு நிலமானது ஆதியில் ஏற்பட்ட கிராண்டில் புறம்போக்கு நிலங்களுடன் Besides Peremboke என்ற பதத்திலடங்கியதாவென்று தீர்மானிக்கவேண்டியது நமது கடமையாகும்.

ஒவ்வொரு கேஸிலும் கிராண்டளித்த சந்தர்ப்பங்களையும் ஏற்படும் ருஜுவாதாரங்களையும் கவனித்துப் பார்த்து கிராண்டுகளில் குறிக்கப்படும் இவ்விதமான வசனங்களின் கருத்தின் அளவை வியாக்கியானப்படுத்தவேண்டுமென்று 37 மதராஸ் 366-ல் ஹானரபில் ஜஸ்டிஸ் பென்ஸன் துரையவர்களும் ஜஸ்டிஸ் சுந்தரய்யரவர்களும் விளம்பியிருக்கிறார்கள். அந்தக் கேஸில் ஒரு நீரோடையின் அடி நிலத்தின் பாத்தியதையைப் பற்றி கவர்ன்மெண்டாருக்கும் இனாம்தாருக்கும் தகரார் வந்த தாவா நீரோடை பெரியதல்லவென்றும் கவர்ன்மெண்டாரால் பரிபாலிக்கப்பட்டுவரும் பாசன மார்க்கத்திற்கும் ஏற்பாடுகளுக்கும் தாவா ஓடைக்கும் யாதொரு சம்பந்தமும் காணப்படாததாலும் கவர்ன்மெண்டார் கிராண்டு செய்த காலத்தில் அளித்த நிலபாகத்தைத் திரும்பியடைய மனமில்லாதவர்களென்று பரிஷ்காரமாய்ச் சொல்லத் தகுமதலாலும் தாவா ஓடை நிலத்தை இனாம்தாருக்குச் சொந்தமானதென்றே நிர்ணயித்துவிட்டார்கள். அதாவது தாவா ஓடையை மற்ற புறம்போக்கு நிலங்களுடன் இனாம்தாருக்கு அளிக்கப்பட்ட கிராண்டில் சேர்ந்த நிலமென்று தீர்மானித்தார்கள். அதே தீர்மானத்தில் 24, M L. J. 36-ன் நியாயத்தை ஒத்துக்கொண்டவர்களாய் புறம்போக்கு நிலங்களுண்டென்று கிராண்டில் கண்ட மாத்திரத்திலேயே இனாம்தாருக்கு சகலவிதமான புறம்போக்கு நிலங்களின் ஆதீன பாத்தியதையையும் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொண்டதாகச் சொல்லக்கூடாதென்று விளம்பியிருக்கிறார்கள்.

கிராம விஸ்தீரண விவரத்தில் சேர்க்கப்பட்டதாயினும் கிராண்டில் விலக்கப்படாத போதிலும் கவர்ன்மெண்டார் ஊழிய இனாம் கிராண்டளிக்கும்பொழுது கிராமத்தாருக்குப் பொதுவாய் அனுபோகத்திற்குவேண்டியதான நெல்களம், ரஸ்தா, கோவில் நிலங்கள், ஸ்மசானம், மேய்ச்சல் நிலங்கள் முதலியவைகளையும் கிராண்டில் சேர்த்து இனாம்தாருக்குச் சொந்த அனுபோகத்திற்குக் கொடுத்துவிட்டதாகச் சொல்லக்கூடாதென்று 24, M. L. J. 36-ல் சொல்லப்பட்டிருக்கிறது.

கோவிந்தபுரம் கிராமத்தில் இனாம் ரெஜிஸ்டர் ஏற்பட்ட காலத்தில் 86-ம் சில்லரை ஏகர் நிலங்கள் புறம்போக்கென்று குறிக்கப்பட்டு அதனடியில் 44-ம் சில்லரை ஏகர் நிலங்கள் வீடு மனைகளும் மனைப் புழக்கடைகளுமென்றும் மற்றவைகள் நடைபாதை, ரஸ்தாக்கள், கால்வாய், அடி நிலங்கள், குளங்கள், ஆறுகள் கோவில் நிலங்கள், சுடுகாடு நிலங்கள் என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. இப்பவும் ரஸ்தாக்களும் நடைபாதைகளும் 1-84-ம் வருஷத்திய 5-வது ஆக்டின்படி கவர்ன்மெண்டாரால் லோகல் பண்டு போர்ட்டாருடைய பரிபாலனத்திற்கும் ஆதீனத்திற்கும் ஒப்புவிக்கப்பட்டன. ஆறுகள், ஓடைகள் முதலிய நீர்ப்பாசன நிலபாகங்கள் கவர்ன்மெண்டாருக்குச் சொந்தமானவையென்றே 24, M L. J. 36-ல் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

நீர்ப்பாசன சாதனங்களைச் செய்துவரவேண்டிய கடமை கவர்ன்மெண்டாரைச் சேர்ந்ததாகுமாதலால் அதைச் சார்ந்த நிலங்களும் கவர்ன்மெண்டாருடையதென்று சொல்லப்பட்டிருக்கிறது.

கடைசியாக கோவில் நிலங்களும் சுடுகாடு நிலங்களும், நெல் களம், கால் நடை மேய்ச்சல் நிலங்கள் ஒப்படைக்கப்படாத மனைக்கட்டுகள் மனைப் புழக்கடைகள் ஆகிய நிலபாகங்கள் பொது ஜனங்களுக்கு டிரஸ்டியாகிய கவர்ன்மெண்டாருடைய ஆதீனத்திலிருக்கவேண்டியதாகும். அவ்வித நிலபாகங்களை கவர்ன்மெண்டார் யாதாமொருவனுடைய சொந்த உபயோகத்திற்காக இனாம் கிராண்டில் சேர்த்துக்கொடுத்து விட்டால் கவர்ன்மெண்டார் டிரஸ்டியின் நிலைமையைக்கெடுத்து

காழ்மைப்படுத்திக்கொள்ளுகிறார் என்று சொல்லவேண்டும். பொது ஜனங்களுக்கு டிரஸ்டியாகிற கவர்ன்மெண்டாரே சர்வ நீர்ப்பாசனத்திற்காக ஷை நிலபாகங்களின் ஆதீன பாத்தியதையை வகித்து வருகிறார்கள். கவர்ன்மெண்டார் தங்களுக்குரிய பாத்தியதையை அதாவது பொது ஜனங்களுக்கு மேற்கூறிய நிலபாகத்தின் விஷயமாய் டிரஸ்டியாகிற பாத்தியதையை இனாம்தாருக்கு மாற்றிக்கொடுத்து விடவில்லையென்றாலும் அவ்விதமாய் மாற்றிக்கொடுத்துவிட்டதாய் தெளிவான ருஜூ அகப்படாத பட்சத்தில் கவர்ன்மெண்டார் தங்கள் டிரஸ்டி பாத்தியதைக்கு விரோதமாய் நடந்துகொண்டதாக அனுமானித்து இனாம் கிராண்டில் ருத்ராபூமி முதலான ஜன பொதுவான நிலபாகத்தையும் சேர்த்து இனாம்தாருக்குக் கொடுத்துவிட்டதாகத் தீர்மானிக்கக் கூடாதென்று சொல்லி வாதியின் 2வது அப்பீலைச் செலவுடன் தள்ளும்படி செய்துவிட்டார்கள். இந்தக் கேஸில் காலாவதி பாயிண்டைப்பற்றித் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கத் தேவையில்லாமற்போச்சுது. 36 M L. J. 203

—o—

ஜஸ்டிஸ் ஷயிலிங் & கிருஷ்ணன் - J.

(திருநெல்வேலி ஜில்லா)

C.M.A. 174 of 1918-27 நவம்பர் 1918.

வெங்கடஸாமி நாயகர் vs சிவானு முதலி

அதிகார வரம்புக்கு வெளியிலுள்ளதாயும் இதமான கோர்ட்டுகளிலுள்ள நம்பர்கள் மாற்றப்பட்டுப் பைசல் செய்யும்பொருட்டு ஏற்பட்டிருக்கிற டி-மு கோர்ட்டில் பிறந்த டிக்கிரீயை ஷை கோர்ட்டானது எடுபட்டுப் போகாதிருக்கும்பட்சத்தில் ஷை தாவாவைப் பிடித்துப் பைசல் செய்ய அதிகார வரம்புள்ள கோர்ட்டார் தங்கள் கோர்ட்டில் பிறந்த டிக்கிரீயாக மதித்து நிறைவேற்றும் நடவடிக்கைகளை நடத்தக்கூடாதென்றும் டிக்கிரீயளித்த கோர்ட்டார் டிக்கிரீயை ஸி.பி.ஸி 24 அல்லது 39-வது பிரிவுகளின்படி டிக்கிரீயை மாற்றினால் மட்டும் மாற்றப்பட்ட டிக்கிரீயை நிறைவேற்ற அதிகாரமுண்டென்றும் காலாவதி ஆக்டின் பிரயோகத்திலிருந்து விலகிக்கும் வண்ணமாக யாதொரு டிக்கிரீயை நிறைவேற்றும்பொருட்டு மாற்றக்கூடாதென்றும் இந்த சில்லரை மனு அப்பீலில் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

திருநெல்வேலி ஜில்லா கோவில்பட்டி டி-மு கோர்ட்டாருடைய அதிகார வரம்புக்குள்ளடங்கிய யாதொரு நம்பரானது திருநெல்வேலி சப் டி-மு கோர்ட்டில் பைசல் செய்யப்பட்டு டிக்கிரீயுமளிக்கப்பட்டது. அந்த டிக்கிரீயை வாதி கோவில்பட்டி டி-மு கோர்ட்டில் நிறைவேற்றுவதற்காக மனுக்கொடுத்ததில் டி-மு கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளாமல் டிக்கிரீயளித்த கோர்ட்டாரால் டிக்கிரீயானது நிறைவேற்றுவதற்காக டிரான்ஸ்பர் உத்தரவின்பேரில் மாற்றப்படவேண்டுமென்று சொல்லி மனுவை டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். அதன்பேரில் வாதி ஜில்லா கோர்ட்டில் அப்பீல் செய்ததில் ஜில்லா கோர்ட்டார் கோவில்பட்டி டி-மு கோர்ட்டாருடைய தீர்மானத்தை ஒப்புக்கொள்ளாமல் டிக்கிரீயளித்த டி-மு கோர்ட்டாருடைய டிரான்ஸ்பர் உத்தரவில்லாமலே வாதிக்கு டிக்கிரீயளிக்க அதிகார வரம்புடைய கோவில்பட்டி டி-மு கோர்ட்டார் வாதி வெளி ஜில்லாவில் பெற்ற டிக்கிரீயை நிறைவேற்ற அனுமதி கொடுக்கலாமென்றும் அப்படிக்கு டிரான்ஸ்பர் உத்தரவு அவசியமில்லையென்றும் இந்த அப்பீல் வழக்கில் டி-மு கோர்ட்டாருக்குக் கட்டளையிடுகிற அனுமதி உத்தரவை டிக்கிரீயின் டிரான்ஸ்பராக மதிக்கலாமென்று அபிப்பிராயப்பட்டார்கள். ஹைகோர்ட்டார் ஜில்லா கோர்ட் தீர்மானம் சட்ட விரோதமென்று சொல்லி டி-மு கோர்ட்டாருடைய உத்தரவைக் காயம்படுத்தினார்கள். ஹைகோர்ட் தீர்ப்பின் காரணச் சுருக்கமாவது:-

வாதி கோவில்பட்டி டி-மு கோர்ட்டில் நிறைவேற்றும் மனு கொடுத்த காலத்தில் டிக்கிரீயளித்த கோர்ட்டானது மூடப்படவில்லை. அதற்காக ஏற்பட்டிருந்த அதிகார வரம்பு நீக்கப்படவுமில்லை. தாங்கள் அளித்த டிக்கிரீயை நிறைவேற்றத்தக்க அதிகார வரம்பு எடுபட்டுப்போகவில்லை. அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் வாதி கோவில்பட்டி டி-மு கோர்ட்டில் நிறைவேற்று மனுதாகல்

X. மூலபுருஷன் இரண்டு குமாரத்திகளுக்காக எழுதி வைத்த உயில் சாஸனத்தில் ஸ்பஷ்டமான விநியோக முறை ஏற்படாதபோதிலும் கோர்ட்டார் உயில் முழுவதையும் படித்து கர்த்தாவின் கருத்தை நிதானித்து விநியோக முறையைப்பற்றித் தீர்மானங் கொடுக்கத் தகுமென்று சொல்லப்பட்டது. ... 58

XI. அடமானத்தை மீட்கும்பொருட்டு கணக்குக் கேட்டதற்கு பத்திரத்தில் கண்ட பிரகாரம் தானே சொத்துக்கு ஸ்வதந்தரவாளியாகிவிட்டதாக விடை கொடுத்தபோதிலும் பின்னால் கடனை வசூலிக்க தாவா செய்யலாமென்றும், மேற்கூறிய விடையின் அம்சம் தடையாகாதென்றும், விடைகொடுத்த முதல் வட்டி இடையாதென்ற வாதம் பிரயோஜனமில்லையென்றும் சொல்லப்பட்டது. ... 59

XII. ஸி.பி.ஸி. ஆர்டர் 23-ரூல் 1-ன் படி உவித்டிரா விண்ணப்பத்தில் மறு தாவா செய்ய அனுமதி கேட்டும் உவித்டிரா செய்ய அனுமதி கொடுத்ததாக உத்தரவின் வசனம் ஏற்பட்டாலும் விண்ணப்பத்தின் கோரிக்கையையும் உத்தரவையும் சேர்த்துப்படித்து மறு தாவா அனுமதியும் கொடுக்கப்பட்டதாக வியாக்கியானப்படுத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ... 61

XIII. குடும்பத்தலைவன் எழுதிக்கொடுத்த நோட்டுக்கடன் குடும்பக் கடனல்லவென்று ஆட்சேபித்தால், ருஜூபாரம் வாதியைச் சேர்ந்ததாயினும் எதிரிகள் சம்மன் பெற்றும் குடும்பக் கணக்குகளை ஆஜர்படுத்தாதபடியால் கணக்குகள் வாதிக்கனுகூலமென்று அனுமானித்து ருஜூபாரத்தை மாற்றி வாதி பக்கம் சாட்சியம்சமில்லாத போதிலும் பிரதிவாதிகளின் சாட்சி பலக்குறைவால் வாதிக்கு டிக்கிரீயளிக்கப்பட்டது. ... 62

XIV. குடும்பத் தலைவன் அந்நியர்களுடன் பங்கு சேர்ந்து கூட்டுவியாபாரம் செய்து வரும்பொழுது குடும்பத்தை விட்டுப்பிரிந்து மற்ற சொத்துக்களின் பாகத்தைப் பிரித்துக்கொண்ட விபக்தன் ஷை கூட்டு வியாபாரத்தில் தனக்கும் பங்குவேண்டுமானால் குடும்பத் தலைவர்மீது பாக வியாஜ்ஜியம் போடவேண்டுமேயொழிய கூட்டு வியாபாரத்தைக் குளோஸ் செய்து கணக்குப் பார்த்துத் தன் விகிதத்தை அடையக் கோருவது முறையல்ல. ... 63

XV. நிறைவேறாத விவாக உடன்படிக்கையை அனுஸரித்துச் செலுத்தப்பட்ட பரிசு தொகையின் அட்வான்ஸை வாபிஸ் அடையக் கோரினதில் இருதாரத்தாரும் தாவா உடன்படிக்கை சட்ட விரோதமென்ற கட்சியை வாதம் செய்த கேஸ். ... 65

XVI. வாதியின்பேரில் ஒரேவிதமான எதிர்வாதம் செய்தவர்களுக்கும் யாதொரு விவாதம் இல்லாதிருக்க அந்த வியாஜ்ஜியத்தில் ஏற்பட்ட தீர்மானம் பின்னால் அவ்விருவருக்குள் ஏற்படும் வழக்குகளுக்குத் தடையாகமாட்டாதென்று சொல்லப்பட்டது. ... 67

XVII. பிரிட்டிஷ் இலாகாவுக்கு வெளியில் எழுதிக்கொடுக்கப்பட்ட பிராமிஸரி நோட்டின்மீது இந்திய சட்ட முறைப்படி செலுத்தவேண்டிய ஸ்டாம்புத் தொகை செலுத்தாமலே பிரிட்டிஷ் இந்திய கோர்ட்டுகளில் தாவா செய்யலாம். ... 71

XVIII. தகப்பனைப்பெற்ற பாட்டியாரின் சுவாட்சணையிலிருந்த மைனரின் சொத்துக்களை கோர்ட்டாரால் கார்டியனாக நியமிக்கப்பட்ட தாயாரின் வசம் ஒப்பிவிக்கும்படி உத்தரவளித்தது சரியே. பாட்டியாருக்கு ஷை சொத்தில் ஹக்கிருந்தால் அசல் தாவா செய்துகொள்ளவேண்டும். ... 71

XIX. கடன் மொல்லையில் அவஸ்தைப்படுகிற வியாபாரி சரக்குகளை ஒரு பாக்கிதாரனுக்கு விக்கிரயம் செய்துகொடுத்து அவனுக்குறிய கடன்போக மிகுதியைக் கொண்டு வியாபாரத்தை மேல் நடத்தின நடவடிக்கை மதராஸ் இன்ஸால்வென்ஸி ஆக்டு 56-வது பிரிவின் கருத்தில் ஆட்சேபிக்கத்தக்க நடத்தையல்ல. 72

XX. அனுமதியன்னியில் சொத்து மானேஜ்மெண்டு செய்து வருகிறவர் கணக்குக் கொடுக்கவேண்டிய கடமையல்ல. வசூலிக்கும் தொகையை உரியவர்களுக்குச் செலுத்திவிடவேண்டும். மகம்மதிய வாரிஸ்தார்கள் தங்கள் தங்கள் விகிதத்திற்காகத் தனித்தனியான வியாஜ்ஜிய மூலத்தைக் காட்டித் தனித்தனியான தாவா செய்யவேண்டும். 74

XXI. கடனாளி தன் சொத்துக்களை ஒருவனுக்கு விக்கிரயமாக எழுதி வைத்தமையால் பாக்கிதார்களில் ஒருவன் அந்த விக்கிரயத்தை பவந்தமென்றும் கடனாளியின் நடத்தை மாகாண இன்ஸால் வென்ஸி ஆக்டு 4 (b)-வது பிரிவின் கருத்தில் பாக்கிதார்களை மோசப்படுத்த ஏற்பட்டதென்றும் ஆகவே அவனை இன்ஸால்வெண்டாகத் தீர்மானிக்க மனுக்கொடுத்தும் விக்கிரயம் பவந்தமானதால் அதை யிட்டு பாக்கிதார்களுக்கு யாதொரு கெடுதியுமில்லையென்று மனு தள்ளுபடியாச்சுது. 76

XXII. டிக்கிரியான தொகையில் ஒரு பாகத்தைப் பெற்றுக்கொண்டவர் அதை செல்லுவைக்காமல் பூராத் தொகைக்கும் நிறைவேற்றும் நடவடிக்கை துவக்கின தேதியிலேயே எதிரிக்கு நஷ்டப்பரிகார தாவா செய்ய வியாஜ்ஜிய மூலம் ஏற்பட்டு விடுகிறது. 77

XXIII. ஸி.பி ஸி ஆர்டர் 1-ரூல்-10-ன்படி பிராதில் சேர்க்கப்பட்ட ஒரு பிரதிவாதியின்பேரில் பரிகாரமளிக்கத்தகாதென்று அவருடைய பெயரை நீக்கின உத்தரவானது ஒரு டிக்கிரியாகும். அப்பீல் முறையுண்டு. விதவையின் ஜீவ்ய தசையில் இருவர் அனந்தரவாரிஸ் பாத்தியதையைப்பற்றி போட்டியாகவந்து ஸ்பெஸிபிக் ரிலீவ் ஆக்டு 42-வது பிரிவின்படி டிக்லேரேஷன் தாவா செய்ய கோர்ட்டார் இடங்கொடுக்கக்கூடாது. 79

XXIV. காலஞ்சென்ற பார்ட்டிககு வாரீஸ் நியமனம் செய்ததைப்பற்றிய ஆட்சேபனைகள் உடனே செய்யப்படவேண்டும்,

ஜீவ்யதசை பாத்தியமுடைய விதவை அனுபவிக்கிற சொத்து வருமானத்தில் யாதொரு பாகத்தை எஸ்டேட்டுடன் ஐக்கியமாகும்படி பந்தோபஸ்து செய்ததாக ருஜுவானால் அனந்தர வாரிஸ்தாரனுக்கு ஷெ யாள் அனுபவித்து வரும் சொத்து வருமான பாக்கித்தொகைக்கு உறியவனாகிறான் 82

XXV. கோர்ட் அமீனா தான் சீக்காக இருந்ததாய் பொய்யான அத்தாட்சியை தாகல் செய்து அக்காலத்தில் செய்து முடிக்கவேண்டிய வேலையைத் தாமதத்திற்காக மன்னிக்கக் கோரினதில் மோசக்கருத்துடன் தாகல் செய்த பொய்யான அத்தாட்சி சிருஷ்டனை செய்தது இ-பி-கோ-468-474-வது பிரிவின்படி குற்றமாகும். ... 85

XXVI. சர்வமானியமாக கிராண்டளிக்கப்பட்டு அதில் புரம்போக்குடன் என்று சேர்த்திருந்தபோதிலும் கிராமப் பொதுஜனங்களுக்காக சுடுகாடு, மேய்ச்சல் நிலம், கோவில் நிலம் இவைகளும் சேர்ந்து இனாம்தாருடைய சொந்த உபயோகத்திற்கு விடப்பட்டதாகச் சொல்லக்கூடாது. சவர்ன்மெண்டார் ஜனங்களுடைய டிரஸ்டியாக அவ்வித நிலங்களுடைய ஆதீனக்காரராகும். 86

XXVII. இதரமான கோர்ட் நம்பர் பாக்கிகளைத் தீர்க்கும்பொருட்டு ஏற்பட்ட அடிஷனல் கோர்ட்டுகள் கலையாமலும் அவைகளுக் கேற்பட்ட அதிகார வரம்பும் நீங்காமலுமிருக்க அந்தக் கோர்ட் டிக்கிரீயை மாற்றின பிறகுதான் சாதாரணமான அதிகார வரம்புடைய கோர்ட்டார் டிக்கிரீயை நிறைவேற்றலாம். 88